# KAUAI'S HINDU MONASTERY OF AMERICA

By

NAME : SHANMUGAM BASKARAN

REGISTRATION NUMBER : EU/IS/2008/AC/67

INDEX NUMBER : CS 3467

The Dissertation submitted for the partial fulfillment of the requirements for the Degree of Bachelor of Arts (Special) in Department of Hindu Civilization in the Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.

Department of Hindu civilization
Faculty of Arts And Culture
Eastern University, Sri Lanka
2014

# அமெரிக்க காவாய் இந்து ஆதீனம்

பெயர் : சண்முகம் பாஸ்கரன்
பதிவு இலக்கம் : EU/IS/2008/AC/67
சுட்டெண் : CS 3467

*இவ்வாய்வானது இந்து நாகரிகத் துறை சிறப்புக் கலைமாணிப் பட்டத்தின் ஒரு பகுதியினை நிறைவு செய்யும் பொருட்டு கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.*

இந்து நாகரிகத் துறை
கலைகலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
2014

இந்துநாகரிகத் துறை
கலைகலாசாரபீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
2014

## உறுதியுரை

"**அமெரிக்க காவாய் இந்து ஆதீனம்**" எனும் தலைப்பில் என்னால் சமர்பிக்கப்பட்ட இவ் ஆய்வானது எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் ஏதாவதொரு பட்டத்திற்காக அல்லது தகைமைச் சான்றிதழுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட எந்தவிடயத்தையும் கொண்டிருக்கவில்லை எனவும், எனது நம்பிக்கைக்கும் அறிவுக்கும் எட்டியவரையில் உரியமுறையில் இங்கு வெளிப்படுத்தப்பட்டவாறன்றி, வேறெவராலும் முன்னர் எழுதப்பட்ட அல்லது பிரசுரிக்கப்பட்ட எந்த விடயத்தையும் இவ்வாய்வு கொண்டிருக்கவில்லை என்றும் உறுதி கூறுகின்றேன்.

.....................................................
திரு. சண்முகம் பாஸ்கரன்

இவ் ஆய்வானது கலைமாணிப் பட்டத்திற்கான ஒருபகுதி தேவையினை நிறைவு செய்யும் பொருட்டு பரீட்சகரின் மதிப்பீட்டிற்காகச் சமர்ப்பிக்க அனுமதி பெற்றது.

.....................................................
மேற்பார்வையாளர்
திருமதி எஸ். கேசவன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
இந்துநாகரிகத் துறை
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
திகதி.......................................

.....................................................
துறைத் தலைவர்
திருமதி எஸ். கேசவன்
இந்துநாகரிகத் துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை
திகதி.......................................

Department of Hindu civilization
Faculty of Arts and Culture
Eastern University, Sri Lanka
2014

# Declaration

I hereby declare that the dissertation entitled "**Kauai's Hindu Monastery of America**" submitted by me is a bonafield and that it has not been submitted to any other University for the award of any other Degree or Diploma.


...................................................
Mr. Shanmugam Baskaran

It is hereby recommended that the dissertation may be placed before the examiners for evaluation.


...................................................
SUPERVISOR
MRS. S.KESAVAN
SENIOR LECTURER
DEPARTMENT OF HINDU CIVILIZATION
FACULTY OF ARTS & CULTURE
EASTERN UNIVERSITY OF SRILANKA
DATE......................................

...................................................
HEAD
MRS. S.KESAVAN
DEPARTMENT OF HINDU CIVILIZATION
FACULTY OF ARTS & CULTURE
EASTERN UNIVERSITY OF SRILANKA
DATE......................................

ஆய்வுப் பிரதேசம்




அமெரிக்க காவாய் இந்து ஆதீனம்



# ஆய்வுச்சுருக்கம்

“மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்” என்ற வாசகத்தினை சுதேச இந்துக்களாகிய நாங்கள் கடவுள் துதி பாடும் சந்தர்ப்பத்தில் வாயளவில் மாத்திரமே கூறுகின்றோம். ஆனால் இந்து சமயத்துடன் நேரடியாகத் தொடர்புபடாத மேலைத்தேசத்தவர்களினால் இந்துப் பாரம்பரியமானது சிறந்த முறையில் கடைப்பிடிக்கப்பட்டும், பரப்பப்பட்டும் வருகின்றது.

ஈழத்து சித்தர் மரபையும், சைவ சித்தாந்த தத்துவ நெறியையும் அத்தோடு இந்து கலாசாரத்தையும் அமெரிக்காவின் ஹவாய் தீவில் இருந்து இயங்கி வருகின்ற ஹவாய் இந்து ஆதீனமானது சிறந்த முறையில் பாதுகாத்தும் வளர்த்தும் வருவதோடு இந்து சமயத்தில் கூறப்படும் துறவு நெறியே உண்மை ஞானத்தினை அடைவதற்குரிய வழி என்ற உண்மையை உணர்ந்த துறவிகளை உலகளாவிய ரீதியில் இணைத்து சிறப்பான முறையில் முன்னேறிக்கொண்டு வருகின்றது. “**அமெரிக்க காவாய் இந்து ஆதீனம்**” எனும் தலைப்பில் அமைந்த இந்த ஆய்வானது ஹவாய் இந்து ஆதீனத்தின் பாராட்டுதற்கரிய செயற்பாடுகளையும், நிர்வாக அமைப்புகளையும் எடுத்துக்காட்டி இதனூடாக இந்து சமூகத்தினை சனாதன தர்மத்தின் பாதையில் செல்லத் தூண்டும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாய்வானது ஐந்து அத்தியாயங்களைக் கொண்டிருக்கின்றது. முதலாவது அத்தியாயமானது ஆய்வு பற்றிய அறிமுகமாக காணப்படும் அதேவேளை இரண்டாவது அத்தியாயம் மேலைத்தேசத்தவர்களினால் காலனித்துவ காலக்கட்டத்தில் இந்து சமயத்திற்கு ஆற்றப்பட்ட மிக முக்கியமானதும் இந்து இலக்கியம் சார்ந்ததுமான பணிகளைப் பற்றி ஆய்வுத் தலைப்பிலிருந்து ஆராயப்படுவதாக காணப்படுகின்றது. மேலும் மூன்றாவது அத்தியாயத்தில் ஆய்வுப் பிரதேசமான ஹவாய் இந்து ஆதீனத்தின் இந்து சமய சார்ந்த பணிகளும், சமூகப்பணிகளும், ஏனைய ஆதீனம் சார்ந்த செயற்பாடுகளும் ஆராயப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து நான்காவது அத்தியாயத்தில்

ஆதீன துறவிகள் ஒவ்வொருவரினதும் கடமைகள் மற்றும் செயற்பாட்டின் ஊடாகவே முழு ஆதீன நிர்வாக செயற்பாடுகளும் நிகழ்கின்றன என்பது ஆராயப்பட்டுள்ளன. தொடர்ந்து ஐந்தாவது அத்தியாயமானது ஆய்வின் மூலம் பெறப்பட்ட விடயங்களைத் தொகுத்து நிறைவுரையாக கூறுவதாக அமையப்பெற்றுள்ளது. இவ்வகையில் இவ்வாய்வானது அமெரிக்காவில் உள்ள ஹவாய் இந்து ஆதீனத்தின் இந்து சமயப் பணிகளை வெளிக்கொணர்வதாகக் காணப்படுவதோடு அதன் ஊடாக இந்து சமூகத்திற்கு இந்து சமயத்தின் உலகளாவிய செல்வாக்கினை தெரியப் படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

~ ஆய்வாளர்

# நன்றியுரை

கிழக்குப் பல்கலைக்கழக கலைகலாசார பீடத்தின் இந்து நாகரிகத் துறையில் இந்து நாகரிக சிறப்புக்கற்கை நெறியின் ஒரு பகுதியை நிறைவு செய்யும் பொருட்டு **"அமெரிக்க காவாய் இந்து ஆதீனம்"** எனும் இவ்வாய்வினை மேற்கொள்வதற்கு பலர் பல வழிகளில் உதவி புரிந்துள்ளனர். அவர்களில் மிக முக்கியமாக எனது பெற்றோரான திரு.திருமதி.சண்முகம் கலைச்செல்வி அவர்களுக்கும், எனது மூத்த சகோதரரான ச.சுரேஸ்குமார் அவர்களுக்கும் முதற்கண் நன்றியினை தெறிவித்துக் கொள்கின்றேன்.

எனது ஆய்வுக் கட்டுரையின் தலைப்பினைத் தெரிவு செய்யவும், அதனை ஏற்றுக் கொண்டு எனது ஆய்வினைச் சிறப்பாகத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு அனுமதி மற்றும் ஆலோசனை வழங்கியும், இவ்வாய்விற்கு வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும் இருந்து, தவறுகளைச் சுட்டிக்காட்டியும் இவ்வாய்னை மேற்கொள்ள பெரிதும் உதவிய இவ்வாய்விற்குரிய மேற்பார்வையாளரும், இந்துநாகரிகத் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான திருமதி சாந்தி கேசவன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல அறிவுரைகளை அவ்வப்போது வழங்கியும், ஆய்வின் போது ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்தும், வேண்டிய போது இவ்வாய்விற்கான அத்தியாயத் தலைப்புக்களை பாகுபடுத்தி தந்தும், சிரமத்தை பாராது ஆலோசனைகளை வழங்கி உதவி புரிந்த சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ச.முகுந்தன் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இவ்வாய்விற்கு ஆலோசனைகளை வழங்கிய விரிவுரையாளர் திரு. நா.வாமன் அவர்களுக்கும், தகைசார் ஒய்வு நிலைப் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களுக்கும், தென் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. ந.சுபராஜ் அவர்களுக்கும், அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவரான ஆறு.திருமுருகன் அவர்களுக்கும், மட்/கரடியனாறு மஹா வித்தியாலயத்தின்

ஆசிரியரான திரு. வ.குணபாலசிங்கம் அவர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன் தரவுகளை மொழிபெயர்ப்பு செய்வதற்கு உதவிய நண்பர்களான பெ.கஜன்குமார், சு.டசினா, உ.டினேஸ்குமார் ஆகியோருக்கும், எனது ஆய்வினைப் பூர்த்தி செய்வதற்கு பல வழிகளில் உதவிய யு.ஹார்த்திகாயினி, க.செல்வகுமார், ம.மதிபன் ஆகியோருக்கும், எனது சகோதரர்களான ச.மேகராஜா, ச.கவிதா ஆகியோர்களுக்கும், மற்றும் என்னை ஆர்வமூட்டிய ஏனைய நண்பர்களுக்கும், ஆய்வுத் தரவுகளை இணையதளத்தின் மூலமாக பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகளை ஏற்படுத்தியிருந்த ஹவாய் இந்து ஆதீனத்தினருக்கும், நூல் வடிவம் கொடுத்த அச்சகத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

~ ஆய்வாளர்

# சுருக்க விளக்கம்

| | |
|---|---|
| 1. ப. | பக்கம் |
| 2. பக். | பக்கங்கள் |
| 3. மு.கூ.நூ | முற் கூறப்பட்ட நூல் |
| 4. கி.மு | கிறிஸ்துவிற்கு முன் |
| 5. கி.பி | கிறிஸ்துவிற்குப் பின் |
| 6. மு.ப | முற்பகல் |
| 7. பி.ப | பிற்பகல் |
| 8. P. | Page |
| 9. PP. | Pages |
| 10. Ibid | Ibidem (in the same place) |
| 11. Op.cit | opere citato (in the work cited) |
| 12. Viol | Volume |
| 13. Dr. | Doctor |
| 14. BA | Bachelor of Arts |

# பொருளடக்கம்


**விடயம்** **பக்கம்**

ஆய்வுப் பிரதேசம் ...... vi

ஆய்வுச்சுருக்கம் ...... vii

நன்றியுரை ...... ix

சுருக்க விளக்கம் ...... xi

பொருளடக்கம் ...... xiii

## அத்தியாயம் : ஒன்று
### ஆய்வுப் பொது அறிமுகம்

*1.1* ஆய்வுத் தலைப்பு ...... 3

*1.2* ஆய்வு அறிமுகம் ...... 3

*1.3* ஆய்வின் நோக்கங்கள் ...... 5

*1.3.1* பிரதான நோக்கம் ...... 5

*1.3.2* துணை நோக்கங்கள் ...... 5

*1.4* ஆய்வுப் பிரச்சினை ...... 6

*1.5* ஆய்வின் வரையறை ...... 5

*1.6* ஆய்வு முறையியல் ...... 7

*1.6.1* முதலாம் நிலைத் தரவுகள் (Primary sources) ...... 7

*1.6.2* இரண்டாம் நிலைத் தரவுகள் (Secondary sources) ...... 7

*1.6.3* மூன்றாம் நிலைத் தரவுகள் (Tertiary sources) ...... 8

*1.7* ஆய்வு முன்னோடிகள் ...... 8

*1.7.1* நூல்கள் ...... 8

*1.7.2* சஞ்சிகைகள் ...... 9

*1.7.3* ஆவணக் காணொளிகள் ...... 9

*1.7.4* இணையதளங்கள் ...... 9

*1.8* ஆய்வுப் பகுப்பு ...... 12

## அத்தியாயம் : இரண்டு
### இந்து சமயமும் மேலைத்தேசத்தவர்களும்


*2.0* அத்தியாய அறிமுகம் ........................................17
*2.1* இந்து சமயமும் மேலைத்தேசத்தவர்களின் காலனித்துவமும் ........................................20
*2.1.1* ஆசியியற் கழகம் (The Asiatic Society) ........................................23
*2.1.1.1* வில்லியம் ஜோன்ஸ் (William Jones) ........................................26
*2.1.1.2* சார்ள்ஸ் வில்கின்ஸ் (Charles Wilkins) ........................................28
*2.1.1.3* எச்.எச்.வில்சன (H.H wilson) ........................................28
*2.1.1.4* கோல்புறுக் (Colebrook) ........................................28
*2.1.1.5* ஜோன் சோ (John Shore) ........................................29
*2.1.2* கிழக்கத்திய புனித நூல்கள் (The Sacred Books of the East) ........................................29
*2.1.2.1* மக்ஸ்முல்லர் (Max Muller) ........................................30
*2.1.2.2* ஜோர்ஜ் பெலர் (George Buhler) ........................................35
*2.1.2.3* ஜோர்ஜ் திபாட் (George Thibaut) ........................................36
*2.1.2.4* ஜூலியஸ் எஜலிங் (Julius Eggeling) ........................................36
*2.1.2.5* ஹேர்மன் ஓல்டன்பெர்க் (Hermann Oldenberg) ........................................37
*2.1.2.6* மோரிஸ் புளூம்பீல்ட் (Maurice Bloomfield) ........................................37
*2.1.2.7* கஷிநாத் ட்ரிம்பக் டெலங் (Kashinath Trimbak Telang) ........................................38
*2.1.2.8* ஜூலியஸ் ஜொலி (Julius Jolly) ........................................38
*2.2* மேலைத்தேசத்தவர்களின் இன்றைய இந்து ஆச்சிரமங்கள் ........................................39
*2.2.1* சுவாமி கீதானந்த ஆச்சிரமம் (Svami Gitananda Ashram) ........................................41
*2.2.2* திவ்விய லோகா ஆச்சிரமம் (Divya Loka Ashram of Russia) ........................................42
*2.2.3* பக்தி வேதாந்த ஆச்சிரமம் (The Bhaktivedanta Ashram) ........................................43
*2.2.4* ஆக்ரா இந்து ஆச்சிரமம் (The Hindu Monastery of Accra) ........................................44


## அத்தியாயம் : மூன்று
### அமெரிக்க காவாய் இந்து ஆதீனம்


*3.0* அத்தியாய அறிமுகம் ........................................49
*3.1* ஆதீன அமைவிடம் ........................................50
*3.2* ஆதீனத்தின் தோற்றமும் வளர்ச்சியும் ........................................51
*3.2.1* ஆன்மீக பரம்பரை (Spiritual Lineage) ........................................52

3.2.2 கடவுள் இந்து ஆலயம் (Kadavul Hindu Temple) ............................54
3.2.3 இறைவன் கோயில் (Iraivan Temple)...............................................56
3.2.4 ஆலயத்தினுடைய புனித தோட்டம் (Sacred Temple Gardens) .......58
3.2.5 மினி மேலா காட்சிக்கூடமும் நூலகமும்.........................................60
3.2.6 ஆதீனத்தின் பகுதியமைப்புக்கள் .....................................................62
3.2.6.1 வெளியீடுகளுக்கான நிறுவகம் (Himalayan Academy)............62
3.2.6.1.1 சஞ்சிகையின் வெளியீடு .................................................63
3.2.6.1.2 நூல்களின் வெளியீடு ....................................................63
3.2.6.1.3 கற்பித்தல் செயற்பாடுகள்...............................................67
3.2.6.1.4 தொழிநுட்ப ஆவணங்கள்...............................................69
3.2.6.1.5 இணையதளச் செயற்பாடுகள்......................................... 70
3.2.6.2 பொது சேவை அற நிதியம் (Hindu Heritage Endowment) ....70
3.2.6.3 சைவ சித்தாந்த திருச்சபை (Saiva Siddhanta Church)...............72


## அத்தியாயம் : நான்கு

### காவாய் இந்து ஆதீன வளர்ச்சியில் துறவிகளின் வகிபங்கு


4.0 அத்தியாய அறிமுகம் ................................................................75
4.1 சற்குருக்கள்.................................................................................78
4.1.1 சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமி...........................................79
4.1.2 சற்குரு போதிநாத வேலன் சுவாமி.............................................83
4.2 பரமாச்சாரியர்கள் .........................................................................84
4.2.1 பரமாச்சாரிய சதாசிவாநந்த பழனி சுவாமி.................................85
4.2.2 பரமாச்சாரிய சிவானந்த சேயோன் சுவாமி.................................85
4.3 ஆச்சாரியர்கள்..............................................................................86
4.3.1 ஆச்சாரிய குமார்நாத சுவாமி ......................................................86
4.3.2 ஆச்சாரிய ஆறுமுகநாத சுவாமி....................................................87
4.4 சந்நியாசிகள்.................................................................................87
4.4.1 சந்நியாசின் முருகநாத சுவாமி.....................................................87
4.4.2 சந்நியாசின் பிரமநாத சுவாமி.......................................................88
4.4.3 சந்நியாசின் சண்முகநாத சுவாமி .................................................89
4.4.4 சந்நியாசின் சரவணநாத சுவாமி...................................................89
4.4.5 சந்நியாசின் யோகிநாத சுவாமி ....................................................90

*4.4.6 சந்நியாசின் செந்தில்நாத சுவாமி*......91
*4.4.7 சந்நியாசின் சித்தநாத சுவாமி*......91
*4.4.8 சந்நியாசின் கைவல்யநாத சுவாமி*......92
*4.5 சாதகர்கள்*......92
*4.5.1 சாதக ஹரநந்திநாதா*......94
*4.5.2 சாதக ஆதிநாதா*......94
*4.5.3 சாதக நீலகந்தநாதா*......95
*4.5.4 சாதக தெஜதேவநாதா*......95
*4.5.5 சாதக நந்திநாதா*......96
*4.5.6 சாதக ராஜநாதா*......96
*4.5.7 சாதக மயுரநாதா*......97
*4.5.8 சாதக ஜெயநாதா*......97
*4.5.9 சாதக தயாநாதா*......98

## அத்தியாயம் : ஐந்து
### நிறைவுரை

*நிறைவுரை*......101
*உசாத்துணைகள்*......103
*பின்னிணைப்புக்கள்*......109
*அட்டவணைகள்*......109
*நிழற்படங்கள்*......119
*வரைபடங்கள்*......125

# அத்தியாயம் : ஒன்று

## ஆய்வுப் பொது அறிமுகம்

# ஆய்வுப் பொது அறிமுகம்

## 1.1 ஆய்வுத் தலைப்பு

"அமெரிக்க காவாய் இந்து ஆதீனம்"

## 1.2 ஆய்வு அறிமுகம்

"**சனாதன தர்மம்**" என சிறப்பிக்கப்படும் இந்து சமயமானது மிக நீண்டதொரு வரலாற்றினைக் கொண்டு காணப்படுவதோடு மனித வாழ்க்கைக்குத் தேவையான கலை தத்துவம் அறிவியல் அறவியல் விரதங்கள் கிரியைகள் அரசியல் பொருளியல் உள்ளிட்ட அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கமாக கொண்டும் காணப்படுகின்றது. அவ்வாறிருக்க இந்தியாவில் தோன்றியதாகக் கூறப்படும் இந்து சமயமானது இன்று உலகம் முழுவதும் உள்ள பல நாடுகளில் வியாபித்திருப்பதனை காணக்கூடியதாக உள்ளது.

வரலாற்றாதாரங்களின் அடிப்படையில் பார்த்தோமானால் மேலை நாட்டைச் சேர்ந்த குறிப்பாக பாரசீகர்கள் மற்றும் ஐரோப்பியர்கள் சிலரது செயற்பாடுகள் இந்து சமயத்தினை பாதிப்பிற்கு உள்ளாக்கக் கூடியதாக இருந்தாலும் மக்ஸ் முல்லர் (Max Mullar), வில்லியம் ஜோன்ஸ் (William Jones), எச்.எச்.வில்சன் (H.H wilson), A.A. மக்டொனால் (A.A. Macdonell), T.H. க்ரிபித் (T.H. Griffith), போன்ற பலரது செயற்பாடுகளும் இந்து சமயமானது பல்வேறு பரிணாமங்களை தன் வளர்ச்சிப் பாதையில் சந்தித்ததற்கும் இன்றைய இயந்திர உலகின் இந்து சமய நிலையிருப்பிற்கும் அடிப்படையாக இருந்தது என்றால் அது மிகையாகாது.

இவர்களுள் வில்லியம் ஜோன்ஸ் (William Jones), மக்ஸ்முல்லர் (Max Muller) ஆகியோர் அவர்களின் சிறந்த செயற்பாடுகளின் காரணத்தினால் இந்து சமயத்தில் பெரிதும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டியவர்களாகக்

காணப்படுகின்றனர். இவர்கள் பணத்திற்காகவோ அல்லது புகழுக்காகவோ அல்லது மத மாற்றச் செயலுக்காகவோ இந்து சமயம் சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்ளவில்லை மாறாக இவர்கள் இந்து சமயத்தினையும்,சமஸ்கிருத மொழியையும் நேசித்தே தமது இந்து சமயம் சார்ந்த பணிகளை மேற்கொண்டனர்.

இவ்வாறிருக்க தற்காலத்தில் உலகில் பல்வேறு நாடுகளில் இந்து சமய சுதேசிகள் தவிர்ந்த ஏனையவர்களால் குழுவாகவும் தனித்தும் இந்து சமயம் பின்பற்றப்பட்டும் வளர்க்கப்பட்டும் வருகின்றமையினையும் காணக்கூடியதாக உள்ளது. அந்தவகையில் எடுத்துக்காட்டுகளாக அமெரிக்காவில் இயங்கி வருகின்ற காவாய் இந்து ஆதீனம் (Kauai's Hindu Monastery), கானா நாட்டில் சுவாமி கானானந்த ஸரஸ்வதி என்பவரால் நடாத்தப்பட்டு வரும் ஆச்சிரமம் (The Hindu Monastery of Africa, Accra) சோவியத் ரஸ்யாவிலே காணப்படும் திவ்விய லோகா ஆச்சிரமம் (Divya Loka Ashram of Russia) அமெரிக்காவில் காணப்படுகின்ற பக்தி வேதாந்த ஆச்சிரமம் (The Bhaktivedanta Ashram) இத்தாலியில் உள்ள சுவாமி கீதானந்த ஆச்சிரமம் (Svami Gitananda Ashram) போன்றவற்றை சிறப்பாக கூற முடியும்.

அந்தவகையில் அமெரிக்காவில் 1970ஆம் ஆண்டு சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமி (Satguru Sivaya Subramuniyaswami) என்பவரால் உருவாக்கப்பட்டு இன்றும் சிறப்பாக இயங்கி வருகின்ற **காவாய் இந்து ஆதீனமானது** (Kauai's Hindu Monastery) இந்து சமயத்திற்கு அளப்பரிய சேவைகளை மேற்கொண்டு வருகின்றது. இந்த ஆதீனம் மேலைத்தேசத்தவர்களால் நிறுவப்பட்டது. எனினும் இப்பொழுது மலேசியா சிங்கப்பூர் இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து தமிழர்களும் சந்நியாசிகளாக உள்ளனர். இவர்களுக்கு சமஸ்கிருத மொழியில் பயிற்சி அளிக்கப்பட்டு அன்றாட சமயச் சடங்குகளை செய்கின்றனர். முக்கியமான திருவிழாக்களுக்கு ஆதீனத்துக்கு சிவாச்சாரியர்கள் வரவழைக்கப்படுகின்றனர். இவ்வாதீனமானது இந்துக் கோயில்களை அமைத்தும், இந்து சமயச் சிந்தனைகளை பிரச்சாரம் செய்தும், இந்து சமயம் சார்ந்த நூல்களை வெளியிட்டும், நூலகங்களை அமைத்தும், இந்துக் கலைகளை வளர்த்தும், இந்து சடங்கு சம்பிரதாயங்களை பயன்படுத்தியும் பாதுகாத்தும் வருவதோடு இந்துக் கல்வியினையும் கற்பித்து வருகின்றது.

இவ் ஆதீனத்தில் பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்குதாரர்களாக இருந்து இந்து சமயக் கொள்கைகளை உலகிற்கு வெளிப்படுத்தி வருகின்றனர். அவற்றில் மிக முக்கியமாக இருவர் தெய்வ நிலையில் வைத்துப் போற்றப்பட்டு வருகின்றனர்.

அந்தவகையில் இவ்வாதீனத்தினை உருவாக்கிய யாழ்ப்பாணத்தின் யோகர் சுவாமிகளின் சீடரான சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமி (Satguru Sivaya Subramuniyaswami) எனும் அமெரிக்கரும் தற்சமயம் இவ்வாதீனத்தினை வழிநடத்தி வருகின்ற சற்குரு போதிநாத வேலன் சுவாமி (Satguru Bodhinatha Veylanswami) என்பவரும் சிறந்த இந்து சமயம் சார்ந்த செயற் திட்டங்கள் மூலமாக முழு உலகத்தையும் ஈர்த்துள்ளனர் என்றால் அது மிகையாகாது.

அந்தவகையில் இந்து சமயமானது உலகளாவிய ரீதியில் வெளிப்பட அமெரிக்காவில் உள்ள காவாய் இந்து ஆதீனத்தின் (Kauai's Hindu Monastery) உதவியை எவ்வாறு பெற்றது என்பதனையும், அதன் விளைவால் இந்துப் பண்பாடானது எவ்வாறான நிலைக்கு சென்றுள்ளது என்பது பற்றியும் இந்து சமூகத்திற்கு வெளிப்படுத்துவதாக இவ் ஆய்வு அமைகின்றது.

## 1.3 ஆய்வின் நோக்கங்கள்

எந்தவொரு ஆய்வும் மேற்கொள்ளப்படுவதற்கு பல நோக்கங்கள் காணப்படுகின்றன. தவறுகளற்ற வகையிலும், பொருத்தமான வகையிலும் தேவையான தரவுகளைப் பெறுவதற்கு ஆய்வு நோக்கமானது அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. இவ்வகையில் இவ்வாய்வானது மேல்வரும் நோக்கங்களிற்காக மேற்கொள்ளப்படுகின்றது.

### 1.3.1 பிரதான நோக்கம்

- அமெரிக்காவில் அமையப்பெற்றும் மேனாட்டவர்களின் தலைமையில் இயங்கியும் வருகின்ற **காவாய் இந்து ஆதீனம்** (Kauai's Hindu Monastery) குறித்து இதுவரை எதுவித ஆய்வுகளும் தமிழில் வெளிவரவில்லை. இந்நிலையில் இந்நிறுவனம் பற்றிய தகவல்களை சமூகத்திற்கு வழங்குவதையே இவ் ஆய்வு பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 1.3.2 துணை நோக்கங்கள்

- காவாய் இந்து ஆதீனம் (Kauai's Hindu Monastery) பற்றியும் அவர்களால் இந்து சமயம் சார்ந்து முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற செயற்பாடுகளையும் ஆவணப்படுத்துதல்.

- இந்து சமயத்தில் காணப்படும் சிறப்புக்களை அறிந்து அந்நிய நாட்டார் அதனை உள்வாங்கி சிறந்த முறையில் பின்பற்றி வருவதனை இந்து சமூகத்திற்கு விளக்குவதன் மூலமாக சுதேச இந்துக்களின் சமயம் மீதுள்ள அசமந்தப் போக்கினை உணரச் செய்தல்.

- இந்து சமய பண்பாடானது மேனாட்டவர்களினால் உள்வாங்கப்பட்டு பின்பு அவர்களால் வெளிப்படுத்தப்படுகின்ற பொழுது இந்துப்பண்பாட்டில் நிகழ்கின்ற மாற்றங்களை கண்டறிந்து சுதேச இந்துப் பண்பாட்டுடன் ஒப்பிட்டு ஆராய்தல்.

## 1.4 ஆய்வுப் பிரச்சினை

ஆய்வாளனுக்கு குறித்த விடயம் தொடர்பான ஐயப்பாட்டினைத் தூண்டுகின்ற ஒன்றாகவும் குறித்த ஆய்வின்போது சிறந்த விபரங்களைப் பெறுவதற்கு யார்? என்ன? எப்படி? எங்கே? ஏன்? போன்ற வினாக்களை எழுப்புவதன் மூலம் ஆய்வுப் பிரச்சினைக்கான பரப்பை எல்லைப்படுத்த முடியும். அந்தவகையில் இவ்வாய்விற்குரிய பிரச்சினைகளாக மேல்வருவன முன்வைக்கப்படுகின்றன.

இன்றைய விஞ்ஞான உலகிலே இந்து சமய சுதேசிகள் பெரும்பாலும் தமது இந்துப் பண்பாட்டினை விட்டு விலகிச் செல்வதற்கான காரணம் என்ன? அந்நிய மக்கள் இந்துப் பண்பாட்டினை நாடி வருவதற்கான காரணம் என்ன? இந்துப் பண்பாட்டிற்குள் அந்நியர்களின் வருகை இந்துப் பண்பாட்டின் வளர்ச்சி நிலைக்கு ஏதுவாக அமைகிறதா? அல்லது வீழ்ச்சி நிலைக்கு ஏதுவாக அமைகிறதா? அந்நியர்களிடம் சென்ற இந்துப் பண்பாடானது எவ்வாறு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது? இந்துப் பண்பாடானது தன் நிலையிருப்பை தக்க வைத்துக் கொள்வதற்காக எவ்வாறான சவால்களை எதிர் நோக்கி வருகின்றது? அதனால் என்னென்ன மாற்றங்களை இந்துப் பண்பாடு சந்தித்துள்ளது? போன்ற பல்வேறு பிரச்சினைகள் காவாய் இந்து ஆதீனத்தை மையப்படுத்தி இவ்வாய்வில் அடையாளப்படுத்தப்படுகின்றன.

## 1.5 ஆய்வின் வரையறை

ஆய்வின் வரையறையானது ஆய்வு தொடர்பான மட்டுப்படுத்தல்களை குறிக்கின்றது. அந்த வகையில் இவ் ஆய்வானது மேல்வருமாறு வௌ;வேறு வழிகளில் வரையறைக்கு உட்படுத்தப்படுகின்றது.

- ❖ இவ்வாய்வானது காவாய் இந்து ஆதீனத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளதால் இவ்வாதீனத்தினையும், இவ்வாதீனத்துடன் தொடர்பு பட்ட விடயங்களையும் மட்டுப்படுத்தியதாகவே காணப்படுகின்றது.

- ❖ குறித்த விடயத்தினை மட்டும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதாவது "இந்து சமய வளர்ச்சியில் அமெரிக்காவிலுள்ள **காவாய் இந்து ஆதீனத்தின் வகிபங்கு**" என்ற விடயம் மட்டுமே கருத்தில் கொள்ளப்படுகின்றது.

## *1.6 ஆய்வு முறையியல்*

ஆய்வு மாதிரி ஒன்றிற்கு எல்லா வகையிலும் பொருத்தமுள்ளதாக உபயோகிக்கப்படுவதே ஆய்வு முறையியலாகும். ஆய்வுக்கான வடிவமைப்பு, ஆய்வுக்கான தரவு மூலங்கள் பயன்படுத்தப் பட்டுள்ள தரவுகளின் வகைகள் ஆய்வுக்கான தரவு சேகரிக்கும் முறை, பகுப்பாய்வு முறைகள் மற்றும் பகுப்பாய்வு முறையின் பொருத்தப்பாடு ஆகிய விடயங்கள் உள்ளடங்கியுள்ளன. அந்தவகையில் விவரண ஆய்வாக அமையும் இவ்வாய்விலே முதலாம் நிலைத்தரவுகள் இரண்டாம் நிலைத்தரவுகள் மூன்றாம் நிலைத்தரவுகள் எனும் மூன்று மூலங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### *1.6.1 முதலாம் நிலைத் தரவுகள்* (Primary sources)

இவ்வாய்வின் முதலாம் நிலைத் தரவாக நேர்காணல் மூலம் தகவல்கள் பெறப்பட்டன. பல நாடுகளுக்குச் சென்று இந்து சமய சொற்பொழிவுகளை நடாத்தும் யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த தற்போதைய அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவரான திருமுருகன் என்பவருடன் நேர்காணல் மூலம் தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

### *1.6.2 இரண்டாம் நிலைத் தரவுகள்* (Secondary sources)

இரண்டாம் நிலைத் தரவுகளாக ஆய்வுத் தலைப்பைச் சார்ந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்களில் வெளிவந்த கட்டுரைகளும் ஆவணக் காணொளிகளும் (documentary videos) இணையத்தளங்களும் (official websites and others) பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 1.6.3 மூன்றாம் நிலைத் தரவுகள் (Tertiary sources)

இவ்வாய்விலே மூன்றாம் நிலைத் தரவுகளாக கலைக்கலைஞ்சியங்களும், வரைபடங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 1.7 ஆய்வு முன்னோடிகள்

### 1.7.1 நூல்கள்

**All about Kauai Hindu Monastery**, 2008, Himalayan Academy, USA -- இந் நூலிலே ஹவாய் இந்து ஆதீனம் எவ்வாறு தோன்றியது? தோற்றுவித்தவர் யார்? இது எங்கு அமைந்துள்ளது? இதன் இந்து சமயம் சார்ந்த செயற்பாடுகள் என்ன? எவ்வாறு இந்த ஆதீனம் வழிநடத்தப்பட்டு வருகின்றது? போன்ற வினாக்களுக்கு சிறந்த பதில்களை உள்ளடக்கியுள்ளது.

Satguru Bodhinatha Veylanswami, 2009, **GURUDEVA'S Spiritual Visions**, Himalayan Academy, USA -- இந் நூலானது காவாய் இந்து ஆதீனத்தினை உருவாக்கியவரான சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமி (Satguru Sivaya Subramuniyaswami) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை கூறுவதாக அமைகின்றது.

Satguru Bodhinatha Veylanswami, 2005, **Gurudeva's Toolbox for a Spiritual Life**, Himalayan Academy, USA -- இந் நூலிலே சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமி (Satguru Sivaya Subramuniyaswami) அவர்களால் முன் வைக்கப்பட்ட நற்சிந்தனைகளும், இந்து சமயம் சார்ந்த செயற்பாடுகளும், அவருடைய அரும்பெரும் பணிகளும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

இரா.இராஜசேகரன் **2003 சைவப் பெருவெளியில் காலம்**, நர்மதா பதிப்பகம் சென்னை 600017 -- இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவ சமய சான்றோர்கள் பலரைப் பற்றி இந்நூல் விபரிக்கின்றது. அதில் ஒருவராக சிவாய சுப்பிரமுனிய சுவாமியை "**அமெரிக்காவில் சிவம் பரப்பிய அற்புத முனிவர் (1927)**" எனும் தலைப்பில் போற்றி பல செய்திகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

சுபராஜ்.ந, **2012, இந்து மதமும் மேற்கத்தையவர்களின் ஆய்வுகளும்**, அறிவகம், கிளிவெட்டி திருமலை -- இந்து சமயம் தொடர்பாக ஆய்வுகளை

மேற் கொண்ட மேலை நாட்டைச் சேர்ந்த அறிஞர்களையும் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளையும் அவ்வாய்வின் முக்கியத்துவத்தினையும் இந்நூல் சிறப்பாகவும் ஆதார பூர்வமாகவும் விளக்கிக் கூறுகின்றது.

### 1.7.2 சஞ்சிகைகள்

சற்குரு சிவாய சுப்ரமுனிய சுவாமி, சற்குரு போதிநாத வேலன் சுவாமி, 1979-2014 'Hindusim Today' -- இச் சஞ்சிகையானது காவாய் இந்து ஆதீனத்தினால் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படும் சஞ்சிகையாகும். இச் சஞ்சிகையில் காவாய் இந்து ஆதீனம் பற்றிய செயற்பாடுகளும் உலகில் பல இடங்களில் நிகழும் இந்து சமயம் சார்ந்த செய்திகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

சுபராஜ்.ந, 2014, **இந்துமத இலக்கியங்கள் தொடர்பான ஆய்விலே ஆசியவியற் கழகத்தின் (The Asiatic Society) வகிபங்கு**, பண்பாடு, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு - 04 – ஆசியவியற் கழகத்தின் ஊடாக வில்லியம் ஜோன்ஸ் (William Jones), எச்.எச்.வில்சன் (H.Hwilson), சாள்ஸ் வில்கின்ஸ் (Charles Wilkins), கோல்புறுக் (Colebrook), ஜோன் சோர் (Jhon Shore) போன்றோர் எவ்வாறான இந்து சமய இலக்கியம் சார்ந்த ஆய்வுப் பணிகளை மேற்கொண்டுள்ளனர் என்பதனை சிறப்பாக இந்நூல் விளக்குகின்றது.

கங்கா, 2011, **சுற்றுலாவுக்கு பேர் போன ஹவாய் தீவு**, கலைக்கேசரி -- ஹவாய் தீவின் கண்டுபிடிப்பு, புவியியல் அமைவிடம், சுற்றுலாத் தளங்கள் பற்றியும் சிறப்பாக இக் கட்டுரை பேசுவதோடு அங்கு காணப்படுகின்ற இந்து ஆலயம் பற்றிய தகவல்களையும் விளக்கி கூறுகின்றது.

நந்தினி.மா, 2012, **காவிரி ஆற்று வண்டல்..ஓலை அளவு**, ஆனந்த விகடன் -- காவாய் இந்து ஆதீன சிவாலயத்தின் கருவறையில் காணப்படும் ஐம்பொன்னால் செய்யப்பட்ட சிவலிங்கத்தினைப் பற்றிய செய்தியைக் கூறுகின்றது.

### 1.7.3 ஆவணக் காணொளிகள்

காவாய் இந்து ஆதீனத்தினால் அவர்களது உத்தியோகபூர்வ (official) இணையத்தில் தங்களது ஆதீனத்தின் வரலாறு, செயற்பாடுகள், மேலும் இந்து சமயம் சார்ந்ததுமான நூற்றுக் கணக்கான ஆவணக் காணொளிகளை தரவேற்றம் செய்துள்ளனர். அவைகள் இவ்வாய்விற்கு சிறந்த முன்னோடியாகத்

திகழும். available at http://www.himalayanacademy.com/site/search/media_type/video/description/monastery.

**Hindusim Today** எனும் சஞ்சிகையினுடைய YouTube பக்கத்திலே **Hinduism Today Magazine** எனும் தலைப்பில் காவாய் இந்து ஆதீனம் முதன்மைப்படுத்தப்பட்டு உலகில் நிகழும் இந்து சமயம் சார்ந்த விடயங்கள் ஆவணக் காணொளிகளாக உருவாக்கப்பட்டு தரவேற்றம் செய்யப்பட்டுள்ளன. available at http://www.youtube.com/profile?user=HinduismTodayVideos

2012, **Hinduism in Ghana, The Hindu Monastery of Africa**, Accra, available at http://www.youtube.com/watch?v=2Zq-3A4xnxs&feature=youtube_gdata_player **--** இவ்வாவணக் காணொளியானது மேற்கு ஆபிரிக்க நாடான கானா (GHANA) நாட்டின் தலைநகரான அக்ராவில் (ACCRA) அமைந்துள்ள இந்து ஆலயத்தினையும், அங்கு நிகழும் நிகழ்வுகளையும், இவ்வாலயத்தினை உருவாக்கியவரான சுவாமி கானானந்த ஸரஸ்வதியினைப் பற்றியும் தெளிவு படுத்துவதாக அமைந்துள்ளது.

### *1.7.4 இணையதளங்கள்*

https://www.himalayanacademy.com **--** இந்த இணையதளமானது அமெரிக்காவின் காவாய் இந்து ஆதீனத்தின் உத்தியோகபூர்வ (official) இணையதளமாகும். இத்தளத்திலே காணப்படும் அனைத்து விடயங்களும் காவாய் இந்து ஆதீனத்தினை மையப்படுத்தியதாகவே காணப்படுகின்றன.

http://www.hinduismtoday.com **--** காவாய் இந்து ஆதீனத்தின் உறுப்பினர்களால் வெளியிடப்படும் **Hindusim Today** எனும் சஞ்சிகையினுடைய உத்தியோகபூர்வ (official website) இணையதளமாகும். இவ் இணையதளத்தில் **Hindusim Today** சஞ்சிகையினை இலத்திரனியல் (PDF) வடிவில் பெற முடிவதோடு உலகளாவிய ரீதியில் இந்து சமயம் தொடர்பான பல தகவல்களும் காணப்படுகின்றன.

***2012.01.27, 108 தாண்டவ மூர்த்திகளைக் கொண்ட வெளிநாட்டின் முதல் சிவாலயம்,*** available at http://www.dinamalar.com/nri/details.asp?id=859&lang=ta -- சன்மார்க்க இறைவன் கோயிலில் முதன்முதலில் 108 தாண்டவ மூர்த்திகளை அமைக்கின்ற செய்தியினையும் அக் கோயிலின் சிறப்புகளையும் விரிவாக இக் கட்டுரை விளக்குகின்றது.

*2014.05.27 03.36*pm, **தெரிந்து கொள்ளலாம் வாங்க உலகின் அதிசயங்களும் ஆச்சரியங்களும் - *13,*** available at http://www.puthiyatamil.net/t46567-13 **--** *சற்குரு சிவாய சுப்ரமுனிய சுவாமி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு தற்சமயம் போதிநாத வேலன் சுவாமிகளின் தலைமையில் உருவாக்கப்பட்டு வரும் சன்மார்க்க இறைவன் கோயிலைப் பற்றிய தற்கால நடப்புத் தகவல்களை தெளிவு படுத்துகின்றது.*

*ராம் குமாரசாமி, **2010.0319 07.52***pm, **ஹவாய் (Hawaii) பயணம்,** available at http://kollimalai.blogspot.com/2010/03/egypt-trip.html -- *இக் கட்டுரையிலே ராம் குமாரசாமி என்பவர் தன் குடும்பத்தோடு ஹவாய் தீவு சென்ற அனுபவங்களை சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார். இதிலே காவாய் ஆதீனம் பற்றியும் பல செய்திகளை புகைப்பட ஆதாரங்களோடு பதிவு செய்துள்ளார்.*

***சன்மார்க்க இறைவன் கோயில், குவை, ஹவாய் தீவு, அமெரிக்கா,*** available at (http://kallarperavai.weebly.com/295329942965298430062975300929652995300729943021302129803009296530212965301530062991300729943021296529953021-2.html -- *சன்மார்க்க இறைவன் கோயிலின் சிறப்பினை விரிவாக விளக்குகின்றது.*

***2010.07.01, 2010.07.01, ஆபிரிக்கர் கட்டிய இந்து ஆலயம்,*** available at http://www.bbc.co.uk/tamil/news/story/2010/07/100701_ghanahindutemple.shtml, http://www.bbc.co.uk/tamil/news/story/2010/07/printable/100701_ghanahindutemple.shtml **--** *இக் கட்டுரையானது மேற்கு ஆபிரிக்க நாடான கானா* (GHANA) *நாட்டின் தலைநகரான அக்ராவில்* (ACCRA) *அமைந்துள்ள இந்து ஆலயம்; மற்றும் அங்கு நிகழும் நிகழ்வுகளையும் விபரிப்பதோடு இவ்வாலயத்தினை உருவாக்கியவரான **சுவாமி கானானந்த ஸரஸ்வதியினை** பற்றியும் தெளிவு படுத்துகின்றது.*

*ரமணன்.வி, **2011.05.02, கானா நாட்டில் ஒரு இந்துக் கோயில்*** available at http://www.tamilhindu.com/2011/05/hindu-temple-in-ghana/ -- *அக்ராவில்* (ACCRA) *அமைந்துள்ள இந்து ஆலயமும், **சுவாமி கானானந்த ஸரஸ்வதியும்** இக்கட்டுரையில் முதன்மைப்படுத்தப்பட்டு விளக்கப்பட்டுள்ளது.*

http://www.ramakrishnananda.com/ **--** *இந்த இணையத்தளமானது அமெரிக்காவில் உள்ள **பக்தி வேதாந்த மிஷனுடைய*** **(The Bhaktivedanta**

Mission) உத்தியோகபூர்வ (official) இணையத்தளமாகும். இவ் இணையத்தளத்திலே இந்த மிஷனை உருவாக்கியவரான His Holiness Bhaktivedanta Ramakrishnananda Swami Maharaja எனும் யோகியைப் பற்றியும், இவ் மிஷனின் ஊடாக இந்து சமயம் மற்றும் சமூகம் சார்ந்த பணிகளும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

http://bhaktivedantaashram.org/-- இந்த இணையத்தளமானது அமெரிக்காவில் உள்ள **பக்தி வேதாந்த ஆச்சிரமத்தினுடைய** (Bhaktivedanta Ashram) உத்தியோகபூர்வ (official) இணையத்தளமாகும். இவ் இணையத்தளத்திலே இந்த ஆச்சிரமத்தினை ஆ ச்சிரமத்திரனை உருவாக்கியவரான His Holiness Bhaktivedanta Ramakrishnananda Swami Maharaja எனும் யோகிகளினுடைய ஆன்மீகம் சார்ந்த யோகாசனம், வழிபாடு, உள்ளிட்ட பல விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

http://www.ashramgita.com/en/index.html-- இது இத்தாலியில் உள்ள **சுவாமி கீதானந்த ஆச்சிரமத்தினுடைய** (Svami Gitananda Ashram) உத்தியோகபூர்வ (official) இணையத்தளமாகும். இவ் இணையத்தளத்திலே இந்த ஆச்சிரமத்தினை உருவாக்கியவரான யோகஸ்ரீ சுவாமி யோகானந்த கிரி (Yogasri Svami Yogananda Giri) என்பவரைப் பற்றியும் இவ் ஆச்சிரமத்தினுடைய இந்து சமயம் சார்ந்த செயற்பாடுகளும் விளக்கப்பட்டுள்ளன.

http://divyaloka.ru -- இது ரஸ்யாவிலே உள்ள திவ்விய லோகா ஆச்சிரமத்தினுடைய (Divya Loka Ashram) உத்தியோகபூர்வ (official) இணையத்தளமாகும். இவ் இணையத்தளத்திலே இவ் ஆச்சிரமம் பற்றிய முழுமையான விபரங்கள் கூறப்பட்டுள்ளன.

## 1.8 ஆய்வுப் பகுப்பு

இவ்வாய்வானது ஐந்து அத்தியாயங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு அத்தியாயத்திலும் குறிப்பிட்ட விடயம் ஆராயப்பட்டுவுள்ளது.

முதலாம் அத்தியாயமானது **ஆய்வு முன்மொழிவாக** காணப்படுவதனால் அதில் ஆய்வு பற்றிய அடிப்படை விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன. அந்த வகையில் ஆய்வு அறிமுகம், ஆய்வின் நோக்கம், ஆய்வின் எல்லை, ஆய்வு பிரச்சினை, ஆய்வு முறைமை, ஆய்வுக்காக பயன்படுத்தப்பட்ட முன்னோடிகள், ஆய்வுப் பகுப்பு போன்ற விடயங்களை உள்ளடக்கமாக கொண்டுள்ளது.

இரண்டாம் அத்தியாயத்தில் "**இந்து சமயமும் மேலைத்தேசத்தவர்களும்**" எனும் தலைப்பில் கடந்த நூற்றாண்டுகளிலும் தற்காலத்திலும் இந்து சமய வளர்ச்சியில் பெரிதும் செல்வாக்குச் செலுத்திய மேலைத்தேச அமைப்புகள் மற்றும் அறிஞர்கள் பற்றியும் ஆய்வு வரையறைக்குள் இருந்து ஆராயப்படும் அதேவேளை அவர்கள் அப் பணியை மேற்கொள்வதற்கு ஏதுவாக இருந்த பல காரணிகளும் அடையாளம் காணப்பட்டு விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் அத்தியாயமானது "**அமெரிக்க காவாய் இந்து ஆதீனம்**" எனும் தலைப்பின் கீழ் இந்துப் பண்பாட்டை தற்காலத்தில் சிறந்த முறையில் பேணிப்பாதுகாத்து வருகின்றதும், இந்து சமய பெருமைகளை உலகம் முழுவதும் அறியக்கூடிய வகையில் செயற்பாடுகளை மேற் கொண்டு வருவதுமான அமெரிக்காவில் உள்ள காவாய் இந்து ஆதீனம் (Kauai's Hindu Monastery) பற்றி விரிவாக ஆராய்வதாக அமைகின்றது.

நான்காவது அத்தியாயத்தில் "**காவாய் இந்து ஆதீன வளர்ச்சியில் துறவிகளின் வகிபங்கு**" எனும் தலைப்பில் காவாய் இந்து ஆதீனத்தின் மிக முக்கியமான இரண்டு தெய்வ அவதாரங்கள் என்று சிறப்பிக்கக்கூடிய சிவாய சுப்ரமுனிய சுவாமி மற்றும் போதிநாத வேலன் சுவாமி ஆகிய இருவரினதும் மற்றும் ஆதீனத்தில் ஆன்ம ஈடேற்றத்திற்காக துறவறத்தினை மேற்கொள்ளும் துறவிகளினதும் செயற்பாடுகள் பற்றியும் அவர்களின் கடமைகள் பற்றியும் இவ்வத்தியாயத்தில் ஆராயப்படுகின்றது.

இவ் ஆய்வின் ஐந்தாவது அத்தியாயமாக **முடிவுரை** காணப்படுகின்றது. இதில் ஆய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

# அத்தியாயம் : இரண்டு

## இந்து சமயமும் மேலைத்தேசத்தவர்களும்

# இந்து சமயமும் மேலைத்தேசத்தவர்களும்

## 2.0 அத்தியாய அறிமுகம்

இந்தியாவில் தோன்றியதும் இலங்கையிலும் சிறப்பான வளர்ச்சியை திகழ்ந்ததுமான இந்து சமயமானது தென்கிழக்காசியாவிலும் பரவிச் சிறப்படைந்துள்ளமையினை வரலாற்று குறிப்புக்கள் எடுத்துணர்த்துகின்றன. இன்றைய நவீன உலகில் அதையும் மீறி உலகம் முழுவதும் உள்ள பல நாடுகளில் இந்துப் பண்பாடானது சிறந்த முறையில் பயில் நிலையில் இருந்து வருகின்றது. அதில் மேலைத்தேசங்களில் இந்து சமயம் சிறப்பாக வளர்ச்சி பெற இரண்டு பிரதான காரணங்களை எம்மால் கூற முடியும் அவையாவன

- **இந்துக்களின் மேலைத்தேசத்திற்கான பயணங்கள்:-** இந்து சமயத்தினை சார்ந்தவர்கள் மேலைத்தேசங்களுக்கு சென்று அங்கு தமது சமயம் சார்ந்த விடயங்களை வெளிப்படுத்துதல்

- **மேலைத்தேசத்தவர்களின் வருகை:-** மேலைத்தேசத்தவர்கள் இந்து சமயத்தினால் அல்லது இந்து சமயத்தவர்களினால் கவரப்பட்டு இந்துப் பண்பாட்டினை உள்வாங்கி அதனை வெளிப்படுத்துதல்.

என்பவைகளாகும். இவற்றில் இந்துக்களின் வெளிநாட்டுப் பயணம் என்று பார்த்தோமானால் குறிப்பாக ஐரோப்பா, அமெரிக்கா, கனடா ஆகிய மேலைத்தேச நாடுகளுக்கு கடந்த இரு நூற்றாண்டுகளாக இந்து அறிஞர்கள் மற்றும் இயக்கங்களின் செல்வாக்கு மற்றும் இந்துக்களது குடியேற்றங்கள் ஆகியவற்றின் மூலமே இந்தியா இலங்கை உட்பட்ட நாடுகளில் இருந்து இந்துப் பண்பாடானது பெரும்பாலும் மேலை நாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டது. அந்தவகையில் குறிப்பாக விவேகானந்தருடைய சிக்காக்கோ

சொற்பொழிவுகள் (1893), அமெரிக்காவில் நிகழ்ந்த சுவாமி இராமதீர்த்தரின் வேதாந்த சொற்பொழிவு (1902), ஹரே கிருஸ்ணா இயக்கம் (International Society For Krishna Consciousness), இராமகிருஸ்ண மிஷன் (Ramakrishna Mission) உட்பட பல அறிஞர்களினதும், அமைப்புக்களினதும் உலகளாவிய ரீதியிலான இந்து சமயம் சார்ந்த செயற்பாடுகள் இந்து சமயமானது மேலைத்தேசங்களில் வளர்ச்சி பெற ஏதுவாக இருந்தது.

இதனைவிட இந்துக்களின் குடியேற்றங்கள் என்று பார்த்தோமானால் அகதிகளாகவும், கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகவுமே மேலை நாடுகளுக்கு சென்றுள்ளனர். அவ்வாறு சென்றவர்கள் தமது இந்து பாரம்பரியத்தினையும் அங்கு கொண்டு சென்றதோடு பல இந்து ஆலயங்களை அங்கு அமைத்து ஸ்திரத் தன்மையினையும் பேணி வருகின்றமையினை அறிய முடிகின்றது.

அடுத்ததாக மேலைத்தேசத்தவர்களின் வருகையினாலும் இந்து சமயமானது சிறந்த முறையில் இம் முழு உலகிற்கும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்துக்களின் மேலைத்தேசத்தினை நோக்கிய பயணத்திற்கு முன்பே மேலைத்தேசத்தவர்களின் இந்து சமய பண்பாடுகளைக் கொண்ட இலங்கை, இந்தியா போன்ற நாடுகளுக்கான வருகையானது இடம்பெற்றிருந்தது என்பது ஆதாரத்துடன் கூடிய உண்மையாகும். இவைகளை ஆய்வுத் தலைப்புடன் தொடர்புபடுத்தி ஆராய்வதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

அவ்வாறிருக்க என்னுடைய ஆய்வு தலைப்பான அமெரிக்க காவாய் இந்து ஆதீனத்திற்கும் இந்து சமயமும் மேலைத்தேசத்தவர்களும் என்ற இவ்வத்தியாயத்திற்கும் இடையில் உள்ள தொடர்புகளை பார்க்க வேண்டியது அவசியமாகும். அவ்வாறிருக்க மிக முக்கிய காரணமாக எனது ஆய்வுப் பிரதேசமான காவாய் இந்து ஆதீனம் மேலைத்தேச நாடான அமெரிக்காவில் அமைந்துள்ளது என்பதாகும். மேலும் மேலைத்தேசத்தவர்களின் காலனித்துவத்தினாலேயே சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் இலங்கை வருகையானது சாத்தியமடைந்தது என்பதுவும் இங்கு கவனிக்க வேண்டியதே.

இதனை விட எவ்வாறு மேலைத்தேச அறிஞரான வில்லியம் ஜோன்ஸ் இந்து சமய உண்மைகளை தொடர்ந்து ஆராய்ந்து முழுமையும் அறியப்பட வேண்டும் என்ற காரணத்தினால் ஆசியயியற் கழகத்தினை (The Asiatic Society) ஓர் நிறுவகமாக தோற்றறுவித்து மேலைத்தேச அறிஞர்களைக் கொண்டு அதனை

திறன்பட நடாத்தி இன்றுவரை நிலை நிறுத்தியுள்ளாரோ அதனைப்போன்றே அமெரிக்க காவாய் இந்து ஆதீனமானது மேலைத்தேசத்தவரான சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளால் உருவாக்கப்பட்டதோடு மேலைத்தேசங்களைத் துறவிகளாக மாற்றி இன்றுவரை சிறப்பாக இயங்கி வர வழியமைத்துள்ளார்.

இதனைப்போன்றே மக்ஸ் முல்லரும் எவ்வாறு மேலைத்தேசத்தில் இருந்து கொண்டு உலகம் பூராகவும் வேதம் பற்றிய உண்மைகளையும், உலகம் பூராகவும் இருந்து இந்து சமய விடயங்களை எழுதியவர்களின் நூல்களை தொகுத்து கிழக்கத்திய புனித நூல்கள் (The Sacred Books of the East) என்ற நூலினை உலகிற்கு வழங்கினாரோ அதனைப்போன்றே காவாய் இந்து ஆதீனத்து துறவிகளினால் இந்து சமய உண்மைகளும், பாரம்பரியங்களும், சஞ்சிகை ஊடாகவும், நூல்கள் ஊடாகவும் வெளிப்படுத்தப்பட்டு வரப்படுகின்றன என்பதுவும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அடுத்ததாக ஆரம்பத்தில் இவ்வாதீன துறவிகள் ஆங்கில மொழியைச் சார்ந்தவர்களாகக் காணப்பட்டமையினால் இந்து சமயத்தினைப்பற்றி பூரண அறிவினைப் பெறுவதற்காக வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள் உட்பட பல இந்து மூலங்களை ஆங்கில மொழி பெயர்ப்பை மையமாக வைத்தே அறிந்திருக்க வேண்டும்.

இவ்வாறிருக்க “அமெரிக்க காவாய் இந்து ஆதீனம் (Kauai's Hindu Monastery of America)” எனும் எனது ஆய்வுத் தலைப்பின் ஆய்வுப் பிரதேசம் மற்றும் ஆய்வுப் பொருள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்து சமயத்தின் மூலங்களின் மொழி பெயர்ப்பும், அது தொடர்பான ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுவதற்கு மேலைத்தேசத்தவர்களின் காலனித்துவமானது பெரும் பங்காற்றியுள்ளது. அன்றும், இன்றும் மேலைத்தேசங்களில் இந்து சமயம் தொடர்பான அறிவானது எழுச்சி பெறுவதற்கு மிக முக்கிய காரணமாக இது இருந்தமையினை ஆதாரமாகக் கொண்டு **இந்து சமயமும் மேலைத்தேசத்தவர்களின் காலனித்துவமும்** எனும் தலைப்பில் இவ் அத்தியாயத்தில் முதன்மை கொடுக்கப்பட்டு ஆராயப்படுகின்றது.

அடுத்ததாக மேலைத்தேசத்தவர்களின் இன்றைய இந்து ஆச்சிரமங்கள் என்ற பகுதியில் மேலைத்தேசங்களில் காணப்படுகின்ற இந்து சமய ஆச்சிரமங்கள் காவாய் இந்து ஆதீனத்துடன் ஒப்பிடுகையில் காலத்தால் பிற்பட்டதாகக் காணப்படுவதோடு அவற்றில் சிலவற்றின் தோற்றத்திற்கு இவ்வாதீனம் அடிப்படையாக இருந்ததனையும் பற்றி ஆராய்வதாக காணப்படும்.

## *2.1 இந்து சமயமும் மேலைத்தேசத்தவர்களின் காலனித்துவமும்*

*பல சமயங்களின் பிறப்பிடமான இந்தியாவில் இந்து சமயமானது மிக நீண்ட வரலாற்றினை கொண்ட ஒரு சமயமாக காணப்படுகின்றது. இதற்கு 1920ஆம் ஆண்டு ஜோன் மார்சல் தலைமையில் கி.மு 2600ஆம் ஆண்டுக்குரியதாகக் கூறப்படும் சிந்து வெளி நாகரிகத்தின் கண்டுபிடிப்பானது சிறந்த எடுத்துக்காட்டாகும். இவ்வாறு சிறப்பு வாய்ந்த இந்து சமயத்தில் காணப்படுகின்ற கலாசார, நாகரிக, வழிபாட்டு, தத்துவ, அறிவியல் முறைகளைப் பற்றிய ஆராய்ச்சி சார்ந்த விடயங்கள் மேலைத்தேச அறிஞர்களை பெரிதும் கவர்ந்தது. இதன் விளைவால் இந்து சமயமானது உலகம் முழுவதும் விஸ்த்தீரணமடைந்தது. இது பற்றி வைத்திய கலாநிதி இ. இராமச்சந்திரன் மேல்வருமாறு குறிப்பிடுகின்றார்.*

***"மேற்கத்தையவர்களின் காலனித்துவ ஆட்சியில் விளைந்த பாதக விளைவுகளுக்கு அப்பால் பல சாதக விளைவுகளும் நடந்தேறியிருக்கின்றன. மேற்கத்தையவர்களின் மதப் பரப்பல் நடவடிக்கையின் வெவ்வேறுபட்ட வடிவங்களாக இருப்பினும் சில அம்சங்கள் இந்துக்களின் சமய, கலாசார உலகமயமாக்கலுக்கு அடிப்படையாக இருந்திருக்கின்றன என்ற அடிப்படையில் களிப்படைய முடிகின்றது."*** [1]

*இந்தியாவை காலனித்துவ ஆட்சியின் கீழ் கொண்டு வந்த மேலைத் தேசத்தவர்கள் அடிமை நாடாக வைத்திருந்ததோடு மக்களையும் அவ்வாறே நடத்தினர். அவர்களின் பிரதான நோக்கங்களில் ஒன்றாக கிறிஸ்த்தவ சமயத்தினை பரப்புதல் காணப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இதன் காரணத்தால் இந்திய சமயங்கள் குறிப்பாக இந்து சமயம் பல்வேறு வழிகளில் தாக்கப்பட்டு வீழ்ச்சி நிலைக்கு சென்றதும் ஆதார பூர்வமான உண்மையே. ஆனால் ஒட்டுமொத்தமாக மேலைத்தேசத்தவர்கள் அனைவரையும் காலனிய வாதிகளாக நோக்குவது தவறேயாகும். அவர்களுள் வில்லியம் ஜோன்ஸ்* (William Jones), *மக்ஸ்முல்லர்* (Max Muller), *எர்னஸ்ட் பின்பீல்ட் ஹாவல்* (Ernest Binfield Havell), *விக்டர் கசின்* (victor cousin), *சேர். அலெக்ஸ்சாந்தர்*

1 *சுபராஜ்.ந, (2012), இந்து மதமும் மேற்கத்தையவர்களின் ஆய்வுகளும், ப.iii.*

கன்னிங்காம், ஜேம்ஸ் பெர்குசன் (James Fergusson) உட்பட சிலர் இந்திய சமயங்களை பேணிப்பாதுகாத்தும் வந்துள்ளனர். இதற்கு அவர்களின் இந்திய சமயங்களின் மேல் இருந்த நல்லெண்ணம் சான்றாக விளங்குகிறது.

**"இந்திய நாட்டின் கவிதை, இலக்கியங்கள், தத்துவ நூல்கள் ஆகியவற்றை ஆராயும் பொழுது அவைகளிற் பொதிந்துள்ள உண்மைகள் மிகவும் சிறப்புடையனவாகக் காணப்படுகின்றன. ஆவற்றின் உயரிய தத்துவக் கொள்கை நலன்களை நம்முடைய ஐரோப்பிய அறிவு நலனுடன் ஒருங்கு வைத்து ஆராயும் போது மண்டியிட்டு வணங்கிப் பணிய வேண்டிய நிலையில் இருக்கின்றோம்."[2]**

~ விக்டர் கசின் (victor cousin)

**"ஐரோப்பியர்கள் வெறும் கிரேக்க, உரோம, யூத தத்துவங்களை மட்டும் படித்தால் போதாது. நம்முடைய அக வாழ்க்கை நிறைவானதாகவும், மனநலம் பொதிந்ததாகவும், உலக அளவில் விரிந்ததாகவும், உண்மையிலையே உயரிய மனித இயல்புடையதாகவும் அமைய வேண்டுமாயின் இந்திய தத்துவ நூல்களை படிக்க வேண்டியது மிகவும் மிகவும் இன்றியமையாததாகும். அது நம்முடைய குறைகளைப் போக்கித் திருத்திச் செம்மைப்படுத்த வல்லதாக உள்ளது"[3]**

~ மக்ஸ்முல்லர் (Max Muller)

மேலைத்தேசத்தவர்கள் இந்தியாவை தன் வசப்படுத்தும் காலம் வரை இந்திய வரலாறானது முகம்மதியர்களின் படையெடுப்பிலிருந்தே அறியப்பட்டிருந்தது. அதற்கு முன்பு அலக்ஸாண்டர் *326 BC*இல் இந்தியாவிற்கு படையெடுத்து வந்தான் என்ற ஒரு குறிப்பு மட்டுமே இருந்தது. வேறு எவ்விதத்திலும்

---

2 கேசவன்.எஸ்., அருள்நேசன்.பு., *(2013)*, "மேனாட்டுப் பல்கலைக்கழகங்களில் இந்து நாகரிகம்", **ஆயதனம்**, ப.59.

3 மேலது

இந்திய வரலாறானது அறியப்படவும் இல்லை அறிவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.[4] இவ்வாறிருக்க இந்தியாவில் பணியாற்றுவதற்காக வந்த மேலைத்தேசத்தினை சேர்ந்த சிலர் தனது சொந்த ஆர்வத்தினால் இந்தியாவினுடைய வரலாறு, மொழியியல், கலைகள், சமயம் உட்பட பண்பாட்டினுடைய பல கூறுகளையும் பல தடைகளையும் கடந்து ஆராய முற்பட்டனர் அதில் வெற்றியும் கண்டனர்.

இந்துப் பண்பாடு பற்றிய ஆராய்ச்சிகளின் உச்சக்கட்டத்தை பத்தொன்பதாம் நூற்றாண்டில் காணலாம். இக்கால கட்டத்தில் மேலைத்தேச அறிஞர்கள் பலர் இந்துப் பண்பாட்டினுடைய கூறுகளைப் பற்றி அறிவதில் மிக்க ஆர்வம் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். கிரேக்க இலக்கியங்களின் சிந்தனைகள் ஐரோப்பியாவினுள் புகுந்த போது அங்கு எவ்வாறான மறுமலர்ச்சி ஏற்பட்டதோ அதே போன்றதொரு மாற்றத்தினை பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேல் நாடுகளில் புராதன இந்திய இலக்கியச் சிந்தனைகளின் அறிமுகம் ஏற்படுத்தின. இவ்வாறிருக்க இந்து சமயத்தின் மூலங்களான வேதங்கள், ஆகமங்கள், உபநிடதங்கள், பிராமணங்கள், பகவத்கீதை, புராணங்கள், ஸ்மிருதிகள், அர்த்தசாஸ்த்திரம், இதிகாசங்கள் உட்பட பல நூல்களையும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தியதோடு, பிற மொழிகளில் குறிப்பாக ஆங்கில மொழியில் மொழி பெயர்க்கப்பட்டும் இந்துப் பண்பாடானது மேலைத் தேசத்தவர்களால் உலகறியச் செய்யப்பட்டது.

இவர்களுள் வில்லியம் ஜோன்ஸ் (William Jones), மக்ஸ்முல்லர் (Max Muller) ஆகியோர் அவர்களின் சிறந்த செயற்பாடுகளின் காரணத்தினால் இந்து சமயத்தில் பெரிதும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டியவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் பணத்திற்காகவோ அல்லது புகழுக்காகவோ அல்லது மத மாற்றச் செயலுக்காகவோ இந்து சமயம் சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்ளவில்லை மாறாக இவர்கள் இந்து சமயத்தினையும் சமஸ்கிருத மொழியையும் நேசித்தே தமது இந்து சமயம் சார்ந்த பணிகளை மேற்கொண்டனர்.

வில்லியம் ஜோன்ஸினுடைய பணிகளும் அவரால் உருவாக்கப்பட்ட ஆசியியற் கழகத்தின் (The Asiatic Society) ஊடாக ஆரம்ப கால ஆய்வுப் பணிகளை மேற்கொண்ட சில மேலைத்தேச அறிஞர்கள் பற்றியும் இதனைத் தொடர்ந்து

4 http://solvanam.com/?p=25510#sthash.e2YLKtSI.dpuf

மக்ஸ்முல்லரின் ஆய்வுப்பணிகளுடன் சேர்த்து அவரால் உருவாக்கப்பட்ட The Sacred Books of the East எனும் நூற்றொகுதியில் உள்ளடக்கப்பட்ட இந்து சமயம் சாரந்த நூல்களின் மூலம் தமது பணிகளை மேற்கொண்ட அறிஞர்களைப் பற்றியும் இவ்வத்தியாய நோக்கத்தில் இருந்து ஆராய்வோம்.

கிறிஸ்தவ மிசனரிகளைச் சேர்ந்த பலர் கி.பி 1757 இற்கு முன்பு இந்திய புராதன மொழிகளைப்பற்றிய அறிவினை சிறிய அளவில் கொண்டவர்களாக காணப்பட்டிருக்கின்றனர். அவர்களுள் றொபேர்ட் டி நொபிலி எனும் அறிஞர் குறிப்பிடத்தக்கவர். இவர் 1606ஆம் ஆண்டு இந்தியா சென்று பீற்றர் றொப் என்கின்ற ஜேர்மனியரிடம் சமஸ்கிருதத்தை ஆறு வருடங்கள் கற்றார். பின்பு சமஸ்கிருத இலக்கண நூலொன்றை உருவாக்க முயன்ற இவர் அவ் வேலையை தொடங்கும் முன்பே 1668ஆம் ஆண்டு ஆக்ராவில் உயிரிழந்துவிட்டார். இதனைப் போன்று 1782ஆம் ஆண்டு யசுர் வேதத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு வெளிவந்தது ஆனால் அதன் மூலப்பிரதி போலியானது என்ற கருத்தின் அடிப்படையில் அது நிராகரிக்கப்பட்டது.[5] இந் நிலையே வில்லியம் ஜோன்ஸ் (William Jones) இந்து சமய மூலங்களை மொழி பெயர்த்தும், சில ஆய்வுகளையும் மேற்கொண்டும் முதன் முதலிலே தனது பணியினை செவ்வனே செய்தார்.

### 2.1.1 ஆசியியற் கழகம் (The Asiatic Society)

நீதிபதியாக 1772ஆம் ஆண்டு இந்தியா வந்த வில்லியம் ஜோன்ஸ் லண்டனில் 1660ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகின்ற ரோயல் கழகத்தில் (The Royal Society) உறுப்பினராகவும் இருந்துள்ளார்.[6] இவரின் அவ் இருப்பானது இந்தியாவிலும் அவ்வாறான ஒரு கழகத்தினை உருவாக்க வேண்டும் என்ற உத்வேகத்தினை வழங்கியது. அவ்வாறு இருக்கையிலையே பண்டைய இந்தியாவின் சட்ட முறைகள், அரசியல் அமைப்பு, வேத நூல்கள் கணிதம், வடிவியல், சொற்கலை, கவிதை, ஒழுங்குமுறை, கலைகள், உற்பத்திகள், விவசாயம், வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை முதன்மைப்படுத்தி அவைகளை வெளிப்படுத்தும் நோக்குடன் பதிவுக் குறிப்பொன்றைத் தயாரித்தார்.

---

5 சுபராஜ்.ந., (2012), Nk.$.E}> பக்.66-67.

6 http://tamil.chennaionline.com/tamilcolumn/newsitem.aspx?NEWSID=fc46cd08-bc8e-40c1-b094-7de9e857e0a2&CATEGORYNAME=vijay

அவரால் தயாரிக்கப்பட்ட பதிவுக் குறிப்பு 1784ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சில ஈடுபாடுடைய ஐரேப்பிய புத்தி ஜீவிகளுக்கு அனுப்பப்பட்டு, 1784ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி கல்கத்தா உச்ச நீதி மன்றத்தில் (Suprime Court) யூரிகளினுடைய சபையில் ஒன்று கூடி ஆராய தீர்மானித்தனர்.[7]

அதன் பின்னர் தலைமை நீதிபதியான ரொபர்ட் சேம்பர்ஸ் (Sir Robert Chambers) தலைமையில் குறித்தாற் போன்று ஒன்று கூடல் நிகழ்ந்தது. இந்த ஒன்று கூடலின் போது Justice John Hyde, John Carnac, Henry Vansittart, John Shore, Charles Wilkins, Francis Gladwin, Jonathan Duncan உட்பட 30 ஐரோப்பிய அறிஞர்கள் பங்கு பற்றியிருந்தனர். இதன் போது வில்லியம் ஜோன்ஸ் தனது நோக்கத்தினை வெளிப்படுத்திய போது இந்தியாவை

**"Nurse of sciences" (ஆசியாவின் பண்டைய அறிவியலின் தாதி)**
**"inventress of delightful and useful arts." (பயன் மிக்க நுண்கலைகலைக் கண்டு பிடித்தவள்)**

என சிறப்பித்து கூறினார். இவ் ஒன்று கூடலின் இறுதியில் வில்லியம் ஜோன்ஸின் நோக்கங்களும், கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதன் பின் ஆசியியற் கழகம் (The Asiatic Society) என்ற பெயரில் உருவாக்கப்பட்டது.[8]

அவ்வாறிருக்க இக் கழகத்தினுடைய முதலாவது தலைவராக வொரன் ஹஸ்டிங்ஸ் (Warren Hastings) என்பவரும் உப தலைவராக வில்லியம் ஜோன்சும் தெரிவு செய்யப்பட்டர். ஆனால் வொரன் ஹஸ்டிங்ஸ் (Warren Hastings) தலைவர் பதவியை ஏற்க மறுத்ததன் காரணத்தினால் வில்லியம் ஜோன்ஸே தொடர்ந்து தலைமைப் பொறுப்பினை ஏற்று 1793 ஆம் ஆண்டு வரை வழிநடத்தி வந்தார். இவரது இறப்பிற்குப் பிறகு இக் கழகம் சில காலம் பிரகாசத்தினை இழந்த போதிலும் சில காலங்களுக்கு பின்பு பொறுப்பேற்ற திறமை மிக்க தலைவர்களாலும், செயலாளர்களாலும் மீண்டும் சிறப்பான முறையில் வழிநடத்திச் செல்லப்பட்டு இன்று வரை சிறந்த முறையில் இக் கழகம் இயக்கப்பட்டு வருகின்றது.[9] (அட்டவணை : 01)

7 http://asiaticsocietycal.com/history/index.htm

8 சுபராஜ்.ந., (2012), Nk.$.E}>, பக்.71-74.

9 http://asiaticsocietycal.com/history/index.htm, http://asiaticsocietycal.com/history/1.htm

*1829ஆம் ஆண்டு வரை இக் கழகத்தின் உறுப்பினர்களாக ஐரோப்பியர்களே இருந்து வந்தனர். ஆனால் 1829 ஆண்டிற்குப் பின்பு இந்தியர்கள் பலர் இக்கழகத்தினுள் உள்வாங்கப்பட்டனர். இதற்கமைய முதன் முதலாக பிரசன்னகுமார் தாகூர், த்வர்க்கனாத் தாகூர், ராம்சமால்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதோடு, 1885ஆம் ஆண்டு ராஜேந்திரலால் என்ற இந்தியர் முதன் முதலாக தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.*[10]

*மேலும் இக்கழகமானது நூலகம், அரும்பொருட்காட்சியகம், பதிப்பகம் போன்றவற்றினை அமைத்து சிறந்த முறையில் நடாத்தி வந்துள்ளது. அந்தவகையில் நூலகமானது 1866இல் இக்கழகத்தினுடைய பெயரானது பல்வேறு காலகட்டங்களில் பல மாற்றத்திற்கு உள்ளாகி வந்துள்ளது. அவ்வாறிருக்க என வெவ்வேறு பெயர்களைக் கொண்டு இயங்கி வந்துள்ளது. எவ்வாறு இருந்த போதிலும் கல்கத்தாவில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட அதே பெயரிலேயே பிற்காலத்தில் உலகம் முழுவதும் உள்ள கிளைகள் அழைக்கப்பட்டு வருகின்றன.*[11]

- The Asiatic Society (1784-1832)
- The Asiatic Society of Bengal (1832-1935)
- The Royal Asiatic Society of Bengal (1936-1951)
- The Asiatic Society (again since July 1951)

*ஆசியியற் கழகத்தின் ஊடாக பல மேலைத்தேசத்து அறிஞர்களும், இந்திய அறிஞர்களும் இக் கழக உருவாக்க காலத்தில் இருந்து இந்து சமயம் சார்ந்த பல இலக்கியங்களை ஆய்வுகளை மேற்கொண்டும், மொழி பெயர்ப்புக்களை செய்தும் இந்து சமய உண்மைகளை உலகறியச் செய்துள்ளனர். அவ்வாறிருக்க இக்கழகத்தின் ஊடாக வெளியிடப்பட்ட மேலைத்தேசத்து ஆரம்ப கால அறிஞர்களின் ஆக்கங்கள் மட்டுமே இங்கு வெளிப்படுத்தப்படுகின்றன.*

---

10 *சுபராஜ்.ந., (2012),* Nk.$.E}>, *பக்.77-78.*

11 http://asiaticsocietycal.com/history/index.htm

### *2.1.1.1 வில்லியம் ஜோன்ஸ்* (William Jones)

*இந்தியப் பண்பாட்டினுடைய கூறுகளை ஆராய்ச்சிக்கு உட்படுத்திய மேலைத்தேச அறிஞர்களுள் வில்லியம் ஜோன்சுக்கு காலத்தினை அடிப்படையாகக் கொண்டு முதல் நிலை அளிக்கப்பட்டு வருகின்றது. இவர் 1746ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 28ஆம் திகதி லண்டனில் பிறந்தார். தனது 20 வயதிலேயே தனது தாய் மொழியான ஆங்கிலம் உட்பட பிரெஞ்சு, ஸ்பானிஸ், போர்த்துக்கீசியம், கிரேக்கம், இலத்தீன், அரபிக், பெர்சியம் போன்ற மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவராகக் காணப்பட்டார். ஒக்ஸ்போர்ட்* (Oxford) *பல்கலைக் கழகத்தில் சட்டத்துறையில் பட்டப்படிப்பினை முடித்த இவர் 1783ஆம் ஆண்டு கல்கத்தா உயர் நீதிமன்றத்திற்கு நீதிபதியாக நியமிக்கப்பட்டு இந்தியா வந்தடைந்தார்.*[12]

*இந்தியாவிற்கு வந்த வில்லியம் ஜோன்சை இந்துப் பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட இந்தியப் பண்பாடானது பெரிதும் கவர்ந்தது. இந்தியப் பண்பாட்டினை அறிய வேண்டுமென்றால் சமஸ்கிருதத்தினை அறிய வேண்டியதன் அவசியத்தினை உணர்ந்த வில்லியம் ஜோன்ஸ் பல்வேறு முயற்சிகளின் பின் "**பிராம்லோசின்**" கலாபூசன என்ற வைத்திய குலத்தினைச் சேர்ந்தவரின் உதவியோடு சமஸ்கிருத மொழியினை கற்றுத் தேர்ந்தார்.*[13] *ஏற்கனவே அவர் அறிந்திருந்த பழம்பெரும் மொழிகளுடன் ஒப்பீட்டு ரீதியான ஆய்வினை மேற்கொள்வதற்கும், சமஸ்கிருத மொழியில் அமைந்த பல நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதற்கும், சமஸ்கிருத மொழியின் அருஞ்சிறப்புக்களை மேலைத்தேச அறிஞர்களுக்கு அறிமுகஞ் செய்வதற்கும், ஆசியியற் கழகத்தினை* (The Asiatic Society) *தோற்றுவிப்பதற்கும் அவரை இந்தியாவிற்கு கொண்டு வந்த காலனித்துவமே அடிப்படையாக இருந்தது என்று கூறினால் அதனை யாராலும் மறுக்க இயலாது.*

*1789ஆம் ஆண்டு காளிதாசரினுடைய* ***அவிக்ஞான சாகுந்தலம்*** *என்ற நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இவருடைய இம் மொழி பெயர்ப்பை மூலமாகக் கொண்டு ஜோர்ஜ் போஸ்டர் என்பவர் ஜேர்மன் மொழியில் மொழி*

---

12 http://tamil.chennaionline.com/tamilcolumn/newsitem.aspx?NEWSID=fc46cd08-bc8e-40c1-b094-7de9e857e0a2&CATEGORYNAME=vijay

13 *சுபராஜ்.ந, (2014), "இந்துமத இலக்கியங்கள் தொடர்பான ஆய்விலே ஆசியவியற் கழகத்தின்* (The Asiatic Society) *வகிபங்கு", பண்பாடு, ப.8.*

பெயர்த்து வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது. இதனூடாக வெளிநாடுகளில் வாழ்ந்த ஆங்கில மற்றும் ஜேர்மன் மொழிகளைக் கற்றறிந்தவர் மத்தியில் இந்நூல் பெரும் வரவேற்பைப் பெற்றதோடு இந்தியாவில் சமஸ்கிருதம் தவிர்ந்த ஏனைய மொழியைச் சேர்ந்த ஆங்கிலப் புலமையாளர்களும் வில்லியம் ஜோன்சின் இம் மொழி பெயர்ப்பால் பெரிதும் நன்மையடைந்தனர்.

1789ஆம் ஆண்டு ஜெய தேவரினால் குப்தர்களினுடைய ஆட்சிக் காலத்தில் எழுதப் பெற்ற **கீத கோவிந்தம்** எனும் நுலானது மொழி பெயர்க்கப்பட்டு பதிப்பித்ததோடு 1792ஆம் ஆண்டில் காளிதாசரினுடைய **ருது சம்ஹாரத்தினை** மொழிபெயர்த்து வெளியிட்டார். மேலும் மனு சம்ஹிதையினை நன்கு ஐயமின்றி கற்று மொழி பெயர்ப்பு செய்தார். ஆனால் இவர் இறந்த பின்பே W.E.ஹெப்கின்ஸ் என்பவரால் "Dthe Ordinanceis in manu"எனும் பெயரில் வெளியிடப்பட்டது.

வேதங்களை பொறுத்தவரையில் இவரது பணிகள் குறைவாகவே காணப்படுகின்றது. பத்து தொகுதிகளாக வெளிவந்த இவரது ஆக்கங்களில் மொத்தமாக நான்கு பாகங்கள் மட்டுமே வேதங்களைப் பற்றியதாக அமைகின்றது. அதில் காயத்திரி மந்திரத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு பெரிதும் வரவேற்கத் தக்கது. அதனைப் போன்று உபநிடதங்களைப் பொறுத்தவரையில் ஈஷ உபநிடதத்தின் பதினெட்டு செய்யுட்களையும், மைத்ராயிணி உபநிடதத்தின் ஒரு பகுதியினையும் மொழி பெயர்த்து பதிப்பித்துள்ளார்.[14]

**"சமஸ்கிருதம் கிரேக்க மொழியைக் காட்டிலும் வளர்ச்சியடைந்தது, இலத்தீன் மொழியைக்காட்டிலும் மிகவும் பரந்தது"** எனும் கருத்தினை முன் வைத்து சமஸ்கிருத மொழியின் சிறப்பினை வெளிக்கொணர்ந்த வில்லியம் ஜோன்ஸ் மொழிகள் தொடர்பான ஒப்பியல் ஆய்வில் ஒரு முன்னோடியாகத் திகழ்கின்றார். ஒரு கடவுள் கொள்கையை சிறு வயதில் இருந்து நம்பி வந்த ஜோன்ஸ் இந்து தெய்வங்களைப் பற்றியும், தேவதைகளைப்பற்றியும் உள்ள பல பாடல்களை இவர் மொழி பெயர்த்துள்ளார். குறிப்பாக பூசன், சூரியன் போன்ற தேவர்களைப் பற்றியும், நீரில் ஒளிந்திருக்கும் நாராயணன் பற்றியும் உள்ள பல பாடல்கள் இவரால் மொழி பெயர்க்கப்பட்டன. இதனைத் தவிர

14 மேலது, ப.9.

*தனியாகவும், வில்சன் என்பவருடனும் இணைந்தும் பல ஆய்வுக் கட்டுரைகளை ஆசியியற் கழகத்தில் சமர்ப்பித்துள்ளார்.*[15]

### *2.1.1.2 சார்ள்ஸ் வில்கின்ஸ்* (Charles Wilkins)

*இந்து சமயத்தவர்களின் புனித நூலாகக் கருதப்படும் பகவத்கீதையினை 1785ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பு செய்ததோடு 1787இல் கீதோபதேசத்தினையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். மேலும் இந்து சமய வரலாற்று காவியமான மஹாபாரதத்தினை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவரும் இவராவார். இந்தியாவில் பல்வேறு இடங்களில் காணப்பட்ட சமஸ்கிருத கல்வெட்டுக்களை கண்டறிந்து அதனை படியெடுத்து ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்து பதிப்பித்ததுடன் சமஸ்கிருத மொழியில் இலக்கண ஆய்வுகள் பலவற்றையும் மேற்கொண்டுள்ளார்.*[16]

### *2.1.1.3 எச்.எச்.வில்சன்* (H.H wilson)

*1811 - 1815 வரையான காலப்பகுதியில் ஆசியியற் கழகத்தின் செயலாளராக இருந்து அளப்பெரிய பல பணிகளை இந்து சமயத்திற்காக மேற்கொண்டுள்ளார். அத்தோடு பல இந்து சமய இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பும் செய்துள்ளார். அவற்றில் காளிதாசரினால் எழுதப் பெற்ற மேகதூதத்தினை 1813ஆம் ஆண்டும், இந்து சமய தெய்வங்களின் சிறப்புகளை வெளிப்படுத்தும் பதினெண் புராணங்களையும், கங்கனரினால் எழுதப் பெற்ற ராஜதரங்கினி என்ற நூலையும் (1825) ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்புச் செய்தார். மேலும் இந்து நாடக அரங்கு தொடர்பாக மூன்று பெரிய அங்கங்களை 1827ஆம் ஆண்டு எழுதியமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.*

### *2.1.1.4* கோல்புறுக் (Colebrook)

*இவர் 1806 - 1815 வரையான காலப்பகுதியில் ஆசியியற் கழகத்தின் தலைவராக இருந்து இந்து சமயத்திற்காக பல பணிகளை மேற்கொண்டுள்ளார். அத்தோடு ஜகந்நாத் தரகபன்ஜனன் என்பவர் எழுதிய விவடவங்கர்னாவ*

---

15 மேலது.

16 சுபராஜ்.ந., (2012), Nk.$.E}>, பக்.87-88.

எனும் ஆக்கத்தினை Digest of Hindu law on contract and successions எனும் பெயரில் 1798ஆம் ஆண்டும், அமரகோசத்தினுடைய முக்கிய பதிப்பொன்றை 1808ஆம் ஆண்டும் வெளியீடு செய்துள்ளார்.[17]

### 2.1.1.5 ஜோன் சோ (John Shore)

யோக வசிட்டம் தொடர்பாக ஆங்கிலத்தில் கட்டுரை ஒன்றை எழுதியுள்ள இவர் இந்துப் பண்பாடு தொடர்பாக ஆசியியற் கழகத்தின் ஊடாக ஆறு ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.[18]

எனவே இந்தியப் பண்பாட்டினை உலகிற்கு வெளிக்கொணர முற்பட்ட வில்லியம் ஜோன்ஸ் தனது தனிப்பட்ட முயற்சியினால் ஆர்வம் மிக்க சில அறிஞர்களை ஒன்று திரட்டி ஆசியியற் கழகத்தினை தோற்றுவித்தார். பின்னர் அக்கழகத்திலேயே தன் வாழ்நாட்களை முழுமையாக தியாகம் செய்து பல பணிகளை மேற் கொண்டு இன்று இந்து சமய அறிஞர்களில் ஒருவராக போற்றக் கூடிய அளவிற்குச் சிறப்பான நிலையில் இவர் வைத்து பார்க்கப்பட வேண்டியவராகக் காணப்படுகின்றார்.

## 2.1.2 கிழக்கத்திய புனித நூல்கள் (The Sacred Books of the East)

கீழைத்தேச சமயங்கள் பற்றிய தீவிரமான தேடல்களின் காரணமாக கிழக்கத்திய புனித நூல்கள் அதாவது The Sacred Books of the East எனும் நூற்தொகுதி மக்ஸ்முல்லரினால் உருவாக்கப்பட்டது. இவர் **"இந்துக்களின் வேத நூல்கள் பிரதிபலித்துக்காட்டும் கலாசாரப் பண்பாட்டு அம்சங்கள் ஐரோப்பிய பண்பாடுகளின் முன்னோடியாக உள்ளன"** எனும் தன் கருத்தினை தெளிவு படுத்தும் வகையில் இந் நூலை உருவாக்க முனைந்துள்ளார்.

கிழக்கத்திய புனித நூல்கள் (The Sacred Books of the East) எனும் நூற்தொகுதியானது 1879ஆம் ஆண்டு தொடக்கம் 1910ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் வெளிவந்த கீழைத்தேசவியல் தொடர்பான

17 மேலது, பக்.90-91.

18 மேலது, ப.91.

ஐம்பது நூல்களை உள்ளடக்கிய ஒரு மிகப் பெரும் தொகுதியாகும். முக்ஸ்முல்லரினால் உருவாக்கப்பட்ட இந் நூற்தொகுதியினை ஒக்ஸ்போர்ட் (Oxford) பல்கலைக்கழகம் வெளியீடு செய்ததுடன் இந் நூற்றொகுதி முழுவதற்குமான முறையான பதவிப் பெயரிடலை UNESCO எனும் உலக நிறுவனம் மேற்கொண்டமையும் சுட்டிக்காட்டத்தக்கதாக அமைகின்றது.[19] இந் நூற்றொகுதியினுள் இந்துசமயம், பௌத்தசமயம், ஜைனசமயம், சீனசமயங்கள், பார்சிசமயம், இஸ்லாமிய சமயம் ஆகிய சமயங்கள் கூறும் முக்கிய புனிதமான கருத்துக்கள் உள்ளடங்குகின்றன. இதில் 75% க்கு மேல் இந்திய சமயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறிருக்க இந்நூற்றொகுதியில் உள்ள 50 நூல்களில் 21 நூல்கள் இந்து சமயம் சார்ந்ததாக காணப்படுகின்றன. இவற்றில் மூன்று தொகுதிகளில் (1ஆம், 15ஆம், 32ஆம் தொகுதிகள்) பதிப்பாசிரியரான மக்ஸ்முல்லரின் நூல்கள் காணப்படுவதோடு ஏனைய 18 தொகுதிகளில் கஷிநாத் ட்ரிம்பக் டெலங் (Kashinath Trimbak Telang), ஜோர்ஜ் திபாட் (George Thibaut), மோரிஸ் புளூம்பீல்ட் (Maurice Bloomfield), ஹேர்மன் ஓல்டன்பேர்க் (Hermann Oldenberg), ஜூலியஸ் எஜலிங் (Julius Eggeling), ஜோர்ஜ் பெலர் (Georg Buhler), ஜூலியஸ் ஜொலி (Julius Jolly), போன்ற ஏழு ஆசிரியர்களின் நூல்கள் அமையப்பெற்று காணப்படுவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். (அட்டவணை - 02) ஜேர்மன்

### 2.1.2.1 மக்ஸ்முல்லர் (Max Muller)

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்து சமயம் பற்றிய ஆராய்ச்சிகளின் வளர்ச்சி உச்சக்கட்டத்தில் காணப்பட்டது. அவ்வாறிருக்க இந்திய இலக்கியங்களை ஆய்வு செய்து மேல் நாட்டவர்களுக்கு அறிமுகம் செய்வதிலும், அவற்றைப் பதிப்பித்து வெளியிடுவதிலும் 1823ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6ஆம் திகதி ஜேர்மன் தேசத்தில் பிறந்து இந்திய தேசத்தினை ஆராய்ந்த மக்ஸ்முல்லருக்கு நிகராக அக்காலக்கட்டத்தில் வேறு யாரையும் சொல்ல முடியாது. இவரது பணியானது இந்து சமயத்திற்கு மிகப் பெரும் கொடையாகவே அமைந்து காணப்பட்டிருக்கின்றது. இவர் வேத புராண மற்றும் ஒப்பியல் ஆய்வுகளை திறம்பட மேற்கொண்டதோடு ஆய்வின் மூலம் கிடைத்த முடிவுகளை உள்ளதை உள்ளவாறு கூறியதன் விளைவால் பல்வேறு எதிர்ப்புகளை எதிர் நோக்க வேண்டியும் ஏற்பட்டது. எவ்வாறிருப்பினும் மக்ஸ்முல்லரின் இந்து

19 மேலது, பக்.28-30.

சமயம் சார்ந்த ஆய்வுகளின் முடிவுகள் பெரும்பாலும் இந்து சமயத்திற்கு சாதகமாகவே அமைந்திருந்தது. அந்தவகையில் இவரால் உருவாக்கப்பட்ட கிழக்கத்திய புனித நூல்களைப் (The Sacred Books of the East) பற்றி பார்ப்பதற்கு முன்பதாக இவருடைய இந்துசமயம் சார்ந்த ஏனைய ஆய்வுகளை சுருக்கமாக நோக்குவது அவசியமாகும்.

வேத காலத்து நாகரிகமே ஐரோப்பிய செவ்விய பண்பாடுகளுக்கு முன்னோடியானது என்ற சிந்தனையானது பத்தொன்பதாம் நூற்றாண்டில் வலுவடைந்திருந்தது. இதனை பின்னணியாகக் கொண்டே மக்ஸ்முல்லரது வேதம் பற்றிய ஆய்வு முடிவுகள் தீவிரமாகவும், எதிர்பார்ப்பினை ஏற்படுத்துவனவாகவும் அமைந்திருந்தன. இவ்வாறிருக்க ஜேர்மனிய தேசத்தைச் சேர்ந்த மக்ஸ்முல்லரை இங்கிலாந்து அரசாங்கத்திற்கு பாரன் கிறிஸ்டியன் கார்ல் ஜோஸியஸ் வான் புன்ஸென் (Baron Christian Karl Josius von Bunsen) என்பவர் அறிமுகம் செய்தார்.[20] இதனைத் தொடர்ந்து 1847ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ஆம் நாள் கிழக்கிந்திய வர்த்தக கம்பனியானது ரிக் வேதத்தினை மொழி பெயர்க்கும் பணியினை மக்ஸ்முல்லருக்கு வழங்கியது.[21]

கிழக்கிந்திய கம்பனிக்கு இந்த ரிக் வேத மொழி பெயர்ப்பில் உள்ள ஈடுபாடானது கிறிஸ்தவ சமயத்தினை பரப்புவதற்காகவும், சிறந்த வருமானத்திற்காகவும், இந்திய மக்களின் நன்மதிப்பினை பெறுவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட ஒரு சதிச் செயலாகவே பெரும்பாலும் காணப்பட்டது. ஆனால் மக்ஸ்முல்லரின் இந்த மொழி பெயர்ப்பில் உள்ள ஈடுபாடானது இத்தகைய நோக்கங்களை பிரதானமாக கொண்டிருக்கவில்லை. இதனை பல ஆதாரங்களின் (கடிதங்கள், குறிப்புக்கள்) மூலமாக அறியலாம். குறிப்பாக மலபாரி என்பவருக்கு எழுதிய கடிதத்தில்

**“வேதம் தொன்மையான ஆவணம், மிகப் பழங்காலத்துச் சூது வாது அற்ற மனித இனத்தின் சிந்தனைகளே வேதம்”[22]**

என்று கூறியதிலிருந்தும், செவாலியே புன்ஸென் என்பவருக்கு எழுதிய கடிதத்தில்

---

20 மேலது, பக்.9-10.

21 மேலது, பக்.10-11.

22 மேலது, ப.13.

**"ஒரு சமயப்பரப்பாளனாக இந்தியாவிற்கு செல்ல நான் விரும்பவில்லை. அது ஊர்ச் சமயபோதகரின் தயவை வேண்டியிருக்க வேண்டியதாகிவிடும். ஓர் ஆட்சிமுறை அதிகாரியாக ஆவதிலும் அக்கறையில்லை. இது அரசாங்கத்தை அண்டியிருக்க வேண்டியதாகிவிடும்"**[23]

*என்று கூறியதிலிருந்தும் மக்ஸ்முல்லர் மிகவும் ஆர்வத்துடனும், சிரத்தையுடன் ரிக் வேதத்தினை மொழிபெயர்த்திருப்பது தெரிய வருகின்றது.*

*ரிக் வேதம் முழுவதையும் முழுமையாக மொழி பெயர்க்கும் நோக்கத்தோடு ஈடுபட்ட இவர் இங்கிலாந்திலுள்ள வேதம் தொடர்பான ஏட்டுச் சுவடிகளையும், குறிப்புக்களையும் ஆதாரமாகக் கொண்டதோடு ரிக் வேதத்திற்கு சாயனரால் எழுதப்பட்ட உரையை மையமாகக் கொண்டே இம் மொழி பெயர்ப்பினை மேற்கொண்டார்.*[24] ***1028*** *பாசுரங்களையும்,* ***10580*** *செய்யுள்களையும்,* ***153826*** *வார்த்தைகளையும் கொண்ட ரிக் வேதத்தினை மொழி பெயர்க்க உண்மையான ஈடுபாட்டுடனும், விடாமுயற்சியுடனும்* ***1849****ஆம் ஆண்டு ஆரம்பித்த இவர்* ***25*** *வருட கால உழைப்பின் பின்* ***1874****ஆம் ஆண்டு முழுமையாக மொழி பெயர்த்து பதிப்பித்து வெளியிட்டார். இது இவரது மிகப் பெரும் சாதனையாகவே கொள்ளப்படுகின்றது. இவர் தனக்கு கிடைத்த இந்த வாய்ப்பினை*

**"...... அதிஸ்டவசத்தால் இந்த இறைமையாளர்களின் மிக ஆணித்தரமான விளக்கவுரையோடு ரிக் வேதத்தை முதன்முதலாகவும், முழுமையாகவும் பதிப்பிற்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது." எனக் கூறுகின்றார்.**[25]

*மக்ஸ்முல்லர் வேத காலம் பற்றி கூறும் போது இயற்கையில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்விற்கும் காரண காரிய தொடர்பை கற்பிக்கின்ற தன்மை வேதகாலத்தில் காணப்பட்டது. மனித ஆற்றலுக்கும், இயற்கையின் இயங்கு நிலைக்கு அப்பாற்பட்டதும் இவற்றை இயக்கி நிற்பதுமான மூலப் பொருள் உள்ளது என்ற நம்பிக்கையே வேதங்களில் தெய்வம் எனச் சித்திரிக்கப்பட்டு*

---

23 *மேலது, ப.22.*

24 *மேலது, பக்.12-13.*

25 *மேலது, பக்.13-14.*

உபநிடதங்களில் பிரம்மம் எனும் தத்துவநிலைக்கு முதிர்ச்சியடைந்தது எனக் கூறுகின்றார். மேலும் வேதகால இறைத் தத்துவ கோட்பாட்டினை பலவாறு பகுத்துக் கூறுகின்றார்.[26]

- **அனைத்திறைமைக் கோட்பாடு :-** ஆரம்ப காலத்தில் வேத கால மனிதன் இயற்கை சக்திகளை (மழை, இடி, தீ, காற்று, நீர்) நேரடியாகவே வணங்கினான் இதனையே அனைத்திறைமைக் கோட்பாடு எனும் பொருள்தரும் பதத்தில் மக்ஸ்முல்லர் குறிப்பிடுகின்றார்.

- **பல கடவுட்கோட்பாடு (பொலித்தீயிசம்) :-** காலப்போக்கில் அச்சக்திகளுடன் தொடர்புடையதாக தெய்வங்களை உருவகித்து வழிபட்டனர் இதனையே பல கடவுள் கோட்பாடு எனும் பொருள்தரும் பதத்தில் மக்ஸ்முல்லர் குறிப்பிடுகின்றார்.

- **ஒரு தெய்வ கோட்பாடு (மொனோதீசம்) :-** "ஏகம் சத் விப்ரா பஹீதா வதந்தி" என்ற வாசகத்திற்கு அமைவான கோட்பாடு அதாவது உள் பொருள் ஒன்றே அதனையே அறிஞர்கள் பலவாறு கூறுவர் என்ற தமிழில் பொருள் தரும் இவ்வாசகம் ஒரு தெய்வ கோட்பாட்டினை கூறி நிற்பதாக மக்ஸ்முல்லர் குறிப்பிடுகின்றார்.

- **ஹெனோதீயிஸம் :-** ஒவ்வொரு கடவுள் ஒவ்வொரு நேரத்தில் உயர்நிலையில் வைக்கப்பட்டு ஒரு கடவுளையடுத்து இன்னொரு கடவுளை வழிபடுதலை ஹெனோதீயிஸம் எனும் பதத்தில் மக்ஸ்முல்லர் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு வேதம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட மக்ஸ்முல்லர் இந்து புராணங்களைப் பற்றியும் விளக்கங்களை எழுதியுள்ளார். இயற்கைச் சக்திகளது யதார்த்த பூர்வமான உருவங்களை புராணக்கதைகள் என அவர் வலியுறுத்தினார். நுட்பமான கருத்துக்களை விளக்குமிடத்து தேவர்கள் தோன்றினார்கள் எனவும், கற்பனை பாத்திரங்களாக அவர்கள் மாற்றமடைந்தனர் என்று அவர் குறிப்பிட்டு விளக்குகின்றார்.

அடுத்ததாக இவருடைய ஒப்பியல் சார்ந்த ஆய்வானது பல விமர்சனத்திற்கு உள்ளான ஆய்வாக காணப்படுகின்றது. ஆரியப்பண்பாடுகளுக்கும், யூத,

---

26 மேலது, பக்.15-18.

கிறிஸ்தவ சமயங்களுக்கும் இடையிலான ஒன்றுபட்ட தன்மையினை வெளிப்படுத்த முனைந்த இவர் புராதன இந்தியர்களும் இந்து ஐரோப்பியர்களும் ஒரு மொழிக் குடும்பத்தின் வழிவந்தவர்கள் எனும் இனபேதம் கடந்த கருத்தினை முன்வைத்துள்ளார்.[27] இருப்பினும் இவரின் இவ்வாய்வானது பூரணமடையவில்லை இதற்கான பிரதானமான காரணமாக இவர் இக் கருத்தினூடாக கிறிஸ்தவ எதிர்ப்பை சம்பாதித்ததினையே குறிப்பிட முடியும்.

கிழக்கத்திய புனித நூல்கள் (The Sacred Books of the East) எனும்; நூலின் ஆசிரியரான மக்ஸ்முல்லர் அந் நூலின் ஐம்பது தொகுப்புக்களிலே 1ஆம், 15ஆம், 32ஆம் தொகுதிகளில் தனது நூல்களை உள்ளடக்கியதோடு முப்பதாவது தொகுதியினை ஹேர்மன் ஓல்டன்பேர்க் (Hermann Oldenberg) என்பவரின் ஆக்கத்துடன் இணைந்து தனது நூலினையும் வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

மக்ஸ்முல்லரின் 1ஆம் மற்றும் 15ஆம் தொகுதிகள் இந்து தத்துவங்களை சிறப்பாக வெளிப்படுத்தும் உபநிடதங்களைப் பற்றியதாக அமைகின்றது. **"உபநிடதங்கள், பகுதி 2 இல் 1** (The Upanishads, Part 1 of 2)" எனும் பெயரில் அமையப் பெற்ற 1 ஆம் தொகுதியானது சாந்தோக்கிய உபநிடதம், தலவகார (கேன) உபநிடதம், ஐதரேய உபநிடதம், கௌசீதகி உபநிடதம், வாஜசானேயி (ஈச) உபநிடதம் போன்ற உபநிடதங்களைப் பற்றியும் அதில் பொதிந்து காணப்படும் தத்துவார்த்த விடயங்கள் பற்றியும் சிறப்பாக பேசுகின்றது.[28] இதனைத்தவிர உபநிடத வகைகள், உபநிடத மகா வாக்கியங்களுக்கான விளக்கங்கள், உபநிடதங்களின் உப யோகங்கள் போன்றன பற்றி வளக்கப்படுவதோடு அவை பற்றிய விமர்சன ரீதியிலான கருத்துக்களும் இத் தொகுதியில் கூறப்பட்டுள்ளன.

அடுத்ததாக மக்ஸ்முல்லரின் 15 ஆம் தொகுதியானது **"உபநிடதங்கள், பகுதி 2 இல் 2** (The Upanishads, Part 2 of 2)" எனும் பெயரில் அமையப்பெற்று கட உபநிடதம், முண்டக உபநிடதம், தைத்திரீய உபநிடதம், பிருகதாரண்ய உபநிடதம், சுவேதாஸ்வர உபநிடதம், பிரசன்ன உபநிடதம், மைத்ராயினி உபநிடதம் போன்ற உபநிடதங்களை விளக்குவதாக இத் தொகுதி காணப்படுகின்றது.

27 மேலது, பக்.24-25.

28 மேலது, பக்.47-48.

1891ஆம் ஆண்டு மக்ஸ்முல்லரினால் எழுதிப்பதிப்பிக்கப்பட்ட இந் நூலினுடைய 32வது தொகுதியானது **"வேத கீர்த்தனைகள் பகுதி 2 இல் 1** (Vedic Hymns, vol. 1 of 2)" எனும் பெயரில் அமையப் பெற்றுள்ளது. இதில் வேத கால தெய்வங்களாகிய இந்திரன், உருத்திரன், வாயு ஆகியோர் பற்றிய மந்திரங்கள் விளக்கப்பட்டுள்ளதோடு 550 கீர்த்தனைகளில் இத் தொகுதி விளக்கப்பட்டுள்ளது. இதனைப்போன்று முப்பதாவது தொகுதியில் ஒல்டன்பேர்க் (Hermann Oldenberg) என்பவரின் ஆக்கத்துடன் இணைத்து "யஜன பரிபாச சூத்திரம்" எனும் தலைப்பில் தன் ஆக்கத்தினை வெளிப்படுத்தியுள்ளார்.[29]

## 2.1.2.2 ஜோர்ஜ் பெலர் (George Buhler)

July 19, 1837ஆம் ஆண்டு பிறந்து April 8, 1898 வரையான காலப்பகுதியில் வாழ்ந்தவரான ஜோர்ஜ் பெலரின் (George Buhler) மூன்று நூல்கள் கிழக்கத்திய புனித நூல்கள் (The Sacred Books of the East) எனும் தொகுப்பு நூலிலே 2ஆம், 14ஆம், 25ஆம் தொகுதிகளில் மக்ஸ்முல்லரினால் இணைக்கப்பட்டுள்ளன. இவை மூன்றுமே **இந்து சட்டங்கள்** (low) பற்றியதாகவே காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது..

அந்தவகையில் 1879ஆம் ஆண்டு இவரால் The Sacred Laws of the Aryas, vol. 1 of 2 எனும் தலைப்பில் எழுதப்பெற்ற நூலானது கிழக்கத்திய புனித நூல்கள் (The Sacred Books of the East) நூலில் 2ஆம் தொகுதியில் மக்ஸ்முல்லரினால் வைக்கப்பெற்றுள்ளது. இந்நூலானது ஆரிய சட்டம் தொடர்பான ஆபஸ்தம்ப, கௌதம, ஸ்மிருதிகளில் கூறப்பட்ட சட்ட நுணுக்கங்களை விளக்குவதாக அமைகின்றது.[30] இதில் ஆபஸ்தம்ப ஸ்மிருதி 29 காண்டங்களிலும், கௌதம ஸ்மிருதி 15 பகுதிகளிலும் விளக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அந்தவகையில் 1882ஆம் ஆண்டு இவரால் The Sacred Laws of the Aryas, vol.2 of 2 எனும் தலைப்பில் எழுதப்பெற்ற நூலானது The Sacred Laws of the Aryas, vol. 1 of 2 எனும் இவரது முன்னைய நூலின் தொடர்ச்சியாகக் காணப்படுகின்றது. 14ஆம் தொகுதியில் மக்ஸ்முல்லரினால் இந்நூல்

---

29 மேலது, ப.60.

30 மேலது, பக்.51-53.

வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வசிட்ட ஸ்மிருதி 30 சிறு பகுதிகளிலும், பௌதாயன ஸ்மிருதி 8 அத்தியாயங்கள் மற்றும் 4 சிறு பகுதிகளிலும் விளக்கப்பட்டுள்ளன. இதனைப்போன்று The Laws of Manu எனும் ஜோர்ஜ் பெலரின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலானது 25ஆம் தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 2.1.2.3 ஜோர்ஜ் திபாட் (George Thibaut)

ஜேர்மனியிலே 1848ஆம் ஆண்டு பிறந்து இங்கிலாந்தில் தனது கல்வி செயற்பாட்டினை முன்னெடுத்துச் சென்ற ஜோர்ஜ் திபாட் (George Thibaut) 1875ஆம் ஆண்டு வாரனாசி அரச சமஸ்கிருத கல்லூரியில் (Government Sanskrit College, Varanasi) பேராசிரியராகவும் கடமையாற்றியுள்ளார் இவரால் எழுதப்பெற்ற மூன்று நூல்கள் கிழக்கத்திய புனித நூல்களில் (The Sacred Books of the East) 34ஆம், 38ஆம், 48ஆம் தொகுதிகளில் இடம்பிடித்துள்ளன.

இந்த மூன்று தொகுதிகளில் இடம் பெற்றுள்ள மூன்று நூல்களும் வேதாந்த சூத்திரம் பற்றியதாகும். The Vedanta-Sutras, vol. 1 of 3 (1890s), The Vedanta-Sutras, vol. 2 of 3 (1896), The Vedanta-Sutras, vol. 3 of 3 (1904) எனும் இம் மூன்று நூல்களும் முறையே 34ஆம், 38ஆம், 48ஆம் தொகுதிகளில் இடம்பிடித்துள்ளன. அந்தவகையில் 34ஆம் தொகுதியில் வேதாந்த சூத்திரத்தின் முதலாம், இரண்டாம் அத்தியாயங்கள் விளக்கப்பட, 38ஆம் அத்தியாயத்தில் இரண்டாம் அத்தியாயத்தின் மீதியும், மூன்றாம் நான்காம் அத்தியாயங்களும் விளக்கப்பட்டுள்ளன. 48ஆம் தொகுதியானது இந் நான்கு அத்தியாயங்களையும் கொண்டு வேதாந்த சூத்திரம் விளக்கப்பட்டுள்ளது.[31]

### 2.1.2.4 ஜூலியஸ் எஜலிங் (Julius Eggeling)

1842ஆம் ஆண்டு பிறந்து 1918ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வாழ்ந்தவரான இவரின் ஐந்து நூல்கள் கிழக்கத்திய புனித நூல்கள் (The Sacred Books of the East) எனும் தொகுப்பு நூலிலே 12ஆம், 26ஆம், 41ஆம் 43ஆம், 44ஆம் தொகுதிகளில் மக்ஸ்முல்லரினால் இணைக்கப்பட்டுள்ளன. இவை முறையே 1882, 1885, 1894, 1897, 1900 ஆகிய ஆண்டுகளிலே வெளிவந்தவைகளாகும். இது The Satapatha Brahmana according to the

31 மேலது, பக்.50-51.

text of the Mâdhyandina school எனும் பெயரில் ஐந்து தொகுதிகளிலும் ஐந்து பகுதிகளாக சதபத பிராமணத்தினை காண்டங்கள், அத்தியாயங்கள், பிரமாணங்கள் என தொடர்ச்சியான ஒரு தொடர்பிலே விளக்குகின்றன.[32]

### 2.1.2.5 ஹேர்மன் ஓல்டன்பெர்க் (Hermann Oldenberg)

October 31, 1854ஆம் ஆண்டு பிறந்து March 18, 1920ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வாழ்ந்தவரான ஹேர்மன் ஓல்டன்பேர்க் (Hermann Oldenberg) மூன்று நூல்கள் கிழக்கத்திய புனித நூல்கள் (The Sacred Books of the East) எனும் தொகுப்பு நூலிலே 29ஆம், 30ஆம், 46ஆம் தொகுதிகளில் மக்ஸ்முல்லரினால் இணைக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

29ஆம், 30ஆம் தொகுதிகளில் காணப்படும் The Grihya-sutras; rules of Vedic domestic ceremonies. vol. 1 of 2 (1886), The Grihya-sutras; rules of Vedic domestic ceremonies. vol. 2 of 2 (1892) எனும் இரண்டு நூல்களும் கிரியை சூத்திரம் பற்றி விளக்குகின்றன. இவற்றுள் 29வது தொகுதியானது சங்காயன கிரியை சூத்திரம், பரஸ்கர கிரியை சூத்திரம் பற்றி கூறும் அதேவேளை 30வது தொகுதியானது ஹொலாவின் கிரியை சூத்திரம், ஹிரண்யகேசரின் கிரியை சூத்திரம், ஆபஸ்தம்பரின் கிரியை சூத்திரம் போன்றவற்றினைப்பற்றி விளக்குகின்றது. இதனைப்போன்று 1897ஆம் ஆண்டு Vedic Hymns, vol. 2 of 2 எனும் நூலானது 46வது தொகுதியாக வெளிவந்தது. இது இருக்கு வேதத்தில் காணப்படும் மந்திரங்களைப்பற்றி விபரிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

### 2.1.2.6 மோரிஸ் புளூம்பீல்ட் (Maurice Bloomfield)

அமெரிக்க தேசத்தினைச் சேர்ந்த அறிஞரான இவர் February 23, 1855 ஆம் ஆண்டு பிறந்தவராவார். இவரினுயை நூலான Hymns of the Atharvaveda, Together With Extracts From the Ritual Books and the Commentaries எனும் நூலானது 42 தொகுதியில் இடம் பெற்று 1897ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

இத் தொகுதியில் அதர்வவேதப் பாடல்கள் முக்கியத்துவப்படுத்தப்பட்டு விளக்கப்படுகின்றன. உதாரணமாக நோய்களைத் தீர்க்கும் பேஷயாணி மந்திரம், நீண்ட ஆயுளையும் ஆரோக்கிய வாழ்வையும் தரும் ஆயுஷயாணி மந்திரம், சாபத்தினால் ஏற்படும் பிரச்சினைகளை தீர்க்கும் அபிகர்மாணி

32 மேலது, ப.56.

மற்றும் கிரித்யபிரதிகரனாணி மந்திரம், பெண்களுடன் தொடர்புடைய ஸ்திரிகர்மாணி மந்திரம், அரசுடன் தொடர்புடைய ராஜகரமாணி மந்திரம் என பல்வேறு வகையான அதர்வ வேத மந்திரங்களைப்பற்றி இத் தொகுதியானது விபரித்துக் கூறுகின்றது.

### *2.1.2.7 கஷிநாத் ட்ரிம்பக் டெலங்* (Kashinath Trimbak Telang)

இந்திய தேசத்தினைச் சேர்ந்த பம்பாய் உயர் நீதிபதியான இவர் August 20, 1850 ஆம் ஆண்டு பிறந்தவராவார். இவரினுடைய நூலான The Bhagavadgita With the Sanatsugâtiya and the Anugitâ எனும் நூலானது 08 ஆம் தொகுதியில் இடம் பெற்று 1882ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இது பகவத் கீதையினைப் பற்றி விபரிக்கும் அதே வேளை அனுகீதையினையும் கூறி நிற்கிறது. பகவத் கீதை 18 பிரிவுகளிலும், அனுகீதை 26 பிரிவுகளிலும் விளக்கப்பட்டுள்ளன.

### *2.1.2.8 ஜூலியஸ் ஜொலி* (Julius Jolly)

28 December 1849ஆம் ஆண்டு பிறந்து 24 April 1932ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வாழ்ந்தவரான இவர் ஜேர்மன் நாட்டினைச் சேர்ந்தவராவார்.[33] இவரது இரண்டு நூல்கள் கிழக்கத்திய புனித நூல்களிலே (The Sacred Books of the East) 07ஆம், 33ஆம் தொகுதிகளில் இணைக்கப்பட்டு முறையே 1880, 1889 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டன.

07ஆம் தொகுதியில் இடம்பெறும் The Institutes of Visnu எனும் இவரது நூலானது சட்டம் பற்றி விரிவாக விளக்குகின்றது. நால்வகை வர்ணத்தார், அரசரின் கடைமைகள், குற்றம் மற்றும் சிவில் சட்டங்கள், கடனுக்குரிய சட்டங்கள், சாட்சிகள் என்பன பற்றி விளக்கப்படும் அதேவேளை நீதிப்பிரச்சினைகள், உரிமைகள், இறப்புச்சம்பவங்கள், பலி கொடுத்தல், குடும்பத்தினரின் கடைமைகள், நரகம், பிராயச்சித்தம், பக்தியால் ஏற்படும் பயன்கள் என பல்வேறு விடயங்களை இத் தொகுதியில் இந் நூல் ஆராய்கின்றது.

இதனைப்போன்று 33ஆம் தொகுதியில் காணப்படும் இவரது மற்றைய

33 http://en.wikipedia.org/wiki/Julius_Jolly

நூலும் இந்து சட்டம் பற்றிய தகவல்களை விளக்குவதாக காணப்படுகின்றது. The Minor Law-Books: Brihaspati எனும் பெயரில் அமையப்பெற்ற இந்த நூலில் நாரத ஸ்மிருதி பற்றி விளக்கப்பட்டுள்ள அதேவேளை சட்ட ரீதியான செயல்முறைகள், குற்றச்சாட்டுக்கள், நீதிமன்றங்கள் போன்றவற்றினைப்பற்றிய அறிமுகத்தினையும் வழங்குகின்றது.[34] மேலும் கடன் பற்றிய சட்டங்கள், முறையான மற்றும் முறையற்ற தொழில்கள், சொத்துக்கள், வட்டிக்கு பணம் கொடுத்தல், இழப்பை எதிர்த்த உத்தரவாதம், அடமானம், தகுதி குறைவான சாட்சி, பிழையான சாட்சி, சரியான மற்றும் பிழையான ஆதாரங்கள் என்பன பற்றியும் சிறப்பாக இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன.

இவ்வாறு சமஸ்கிருத மொழியில் அமைந்து காணப்பட்ட இந்து சமயத்தின் மூலங்களை உலக மொழியான ஆங்கிலம் உட்பட பல மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்ததோடு அதனை ஆராய்ச்சிக்கும் உட்படுத்தி இந்து சமய அருமை பெருமைகளை மேற்கூறியவாறு மேலைத்தேசத்து அறிஞர்கள் உலகிற்கு அம்பலப்படுத்தியமையினாலேயே இன்று இந்து சமயத்தின் பரம்பலை உலகம் முழுவதும் காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக உலக பொது மொழியான ஆங்கிலத்தில் இந்து மூலங்கள் மொழிபெயர்க்கப்பட்டமையானது பெரும்பாலான மக்களின் இந்து சமய ஈர்ப்பிற்கு அடிப்படையாக அமைந்ததாகவே காணப்படுகின்றது.

## 2.2 மேலைத்தேசத்தவர்களின் இன்றைய இந்து ஆச்சிரமங்கள்

இந்து சமய உலகமயமாதலில் வெளிநாட்டவர்களுக்கு மிகப் பெரும் பங்கு இருப்பதனை மேற்கூறிய பகுதியில் தெளிவாக ஆராய்ந்தோம். அவ்வாறிருக்க உலக நாடுகளில் இந்து சமயம் தற்சமயம் மிகச்சிறப்பாக காணப்பட்டு வருகின்றது அதில் சுதேச இந்துக்கள் தவிர்ந்த (இந்தியா, இலங்கை உட்பட கீழைத்தேச நாடுகளில் இருந்து பல காரணங்களின் நிமித்தம் வெளி நாடுகளுக்குச் சென்று இந்து சமய செயற்படுகளில் ஈடுபடுதலை தவிர்த்து) வெளிநாட்டவர்களினால் வெளிநாடுகளில் இந்து சமயமானது தனி நபர்களினாலும், குழுக்களினாலும், சுதேச இந்து அமைப்புக்களுடன் இணைந்தும், சிறந்த முறையில் தற்சமயம் கடைப்பிடிக்கப்பட்டும், பேணப்பட்டும் வரப்படுகின்றது.

34 சுபராஜ்.ந., (2012), Nk.$.E}> பக்.41,54,55.

ஒரு நாட்டினுடைய எதிர்காலத்தினை பலப்படுத்தும் பல்கலைக்கழகங்களிலும் இந்து சமயமானது கற்றல் செயற்பட்டின் ஊடாக உலகத்திற்கு வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது குறிப்பாக உலகில் காணப்படும் பல உயர் கற்கை நிறுவனங்களில் இந்து சமயம் சிறப்பாக போதிக்கப்பட்டும் உள்வாங்கப்பட்டும் வருகின்றது. எடுத்துக்காட்டாக பிரித்தானியாவில் உள்ள oxford பல்கலைக்கழகம் (University Of Oxford), அமெரிக்காவில் அமைந்துள்ள இந்து பல்கலைக்கழகம் (Hindu University Of America), கனடாவில் உள்ள concordia பல்கலைக்கழகம் (Concordia University), கலிபோர்ணியாப் பல்கலைக்கழகத்தில் உள்ள இந்து கற்கைகள் நிலையம், நீயு கரோலினா மாகாணத்தில் உள்ள இந்துக் கற்கைகள் நிலையம், கலிபோர்ணியாவில் உள்ள மகரிஷி முகாமைத்துவப் பல்கலைக்கழகம், அவுஸ்ரேலியாவில் உள்ள வேதகால வானியல் கல்லூரி, தென்னாபிரிக்காவில் உள்ள சமாதான கற்கைகள், ஆன்மீகம் மற்றும் கலாசார பீடம் போன்றவற்றை சிறப்பாக கூறலாம்.35

இவ்வாறிருக்க மேலைத்தேச நாடுகளிலும் இந்து சமயமானது மேற்கூறியவாறு பல வழிகளில் சிறந்த முறையில் காணப்படுவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அவ்வாறிருக்க இப்பகுதியில் எனது ஆய்வுத்தலைப்பினை அடிப்படையாகக் கொண்டும் விரிவஞ்சியும் மேலைத் தேசத்தவர்களினால் உருவாக்கப்பட்டு தற்சமயம் சிறப்பாக இயக்கப்பட்டு வரும் நான்கு ஆச்சிரமங்களை ஆய்வு ரீதியில் பார்க்கவுள்ளேன்.

இந்து சமய மூலங்களான அதாவது வேதங்கள், உபநிடதங்கள், இதிகாச புராணங்கள், தர்மசாஸ்திரங்கள் போன்றவற்றில் பொதுவாக ஆச்சிரமம் என்பது உலக இன்ப துன்பங்களில் இருந்து விடுபட்டு இறை இன்பத்தினை நாடுபவர்கள் (யோகிகள், துறவிகள்) வாழும் இடம் என்ற பொருளிலேயே விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்து சமய பாரம்பரியங்களை சிறந்த முறையில் பேணுவதோடு இறை உண்மையானது அறியப்பட வேண்டிய ஒன்று அதனாலேயே இவ்வுடல் கிடைக்கப்பெற்றுள்ளது என்ற உண்மையை உணர்ந்து இந்து வழி நின்று உண்மையை அறிய முற்படும் ஆச்சிரமங்களாகவே இந்த நான்கு ஆச்சிரமங்களும் காணப்படுகின்றன. இவை தான் அறிந்த இந்து சமய உண்மைகளை மற்றவர்களுக்கும் வெளிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

35 திருமதி. எஸ். கேசவன், அருள்நேசன்.பு, (2013), Nk.$.E}> ப.60

### 2.2.1 சுவாமி கீதானந்த ஆச்சிரமம் (Svami Gitananda Ashram)

ஐரோப்பிய நாடான இத்தாலியில் அமையப்பெற்ற இவ்வாச்சிரமமானது 1984ஆம் ஆண்டு யோகானந்த கிரி என்பவரால் (பார்க்க படம்:01) புஜ பரமஹம்ச மஹாராஜ் யோகசிரோமணி புராணாச்சாரிய சுவாமி கீதானந்த கிரி (Puja Paramahamsa Maharaj Yogashiromani Purnacarya dr. Svami Gitananda Giri) அவர்களின் (பார்க்க படம்:02) ஞாபகார்த்தமாக உருவாக்கப்பட்டு உலகம் பூராகவும் இந்து யோகாவின் ஊடாக இந்து உண்மைகளை பரப்பி வருகின்றது.

தற்சமயம் சுவாமி யோகானந்த சுவாமி யோகப் பயிற்சியினை உலகளாவிய ரீதியில் வழங்கி வருகின்றார் இவரது யோகா சம்மந்தமான அறிவானது இந்திய சித்தர் பரம்பரை வழியாக வந்ததாக கிடைக்கப் பெற்றதாக கூறப்படுகின்றது. அந்தவகையில் அப்பரம்பரை மரபானது மேல்வருமாறு அமையப்பெற்றுள்ளது.

அகத்திய முனிவர்
↓
கம்பிலி சுவாமிகள்
↓
அம்பலவாண சுவாமிகள்
↓
மாணிக்கவாசக சுவாமிகள்
↓
விஷ்ணு முக சுவாமிகள
↓
சுப்பிரமணிய சுவாமிகள்
↓
சங்ககிரி சுவாமிகள்
↓
கீதானந்த கிரி சுவாமிகள்
↓
யோகானந்த கிரி சுவாமிகள்
↓
அம்மா மீனாட்சி தேவி, ஆனந்த பவானி

யோகா பயிற்சியினை மையமாகக் கொண்டிருந்தாலும் சைவ சித்தாந்தம், சாக்த தந்திரவியல், சங்கராச்சாரியர் போன்ற பாரம்பரிய கோட்பாடுகள் பற்றியும் இவ்வாச்சிரமத்தில் கற்பிக்கப்படுகின்றன. (பார்க்க படம்:03) அதாவது தென்னிந்தியாவில் சிறந்த முறையில் வளர்ச்சி கண்ட சைவ சித்தாந்த நெறியினை முதன்மைப்படுத்தும் இவ்வாச்சிரமம் சைவ சித்தாந்தத்தில் சக்திக்கு கொடுக்கப்பட்ட இடத்தினை அடிப்படையாகக் கொண்டு சாக்த நெறியை இவர்கள் முதன்மைப் படுத்திய அதேவேளை சைவ சித்தாந்தத்தில் கூறப்படும் முத்தியானது சங்கரரின் அத்வைத முத்தியோடு நெருங்கிய தொடர்புடையமையால் சங்கராச்சாரியரையும் இணைத்திருக்கக் கூடும் என்பது புலனாகிறது.

## 2.2.2 திவ்விய லோகா ஆச்சிரமம் (Divya Loka Ashram of Russia)

ரஸ்யாவில் பல காலமாக இயங்கி வரும் இவ்வாச்சிரமமானது தனி ஒரு நபரால் உருவாக்கப்பட்டதன்று இது யோகா பயிற்றுவிப்பாளரும், வேத தத்துவவியலாளருமான சுவாமி விஷ்ணுவேதானந்த குருஜீ மஹாராஜா அவர்களின் கருத்துக்களை மையமாக வைத்து வேதம் கூறும் வாழ்க்கை முறைகளை கடைப்பிடிப்பதன் ஊடாகவும் யோகா பயிற்சியினை மேற்கொண்டு வருவதன் ஊடாகவும் இந் நாட்டில் வாழ்ந்த ஒரு பகுதியினர் இந்து சமய ஆச்சிரம தர்மத்தினை நீண்ட காலமாக கடைப்பிடித்து வந்துள்ளனர்.[36]

முதன் முதலாக இவ்வாச்சிரமத்திற்கென 2001ஆம் ஆண்டு கட்டடத் தொகுதியொன்று கட்டப்பட்டு அங்கு பல மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த இந்து யோகா மற்றும் வேதத்தில் கூறப்பட்ட வாழ்வியல் என்பன பாதுகாக்கப்பட்டதோடு விஸ்தீரணமும் செய்யப்பட்டது. இதன் விளைவால் உயர் சமூக கலாசாரத்தில் இருந்த பலர் சாந்தி, சமாதானம், சந்தோசம் போன்றவற்றை தரக்கூடிய இவ்வமைப்பால் ஈர்க்கப்பட்டு உள்வாங்கப்பட்டனர்.

பின்பு படிப்படியான வளர்ச்சிப்பாதையில் வந்து கொண்டிருந்த இவ்வமைப்பானது ஒரு கட்டத்தில் வேதாந்தத்தில் ஈர்க்கப்பட்டதோடு கட்டடவியல், பொறியியல் துறை, கலைகள் என அனைத்துமே இந்து சமய

36 http://divyaloka.ru/en-us/about-divya-loka/how-it-began

ரீதியானதாக வளர்ச்சிகண்டு வந்து கொண்டிருக்கின்றது. இதன் ஒரு கட்டமாக 2007ஆம் ஆண்டு முதலாவது இந்துக் கோயில் அமைத்ததோடு தொடர்ந்து நடமாடும் சேவைகள், திவ்ய லோகா அமைப்புக்கென தனி பேருந்து சேவை என்பன வளர்ச்சிக்கட்டத்தில் ஏற்பட்டன.

இவ்வாறான படிப்படியான வளர்ச்சிப்பாதையில் வந்த இவ்வமைப்பு தற்சமயம் முழு உலகமே திரும்பிப் பார்க்கக் கூடிய அளவிற்கு ரஸ்யா நாட்டில் இந்து ஆச்சிரமமாக இயங்கி வருகின்றது (பார்க்க படம்:04). அதிகளவான மக்கள் இவ்வாச்சிரமத்திற்கு வருகை தந்து யோக பயிற்சிகளில் ஈடுபடும் அதேவேளை அன்றாடம் வாழ்க்கையில் வேதனைகளையும், கஸ்டங்களையும் சந்திக்கும் பல மக்கள் இங்கு அமைதியை பெறுவதற்காக வருகை தந்த வண்ணம் உள்ளனர்.[37] பல நாடுகளில் இருந்து ரஸ்ய நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலா பிரயாணிகள் இவ்வாச்சிரமத்தின் இயற்கை அழகையும் புனிதத் தன்மையினையும் காண நாள்தோறும் வந்து குவிகின்றனர்.

யோக பயிற்சியினையும், வேத பாரம்பரியத்தினையும் பாதுகாக்கும் நோக்கத்துடன் ஆரம்பித்த இவ்வமைப்பானது தற்சமயம் இவைகளை சிறந்த முறையில் பாதுகாத்து வருவதோடு அதனையும் கடந்து மிஷனாகவும், பல துறவிகள் வாழும் ஆச்சிரமமாகவும் செயற்பட்டு வருவதனை மேற்கூறிய விடயங்களில் இருந்து சிறப்பாக அறிந்து கொள்ளலாம்.

### 2.2.3 பக்தி வேதாந்த ஆச்சிரமம் (The Bhaktivedanta Ashram)

2003ஆம் ஆண்டில் அமெரிக்காவைச் சேர்ந்த பக்தி வேதாந்த இராமகிருஸ்ணானந்த சுவாமி மகாராஜா (பார்க்க படம்:05) என்பவரால் பக்தி வேதாந்த மிஷன் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டு வைணவ பாரம்பரியத்தினை முதன்மைப்படுத்தி இலாப நோக்கம் இல்லாமல் இயங்கிவருகின்ற ஒரு மிஷனாக இந்து சமய உண்மைகளை புத்தகங்கள், CDகள், DVDகள், இணையதளங்கள், கற்கை நெறிகள், கருத்தரங்குகள், தியானப் பயிற்சிகள் (பார்க்க படம்:06) பல்வேறுபட்ட வழிகளிலும் மாணவர்களை மையமாகக் கொண்டு மக்களுக்கு பரப்பி வந்த நிலையில் 2007ஆம் ஆண்டு பக்தி வேதாந்த இராமகிருஸ்ணானந்த

37 http://divyaloka.ru/en-us/about-divya-loka/how-it-began

*சுவாமி மகாராஜா அவர்களால் வைணவ பாரம்பரிய ஆச்சிரமம் ஒன்றும் அமைக்கப்பட்டு சிறந்த முறையில் இயக்கப்பட்டு வருகின்றது.*[38]

*இவ்வாச்சிரமம் அமெரிக்காவில்* (USA) *நியுயோர்க்* (New York) *மாநிலத்தில் அமைந்துள்ள கட்ஸ்கில்* (Catskill) *மலையில் அமைந்துள்ளது. இதன் அமைவிடமும், இங்கு நிலவும் சூழ்நிலையும் இந்து சமயத்தில் ஆச்சிரமமானது எவ்வாறான இடத்தில் எப்படியான சூழ்நிலையில் அமைய வேண்டும் என்று கூறுகின்றதோ அதற்கேற்றவாறு அமைந்தாற் போல் காணப்படுகின்றது.*[39]

*இவ்வாச்சிரமம் உருவாக்கப்பட்டதிலிருந்து சில காலங்கள் கட்ஸ்கில்* (Catskill) *மலையின் கிழக்குப் பகுதில் ஒரு சிறிய இடத்திலேயே இயங்கி வந்தது பின்பு* ***47*** *ஏக்கர் பரப்புள்ள பகுதியினை கொள்ளளவு செய்து தற்போது சிறப்பாக இயங்கி வருகின்றது. இயற்கையால் சூழப்பட்ட இவ்வாச்சிரமத்தில் இந்து சமய குருகுலக்கல்வியும், தியான பயிற்சிகளும், யோகா பயிற்சிகளும் சிறந்த முறையில் குரு தேவரான பக்தி வேதாந்த இராமகிருஸ்ணானந்த சுவாமி மகாராஜாவினால் ஆச்சிரம மாணவர்களுக்கும் வருகைதரு மாணவர்களுக்கும் சிந்தை தெளிய வைக்கப்படுகின்றது.*

## *2.2.4 ஆக்ரா இந்து ஆச்சிரமம்* (The Hindu Monastery of Accra)

*இவ்வாச்சிரமமானது மேற்கு ஆப்பிரிக்காவிலிருக்கும் கானா எனும் நாட்டில் அதன் தலைநகர் ஆக்ராவில் அமைந்துள்ளது. இதன் உருவாக்கம் பற்றி பார்த்தோமானால் ஒரு சாதாரண விவசாய குடும்பத்தில்* ***1937****ல் பிறந்த கெவிஸி ஈஸெல்* (Guide Kwesi Essel) *உண்மையை அறிய மேற்கொண்ட நீண்ட பயணத்தில்* ***1962****ஆம் ஆண்டு இந்தியாவில் உள்ள சிவானந்த ஆச்சிரமத்துடன் தொடர்புகொண்டு இந்துவழி பிராத்தனைக்காக சங்கம் ஒன்றை ஆப்பிரிக்காவில் ஏற்படுத்தினார்.*[40] *பின்பு மீண்டும்* ***1970****ஆம் ஆண்டு*

---

38 http://bhaktivedantaashram.org/vdm_article/the-bhaktivedanta-mission/

39 http://bhaktivedantaashram.org/vdm_article/bhaktivedanta-ashram/ and http://bhaktivedantaashram.org/vdm_article/his-holiness-bhaktivedanta-ramakrishnananda-maharaja-prabhuji/

40 http://www.bbc.co.uk/tamil/news/story/2010/07/100701_ghanahindutemple.shtml

இந்தியாவிற்கு வந்து சிவானந்த ஆச்சிரமத்தில் இரண்டு வருடங்களாக இருந்து ஆச்சிரமம் பற்றியும், அதன் பின்னணி பற்றியும் அறிந்து கொண்டதோடு ஆச்சிரமத்தினை உருவாக்கி அதனை எவ்வாறு பரிபாலிப்பது என்பது பற்றியும் நன்கு அறிந்து கொண்டு தனது நாடு திரும்பி பல தடைகளையும் தாண்டி 1975ஆம் ஆண்டு சுவாமி கானானந்த சரஸ்வதி (பார்க்க படம்:07) என நாம தீட்சையினையும் பெற்றதோடு ஆக்ரா இந்து ஆச்சிரமம் (The Hindu Monastery of Accra) எனும் பெயரில் இவ்வாச்சிரமத்தினை நிறுவினார்.[41]

இவருடைய இந்த ஆச்சிரமத்தில் உறுப்பினர்களாக இணையும் பல சமயத்தினரும் இவரது வழிகாட்டலினால் இந்து சமய பாரம்பரியங்களை சிறப்பாக கடைப்பிடித்து வருகின்றனர். "யாரையும் இந்து சமயத்திற்கு மாற்றமுடியாது. ஏனெனில், ஏனைய சமயங்ளைப் போல் அது வெறும் சமயமல்ல. அது ஒரு வாழ்க்கை முறை. ஒருவார பயிற்சிக்குப் பின்னர் இந்துவாக வாழ விரும்புவர்களை ஏற்று தொடர்ந்து இந்துவாக வாழ அவர்களுக்கு உதவி செய்கின்றோம்" என்று உரைக்கின்றார் சுவாமி கானானந்த சரஸ்வதி அவர்கள்.[42]

இவ்வாச்சிரமத்தில் ஆலயம் ஒன்று காணப்படுகின்றது (பார்க்க படம்:08) . இவ்வாலயத்தின் கோபுர உச்சியில் ஓம் என்ற சின்னமானது அமையப் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவ்வாலயத்தில் சிவன் முதன்மைப்படுத்தப்பட்டாலும் விஷ்ணு, பிள்ளையார், முருகன் போன்ற இந்துக் கடவுளர்களும் வழிபடப்பட்டு வருகின்றனர். இவ்வாலயத்திலே கீர்த்தனைகள் மற்றும் பஜனைகள், ஆராதனைகள், ஹோமம் வளர்க்கும் செயற்பாடுகள், வேத மந்திர உச்சாடனங்கள், என பல விடயங்கள் இந்து பாரம்பரிய முறைப்படி நிகழ்கின்ற அதேவேளை அங்கு நிகழும் பல நிகழ்வுகள் அந்நாட்டு மொழியிலையே நிகழ்த்தப்படுவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். (பார்க்க ஆவணக்காணொளி: 01)

எனவே இவ்வாறான விடயங்களை அடிப்படையாக வைத்து பார்க்கின்ற பொழுது இந்து சமயத்தில் மேலைத்தேசத்தவர்களுக்கு காணப்பட்ட ஈர்ப்பானது அவர்களின் இந்து சமயம் என்ற ஒரு பண்பாடு இந்தியாவில் காணப்படுகின்றது என்ற அறிவு எப்போது ஏற்பட்டதோ அப்பொழுதிருந்தே இந்து சமயத்தால்

---

41 http://www.bbc.co.uk/tamil/news/story/2010/07/printable/100701_ghanahindutemple.shtml

42 http://www.tamilhindu.com/2011/05/hindu-temple-in-ghana

அவர்கள் ஈர்க்கப்பட்டு விட்டார்கள் என்றுதான் கூற வேண்டும். அன்றிலிருந்து இன்றுவரை அவர்களின் நாட்டம் இந்து சமயத்தினை நோக்கி அதிகரித்து வருகின்றதே தவிர குறைவதாக தெரியவில்லை. இவ்வாறிருக்க மேலே பார்த்த நான்கு ஆச்சிரமங்களும் எவ்வாறு இந்து பாரம்பரியத்தினை சிறப்பாக வளர்த்து வருகின்றதோ அதனைப் போன்று பல மடங்கு சிறப்பான இந்து சமய செயற்றிட்டங்களை மேற் கொள்ளும் ஆதீனமாக அமெரிக்காவில் உள்ள காவாய் இந்து ஆதீனம் காணப்படுகின்றது என்றால் அது மிகையாகாது.

# அத்தியாயம் : மூன்று

## அமெரிக்க காவாய் இந்து ஆதீனம்

# அமெரிக்க காவாய் இந்து ஆதீனம்

## 3.0 அத்தியாய அறிமுகம்

இந்தியாவில் "ஆதீனம்" எனும் சொல்லானது தலைமைத்துவமாக இருந்து இந்து சமயத்தினை வளர்க்கின்ற ஒரு அமைப்பாக திகழ்ந்து வருகிறது. அந்தவகையில் குறிப்பாக இந்து ஆலயங்கள் உருவாக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டும் வருவதோடு பல உண்மைச் சீடர்களையும் உருவாக்கி வருகின்றது. இவ்வாதீனத்தினுடைய பாரம்பரியத்தினை தற்சமயம் இந்தியாவில் காணப்படுவதைப் போன்று இரண்டாம் அத்தியாயத்தின் இரண்டாம் பகுதியில் கூறிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு வெளிநாடுகளில் அதிகமாகக் காணப்படுவதனை சிறப்பாக அறிய முடிகின்றது. அவ்வாறிருக்க அமெரிக்காவில் அமையப்பெற்று சுமார் மூன்று தசாப்பத்திற்கு மேலாக சிறப்பாக இயங்கி வரும் காவாய் இந்து ஆதீனமானது இந்து சமய வரலாற்றிலே ஒரு உன்னதமான இடத்தினை பிடித்துள்ளது என்றால் அது மிகையாகாது.

எனவே இவ்வாதீனத்தினுடைய அமைவிடம், தோற்றம், அதன் வளர்ச்சி, ஆதீனம் சிறந்த முறையில் நிர்வகிக்கப்படும் விதம், இன்றைய விஞ்ஞான உலகில் அதன் செயற்பாடுகள், என்று பல தரப்பட்ட விடயங்களை ஆராய்வதாகவே இவ் அத்தியாயம் அமைகின்றது.

## 3.1 ஆதீன அமைவிடம்

நூற்றுக்கணக்கான இந்து ஆலயங்களை கொண்டு காணப்படும் அமெரிக்காவில் இந்து சமயத்திற்கான இடமானது ஒரு தனித்துவம் வாய்ந்த

*நிலையில் காணப்படுகின்றது.*[43] இதனை உறுதிப்படுத்த அமெரிக்க வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதியான ஒபாமா தலைமையில் நிகழ்ந்த இந்து பாரம்பரிய பண்டிகையான தீபாவளிப் பண்டிகையின் நிகழ்வானது மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.[44] (பார்க்க ஆவணக்காணொளி: *02*) இதனைப்போன்று அமெரிக்க அமைச்சரவை ஒன்று கூடலில் தேசிய கீத நிகழ்விற்கு முன்னர் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகளால் மேற்கொள்ளப்பட்ட இந்து சமய செற்பொழிவும் இதனை மேலும் பறைசாற்றி நிற்கின்றது.[45] (பார்க்க ஆவணக்காணொளி: *03*)

இவ்வாறு இந்து சமயம் அமெரிக்காவில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த சமயமாக பார்க்கப்படுவதற்கு பல காரணங்கள் காணப்படுகின்றன. அவற்றில் மிக முக்கிய காரணமாக இந்தியாவில் இருந்து இந்துப்பண்பாட்டின் தூதுவராகச் சுவாமி விவேகானந்தர் சர்வமத அவைக்கு **1893**ஆம் ஆண்டு சென்றமை திகழ்கின்றது. இதற்கு அடுத்த படியாக இவரின் இப் பயணத்தினைத் தொடர்ந்து **1930** ஆம் ஆண்டிலே சிக்காக்கோவில் நிறுவப்பட்ட விவேகானந்த வேதாந்த சபைக்கு முக்கியபங்குண்டு. அதாவது இச்சபையின் செயற்பாட்டின் நிமிர்த்தம் இந்தியாவில் இருந்து துறவிகள், ஊழியர்கள் என பல்வேறு தரப்பினர் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. அவ்வாறு சென்றமையால் இந்து சமயமானது பெரும்பாலும் அங்கு வியாபிக்க அடித்தளமிட்டது என்றால் அதனை யாராலும் மறுக்க இயலாது.

இதனைப்போன்று **1902** ஆம் ஆண்டு சுவாமி இராமதீர்த்தரின் அமெரிக்கா நோக்கிய பயணம், **1949**ஆம் ஆண்டு அமெரிக்கரான சற்குரு சிவாய சுப்பிரமுணனிய சுவாமிகளின் இலங்கை விஜயம், **1965**ஆம் ஆண்டு சுவாமி பிரபுபாதரினால் அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்ட ஹரேகிருஸ்ணா இயக்கம், இராம கிருஸ்ண மிஷனின் உலகளாவிய செயற்பாடுகளும், மோரிஸ் புளூம்பீல்ட் (Maurice Bloomfield) உட்பட்ட அமெரிக்க அறிஞர்களின்

---

43 திருமுருகன்.ஆறு, (*2003*), “மேலைத்தேய நாடுகளில் இந்து சமயம்”, **இரண்டாவது உலக இந்து மகாநாட்டு சிறப்பு மலர்**, ப.464.

44 http://www.youtube.com/watch?v=xGyWBxR3xhs&list=UUf3YsVIzlJ_1RPknIwu4Xsw

45 http://www.youtube.com/watch?v=OnXCq2eN4E0&list=UUr6mOJAX2uZUUQhSUq2TR_Q

இந்து சமயம் சார்ந்த ஆராய்ச்சி ரீதியான விடயங்களும் அமெரிக்காவில் இந்து சமயமானது சிறந்த முறையில் வளர்க்கப்பட காரணங்களாக இருந்தது. அந்தவகையில் அமெரிக்காவில் இந்துசமய பரிணாம வளர்ச்சியில் காவாய் இந்து ஆதீனத்திற்கும் ஒரு தனி இடம் இருப்பதனை காணக்கூடியதாக உள்ளது.

அந்தவகையில் வட பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ள அமெரிக்க நாட்டுக்குரியதான ஹவாய் தீவு அல்லது பெரிய தீவு என்று சிறப்பிக்கப்படும் தீவு காணப்படுகின்றது. இந்தத் தீவை முதன் முதலில் கண்டு பிடித்த பொலினேசியன் கடற் பயண மாலுமியான ஹவாய் இலோவா என்பவரின் ஞாபகார்த்தமாக இப்பெயர் வைக்கப்பட்டது. இதுவே 4028 சதுர மைல்களைக் (10,432கி.மீ) கொண்டு அமெரிக்காவில் காணப்படும் மிகப் பெரிய தீவாக விளங்குகின்றது. இது ஒரு தனித்தீவாக காணப்பட்ட போதிலும் அரசியல் ரீதியாக பல சிறு தீவு கூட்டத்தினை கொண்டு காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. அவ்வாறிருக்க ஹவாய் தீவு கூட்டத்தில் உள்ள ஒரு சிறு தீவாகவே இந்த காவாய் (Kauai) தீவு காணப்படுகின்றது. அத்தீவில் கிழக்குப்பகுதியில் கடற்கரையில் இருந்து சில மைல் தொலைவில் இந்த காவாய் இந்து ஆதீனம் காணப்படுகின்றது.[46] (பார்க்க வரைபடம்:01)

## 3.2 ஆதீனத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

தமிழ் சைவப்பாரம்பரித்தினையும், உண்மை ஞானத்தினையும் ஈழநாட்டின் யோக சுவாமிகளிடம் இருந்து சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் 1949ஆம் ஆண்டு உள்வாங்கி அவரின் ஆசீர்வாதத்துடன் 1970ஆம் ஆண்டு உத்தியோக பூர்வமாக அமெரிக்காவில் காவாய் தீவில் 45 ஏக்கர் நிலப்பகுதியில் நிறுவப்பட்டது. தற்சமயம் ஆதீனம் காணப்படும் இடத்தில் அவரால் கடவுள் கோயிலின் உருவாக்கம் 1973ஆம் ஆண்டும், சுயம்பு லிங்கத்தின் கண்டுபிடிப்பு 1975ஆம் ஆண்டும் நிகழ்ந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.[47]

நான்கு துறவிகளுடன் குருதேவரினால் உருவாக்கப்பட்ட இவ்வாதீனமானது தற்சமயம் ஆறு நாடுகளைச் சேர்ந்த 22 துறவிகளால் இன்று நிறுவகிக்கப்பட்டு

---

46 கங்கா, (2011), "சுற்றுலாவிற்கு பேர்போன ஹவாய் தீவு", **கலைக்கேசரி**, ப.54

47 Satguru Bodhinatha Veylanswami, (2008), **All about Kauai Hindu Monastery**, PP.3-5.

வரப்படும் இவ்வாதீனமானது சற்குரு போதிநாத வேலன் சுவாமிகளின் தலைமையில் இயக்கப்பட்டு உலகளாவிய ரீதியில் இந்து சமய செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கிறது. இச் செயற்பாடானது இந்து சமயத்திற்கும், ஹவாய் தீவிற்கும் பெருமை சேர்ப்பதாக அமைந்து காணப்படுகிறது. இவ்வாதீனத்தில் கடவுள் கோயில், இறைவன் கோயில் என்ற பெயரில் இரண்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சிவன் கோயில்களும் காணப்படுகின்றன. இதனை விட புனிததோட்டம், நூலகம், காட்சிக்கூடம், பசுப்பண்ணை, என பல ஆதீன செயற்பாடுகளுக்கு உதவுகின்ற அம்சங்களும் காணப்படுகின்றன.[48] (பார்க்க ஆவணக்காணொளி: 04)

உலகளாவிய செயற்பாடுகளை இவ்வாதீனத்தின் பகுதி அமைப்புக்களாக வெளியீடுகளுக்கான நிறுவகம் (Himalayan Academy), இந்து அற நிதியம் ( Hindu Heritage Endowment), சைவ சித்தாந்த திருச்சபை (Saiva Siddhanta Church) ஆகியவைகளின் ஊடாக இவ்வாதீனத்தினர் மேற்கொண்டும் வருகின்றனர்.[49]

### 3.2.1 ஆன்மீக பரம்பரை (Spiritual Lineage)

உண்மை ஞானத்தினைத் தேடும் இவ்வுலக வாசிகளுக்கு உண்மையறிவை போதித்தது ஈடேற்றம் வழங்குவதற்காக பழங்காலத்தில் பல்வேறு யோகிகள் தோன்றி வழிப்படுத்திச் சென்றிருந்தாலும் அவர்களின் மறைவிற்குப் பின் அச்செயற்பாடானது அவருடனேயே முடிவடையும் ஒரு துர்ப்பாக்கிய நிலையினை இந்து சமூகம் எதிர்நோக்கியது. அவ்வாறிருக்க இவ்வாறான செயற்பாடுகளை இடைவிடாது தொடர்ந்து கொண்டு செல்வதற்கு இந்தக் குரு சீட பரம்பரையானது இன்றியமையாததாக அமைந்து காணப்படுகின்றது. தான் பெற்ற உண்மை ஞானத்தினை தன் சீடர்களினூடாக வளர்த்துச் சென்று உண்மையறிவை உலகிற்கு வழங்குவதில் இக்குரு சீட பரம்பரையினருக்கு பெரும் பங்கு காணப்படுகின்றது.[50]

இந்து சமய மூலங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாதீனத்தினை உருவாக்கியவரான சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் நந்திநாத சம்பிரதாய

48 Ibid

49 http://www.himalayanacademy.com/livespiritually/global-fellowship/our-mission

50 http://www.himalayanacademy.com/monastery/about/lineage

கைலாச பரம்பரை எனும் குரு பரம்பரையானது மிகவும் பழைமை வாய்ந்த ஒரு பரம்பரையாகக் காணப்படுகின்றது. நந்தி நாதரினுடைய எட்டு மாணாக்களின் ஊடாக வளர்த்து வரப்பட்ட இப்பரம்பரையானது 2200 ஆண்டுகள் பழைமை வாய்ந்நதாகவும் காணப்படுகின்றது. குரு சீட பரம்பரையில் தேர்ந்தெடுத்த சீடனுக்கு குருவானவர் சற்குரு எனும் நாமத்தினை வழங்கி இப்பரம்பரையின் தொடர்சியை வளர்த்துச் செல்ல ஆசீர்வதிப்பார். அவ்வாறிருக்க கடந்த காலங்களில் கிடைக்கப்பெற்ற நம்பத்தகுந்த ஆதாரங்களின் படி கீழ் கண்ட குரு பரம்பரை வரிசையினை அறியக்கூடியதாக உள்ளது.[51]

ஹிமாலய ரிசி (கி.பி 1770-1840)

↓

கடையிற் சுவாமிகள் (கி.பி 1804-1891)

↓

செல்லப்பா சுவாமிகள் (கி.பி 1840-1915)

↓

சிவயோக சுவாமிகள் (கி.பி 1872-1964)

↓

சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் (கி.பி 1927-2001)

↓

போதிநாத வேலன் சுவாமிகள் (கி.பி 1942-

இவ்வாறிருக்க ஈழத்திரு நாட்டில் வாழ்ந்து உண்மையறிவை வழங்கி வந்த யோக சுவாமிகளை 1949ஆம் ஆண்டு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் சந்தித்து உண்மை ஞானத்தினையும் 'சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள்' என்ற நாம தீட்சையினையும் பெற்றார்.[52] தன் குரு சிவயோக சுவாமியிடமிருந்து விடை பெறும் சமயத்தில் குருவினால் சுப்பிரமுனிய சுவாமிகளின் முதுகில் கையால் அடித்து "இந்த சத்தமானது உலகம் பூராகவும் கேட்க வேண்டும்" என்று கூறப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டு அனுப்பப்பட்டார். குரு கூறிய வாக்கிற்கு அமைய அமெரிக்காவில் ஆதீனம் ஒன்றினை அமைத்து தான் குருவிடம் பெற்ற ஞானத்தினை சீடர்களுக்கும், ஆர்வலர்களுக்கும் வழங்கியதோடு

51 Op.cit, Satguru Bodhinatha veylanswami, (2008) , PP. 10-11

52 நேர்காணல் - ஆறு.திருமுருகன்

இந்த குரு பரம்பரையானது அமெரிக்காவில் வளர்ச்சிப்பாதையில் செல்லவும் வழிவகுத்தார்.

இந்தநிலையில் இந்து சமய மூலங்களின் உதவியுடனும், வரலாற்றாதாரங்களினாலும் நந்திநாத சம்பிரதாய கைலாச பரம்பரையின் 162வது சற்குருவாக குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் அடையாளம் காணப்பட்டுள்ள அதேவேளை குருதேவரால் உருவாக்கப்பட்ட இவ்வாதீனத்தினையும், அது சார்ந்த விடயங்கள் அனைத்தினையும் தற்சமயம் நடாத்தி வரும் அவரின் சீடரான சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள் 163வது சற்குருவாகவும் இப்பரம்பரையில் செயற்பட்டு வருகின்றமையும் இங்கு கவனிக்கத்தக்கதேயாகும்.

## 3.2.2 கடவுள் இந்து ஆலயம் (Kadavul Hindu Temple)

சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளால் காவாய் இந்து ஆதீனம் 1977ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டாலும் அதற்கு முன்னரே 1973ஆம் ஆண்டு இவரால் இங்கு அமைக்கப்பட்ட முதல் சிவாலயமாக இந்த கடவுள் இந்து ஆலயம் (பார்க்க படம்: 09) காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் முலமூர்த்தியாக சிவனுடைய நடராஜர் வடிவம் காணப்படும் அதே வேளை அவ்வடிவத்திற்கு முன்னால் சிவலிங்கம் ஒன்றும் காணப்படுகிறது. (பார்க்க படம்: 10) அத்தோடு இவ்வாலயம் மிகவும் புனிதமானதாக அன்றிலிருந்து விளங்கிவரும் அதே வேளை இலங்கையில் அமையப்பெற்று காணப்படும் சிவாலயங்கள் போன்று வடிவமைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.[53]

கடவுள் இந்து ஆலயத்திற்கு முன்பு 16 தொன் நிறையுடைய நந்தியினுடைய உருவச்சிலையானது காணப்படுகின்றது. இது கருநிற ஒற்றைக் கல்லினால் தென்னிந்தியாவில் மகாபலிபுரத்தில் குடைந்து செதுக்கப்பட்டு காவாய் தீவிற்கு கொண்டு வரப்பட்டு பிரதிஷ்ட்டை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இச்சிலைக்கு முன்பிருந்தே நடராஜரை பக்தர்கள் வணங்குவார்கள்.

இவ்வாலயம் அமைக்கப்பட்ட நாளில் இருந்து சூரிய உதயத்திற்கு முன்பு ஆதீன துறவிகள் இவ்வாலயத்தில் ஒன்று கூடுவர். பின்பு காலை 9.00-12.00 மணிவரை பூஜை நிகழும் இதன்போது அபிசேகம், அலங்காரம், ஆராதனை,

53 http://www.himalayanacademy.com/monastery/about/kadavul

அர்ச்சனை, நைவேத்தியம், சமஸ்கிருத மந்திரங்களின் உச்சாடனங்கள், தேவாரம் பாடுதல் என பல்வேறு இந்து சமய வழிபாட்டம்சங்களை இங்குள்ள துறவிகள் நடாத்துவார்கள். இப் பூஜையின் போது அமெரிக்காவில் உள்ள இந்துக்கள் பலரும், யாத்திரிகர்களாக சென்ற இந்துக்களும் கலந்து கொள்வர். இங்கு குறித்த மூன்று மணி நேரம் மாத்திரமே இவ்வாலய கதவானது பொதுவான பக்தர்களின் வணக்கத்திற்காக திறந்திருக்கும் ஆனாலும் தீட்சை பெற்ற சிஷ்யர்களுக்கும், முன்னமே தொடர்பு கொண்டு வருகையை உறுதிப்படுத்திய யாத்திரிகர்களுக்கும் காலை 06.00am தொடக்கம் மாலை 06.00pm வரை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது என்பதுவும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.[54]

மேலும் பல பக்தர்களை இவ்வாதீன துறவிகளாக மாற்றிய இக் கோயிலின் பிரதான சுவரிலே சிவனுடைய அரிதான 108 தாண்டவ நடன வடிவங்கள் வெண்கலத்தினால் செய்யப்பட்டு தங்க முலாமும் பூசப்பட்டு ஒவ்வொன்றும் 16 அங்குலத்தில் உருவாக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (பார்க்க படம்: 11) இவ்வாலயத்தினுடைய வலது பக்க நுழைவாயிலானது குருதேவரான சுப்பிரமுனிய சுவாமிகளின் மஹா சமாதியின் முதலாவது ஆண்டு நினைவு தினமன்று அமைத்ததோடு அன்று முதல் அங்கு சிவலிங்க வடிவில் அமைந்து மேற்பகுதியில் இரண்டு பாதங்களைக் கொண்டு காணப்படும் குருதேவரின் பாத உருவத்தினையும், குருதேவரின் உருவத்தினையும் சிலையாகவும், நிழற்படமாகவும் இங்கு வைத்து வணங்கி வருகின்றனர். (பார்க்க ஆவணக்காணொளி: 05)

மேலும் இவ்வாலயத்தின் இருபுறமும் கணபதி மற்றும் முருகனின் திருவுருவங்களுடன் கூடிய சிறு ஆலயங்கள் காணப்படுகின்றன. அவற்றில் கணபதியின் உருவமானது ஆறடி உயரத்தில் கறுப்பு நிற கிறனைட்டினால் அமையப்பெற்றுள்ள அதே வேளை மறுபுறமுள்ள முருகனுடைய சிலையானது மயில் மேல் அமர்ந்து பறந்து செல்லும் காட்சியாக அமையப்பெற்றுள்ளது. இவ்விரு துணையாலயங்களிலும் நாளாந்த பூஜையுடன் சேர்த்து அவரவருக்குரிய விசேட நாட்களில் (கந்தசஸ்டி, விநாயகர் சதுர்த்தி...) விசேடமாக வழிபாடுகள் இவ்வாதீன துறவிகளால் மேற்கொள்ளப்படுவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.[55] (பார்க்க ஆவணக்காணொளி: 06)

54 Op.cit, Satguru Bodhinatha veylanswami, (2008) , PP.6-7.

55 Ibid

*இதனை விட கோயிலுக்கு அருகாமையில் உள்ள கோயில் தடாகத்தில் சம்மந்தரின் நடனக்கோலமும் வெண்கலத்தினால் சிலையாக வடிக்கப்பட்டுள்ளதோடு (பார்க்க படம்:12) சிவனின் அர்த்த நாரீஸ்வர மூர்த்தமும், சில்வரினாலான திரிசூலமும், இவ்வாலயத்துடன் இணைத்து வழிபடப்படுகின்றது.*

## *3.2.3 இறைவன் கோயில்* (Iraivan Temple)

*700 பவுன்ட்* (pound) *நிறையையுடைய ஸ்படிக சுயம்புலிங்கமானது* (sphatika svayambhu lingam) *சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளால் 1975ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டு காலம் காலமாக இவ்வாதீன துறவிகளால் வழிபடப்படுகின்றது. இதனை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவும் பொருளாகவும் உலகறியச் செய்யும் நோக்குடன் சுயம்பு லிங்கத்தினை (பார்க்க படம்: 13) பிரதிஸ்டை செய்வதற்காக மிகவும் பிரமாண்டமான முறையில் உருவாக்கப்பட்டு வருகின்ற ஆலயமே இந்த இறைவன் கோயிலாகும். (பார்க்க படம்: 14)*

*முற்றிலும் கருங்கற்களினாலான இந்த ஆலய கட்டடத் திருப்பணிகளானது இந்தியாவில் பேங்களூரில் உள்ள ஸ்ரீ கைலாச ஆச்சிரமத்தில் 1990ஆம் ஆண்டு மார்கழி மாதம் குருதேவரால் முதலாவது கல் செதுக்கப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் பேங்களூரில் 11 ஏக்கர் நிலப்பரப்பில் சிற்ப வேலைகள் கணபதி ஸ்தபதியின் தலைமையில் நடைபெற்று வந்தது. இங்கு 70 சிற்பிகள் சிற்ப வேலைகளில் ஈடுபட்டு வந்ததன் விளைவாக 1995ம் ஆண்டு சித்திரை மாதம் குருதேவரால் காவாய் இந்து ஆதீனத்தில் உள்ள இறைவன் கோயிலுக்கான அடிக்கல்லை நாட்டி திருப்பணியை துவக்கி வைத்தார். இதன் போது நிகழ்ந்த அஸ்திவாரக் கிரியைகளானது தமிழ்நாட்டைச் சேர்ந்த சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் தலைமையில் நடைபெற்றன.*[56]

*தற்சமயம் கற்களையும், சிற்பிகளையும் காவாய் இந்து ஆதீனத்திற்கு கொண்டு வந்து திருப்பணி வேலைகள் நடாத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவில் இருந்து கருங்கற்களையும், சிற்பிகளையும் கொண்டு வந்து முற்றிலும் கைகளினால் செதுக்கி ஆகம முறைப்படி வெளிநாட்டில் கட்டப்படும் முதலாவது இந்து ஆலயமாக இது விளங்குகின்றது. இந்திய ஆலய அமைப்பினை கொண்ட*

---

56 http://www.dinamalar.com/nri/details.asp?id=859&lang=ta

இவ்வாலயம் வில்வம், உருத்திராட்சம், கொன்றை, வேம்பு, சந்தன மரம் என இந்து பாரம்பரியத்தில் புனிதமாக மரங்களுக்கு மத்தியில் அமையப்பெற்றுள்ள இவ்வாலயத்தின் பின் காட்சியாக (background) எரிமலையினை கொண்டும் காணப்படுகின்றது. (பார்க்க ஆவணக்காணொளி: 07)

நூறு தொடக்கம் இருநூறு வரையான பக்தர்கள் ஒரே நேரத்தில் வழிபாட்டில் ஈடுபடக் கூடிய அளவிற்கு மிகவும் பெரிய ஆலயமாக அமைக்கப்பட்டு வருகின்றது. அந்தவகையில் இவ்வாலயத்தினுடைய முழு நீளமானது 105'.11¼" எனக் காணப்படுவதோடு பக்தர்கள் நின்று வழிபாடுகளை மேற்கொள்ளும் மஹா மண்டபமானது 62'.3 7/8" நீளத்தினையும், கற்பகிரகமானது 11'.7¼" நீளத்தினையும் கொண்டு காணப்படுகின்றது. மேலும் இவ்வாலயத்தின் கோபுரத்தின் (11'.7¼") உயரத்தினையும் விட விமானத்தின் (16'.9") உயரமானது அதிகமாகக் காணப்படுவதனையும் அவதானிக்க முடிகின்றது. (பார்க்க வரைபடம் 02)

பல மில்லியன் செலவில் ஆயிரம் வருடங்களுக்கு மேலாக மிளிர்ச்சி பெற்று விளங்கக் கூடிய வகையில் கட்டப்பட்டு வரும் இவ்வாலயத்தில் இந்துப்பண்பாட்டு அம்சங்களும், அனுமான், தட்சிணாமூர்த்தி, விநாயகர் உட்பட பல கடவுளர்களின் உருவங்களும், நந்தி உட்பட பல இந்துக் குறியீடுகளும், இந்து வழிபாட்டு சின்னங்களும், தமிழ் மொழியில் அமைந்த மந்திரங்களும் ஆலயத்தினுடைய வெளிச் சுவர்கள், ஆலயத்தின் உட்சுவர்கள், ஆலயத்தின் கோபுரம், ஆலயத்தின் விமானம், ஆலயத் தூண்கள் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள நிலப்பகுதிகளிலும் சிறப்பாக சிலைகளாகவும், புடைப்புச் சிற்பங்களாகவும் செதுக்கப்பட்டு இவ்வாலயத்திற்கு வருகின்ற பக்தர்களை கவர்ந்திழுக்கக் கூடிய வகையிலும் காணப்படுகின்றது. (பார்க்க படம்: 15) ஆலயத்தின் மேற்பகுதியில் உயர்ந்து காணப்படும் பகுதிகள் அதாவது விமானம், கோபுரம் உட்பட்ட உயர்ந்த பகுதிகள் தங்க நிறத்தில் பிரகாசிப்பதனால் அது ஒரு வித்தியாசமான அழகினை இவ்வாலயத்திற்கு வழங்குகின்றது.[57]

இவ்வாலயத்திற்கு சென்றால் சொர்க்கத்திற்கு வந்துவிட்டோமோ என்று தோன்றும் அளவிற்கு இங்குள்ள சிற்பங்கள் உயிர்ப்புள்ளவை போல காட்சியளிக்கின்றன. மேலும் இவ்வாலயத்தின் புனிதத் தன்மையும், இயற்கையான அமைதி மிக்க இடமாகவும் காணப்படுவதனால் இங்கு

57 http://www.himalayanacademy.com/monastery/about/iraivan

செல்லும் பக்தர்களுக்கு மன அமைதியை வழங்கி இறை அனுபவத்தினை பெறக்கூடிய சிந்தனையை தோற்றுவித்து ஆன்மீக நாட்டம் உடையவர்களாக மாறும் தன்மையினை வழங்குகிறது.

### 3.2.4 ஆலயத்தினுடைய புனித தோட்டம் (Sacred Temple Gardens)

ஆதீனங்களில் தோட்டங்கள் காணப்படுவது என்பது இந்து சமய பாரம்பரியத்தில் காலங்காலமாக நிகழ்ந்து வரும் அம்சமாகும். எடுத்துக்காட்டாக இராமாயணத்தில் விஸ்வாமித்திர முனிவரின் ஆதீனத்திலே நறுமணமுடைய பூந்தோட்டங்களும், பழங்களை தரக்கூடிய பழ மரங்களும் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளமையை குறிப்பிடலாம். அவ்வாறிருக்க இவ்வாதீனத்திலும் கடவுள் இந்து ஆலயத்தினை மையப்படுத்தி புனித தோட்டமானது அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாதீனத்திற்கு அண்மையில் எரிமலை காணப்படுவதனாலும், கடலில் இருந்து நான்கு மைல் தொலைவில் இவ்விடம் இருந்தமையினாலும் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ஆதீனத்திற்குரிய நிலமானது பாலை நிலமாக மரங்களற்ற நிலையில் காணப்பட்டது. 1975ஆம் ஆண்டு சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளால் இவ்வாதீனத்தவர்களுக்கும், யாத்திரிகர்களுக்கும் இறைவனின் அருளானது அழகான சோலைகளாலும், பூந்தோட்டங்களினாலும் அமையப்பெற்ற இடத்தில் கிடைக்கப் பெற வேண்டும் என்று தூரநோக்குடன் தொடங்கப்பட்டதே இப் புனித தோட்டமாகும்.[58] அவரது அன்றைய நோக்கமானது அவரின் பின்வந்த ஆதீன துறவிகளின் பாரிய செயற்பாடுகளினால் இன்று சொர்க்கம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு பசுமையும், அழகும், தூய்மையும், அமைதியும் நிறைந்த இடமாகக் காட்சி தருகின்றது. (பார்க்க ஆவணக்காணொளி: 08)

தற்சமயம் இப்புனித தோட்டத்தில் இருந்தே இவ்வாதீனத்தில் நிகழும் அனைத்து வகையான சமயம் சார்ந்த சடங்குகளுக்கும், விழாக்களுக்கும் தேவையான மலர்கள் பெறப்படுகின்றன. அத்தோடு பழங்கள், மருத்துவ குணமுடைய மூலிகைகள், தளபாடங்களுக்குரிய மரங்கள், பசுக்களுக்கான

58 http://www.himalayanacademy.com/monastery/about/gardens

உணவாக அமையும் புற்கள், காய்கறிகள், கீரைகள், கிழங்குகள் என பல்வேறு தேவைகளுக்கான வளமாக அத் தோட்டம் அமைகின்றது. இவை ஆதீனத்தினுடைய தேவையினையும் தாண்டி பொதுச் சேவைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

முதலில் இங்கு காணப்படும் புனித தோட்டமானது தியானத்திற்கான உகந்த இடமாக எவ்வாறு அமைகின்றது என்று பார்ப்போம், நாளாந்தம் மலருகின்ற பல்வேறு மலர்களில் இருந்து வருகின்ற நறுமணமானது எப்பொழுதும் வீசிக்கொண்டே இருக்கும் இது மனதிற்கு அமைதியை வழங்கும். அதோடு நூற்றுக்கணக்கான மரங்கள் அடர்ந்து வளர்ந்து தியானத்தினை மேற்கொள்ளக்கூடிய வகையில் நிழலையும், இருப்பிடத்தினையும் கொண்டு காணப்படுவதோடு நன்கு வளர்ந்த (80அடியும் அதற்கு மேலும்) மூங்கில்கள் இங்கு காணப்படுகின்றன. இவைகளின் அருகிலும் தியானத்தினை மேற்கொள்ளக் கூடியவாறான சூழ்நிலை காணப்படுகின்றது. இதனை விட இப்புனித தோட்டத்தில் இயற்கையாகவே நீரின் நடுவே பல கற்பாறைகள் காணப்படுகின்றன. அவை தியானத்தினை மேற்கொள்வதற்கு மிகவும் உகந்த இடமாக அங்குள்ள துறவிகள் கொண்டுள்ளனர்.[59]

இவ்வாதீன தோட்டத்திலே வாசனைகளை வீசுகின்ற மரங்களான பலுமேரியா, கொன்றை, செம்பரத்தி, ஓகிட் போன்றன காணப்படுவதோடு வளர்ப்பு புற்கள் நிறைந்த வயல்கள், கொக்கோ மரங்கள், படர் செடிகள், ஆசணிப்பலா மரம், சேம்பினக் கிழங்கு, நறுமணமுள்ள கொடிகள், அறுஞ்சுவையான பழங்களைத் தருகின்ற மரங்கள், மிகவும் அரிதாகக் காணப்படும் உள் நாட்டு மரங்கள், பாசி, பன்னம், பாரிய அறுவடைக்குரிய மரங்கள் உட்பட பல இயற்கையான சேதன தாவரங்கள் அனேகமாகக் காணப்படுவதோடு இயற்கையாக அமைந்து இத்தோட்டத்தினுள் பல கோணங்களில் ஓடும் வைலுவா எனும் நதியும் அதனால் ஆங்காங்கு அமையப்பெற்ற சிறு குட்டைகளும், நீர்வீழ்ச்சிகளும், சதுப்பு நிலங்களும், இவ்வாதீன தோட்டத்திற்கு பெரும் அழகினையும், உயிர்ப்பினையும் வழங்குவதாக அமைந்துள்ளது.

இந்தியா, இலங்கை உட்பட்ட நாடுகளில் இந்து சமயத்தவர்களால் மூலிகைகளாக பயன்படுத்தப்பட்டு வருகின்ற வேம்பு, அமலா, கறிவேப்பிலை,

59 Ibid

உருத்திராட்சம், வெற்றிலை, பாக்கு உட்பட பல மூலிகைக் குணமுள்ள மரங்கள் இங்கு காணப்படுவதோடு கலாசாரத்திற்குரியவனவான பனைமரம், சந்தனமரம், தூரியம், மாமரம், பலாமரம், வாழைமரம் போன்றனவும் இத்தோட்டத்தில் காணப்படுகின்றன.[60]

இதனை விட அமெரிக்க நாட்டிற்குரிய **300**ற்கு மேற்பட்ட பூ வகைகளையும், செல்வத்தினைத் தரக்கூடிய அதாவது அறுவடைக்குரிய பல மரங்களும், நூற்றுக்கணக்கான வெளிநாட்டு மரங்களும், வாசனைத்திரவியங்களும் (இஞ்சி, ஏலம், கராம்பு, கறுவா) இங்கு காணப்படுகின்றன. இவ்வாறு பல வகையான அம்சங்களைக் கொண்டு காணப்படும் இத்தோட்டத்தில் பல நீர்ப்பறைவைகளும் (வாத்து, நீர்க்காகம்), நீர்த்ததாவரங்களும் (அல்லி, தாமரை) அமையப் பெற்று இவ்வாதீனத்தில் காணப்படும் இப் புனித தோட்டமானது இங்கு காணப்படும் துறவிகளினதும், யாத்திரிகர்களினதும் ஆன்ம ஈடேற்றத்துக்கு பெரிதும் உதவியாக இருந்து வருகின்றது.[61]

## 3.2.5 மினி மேலா காட்சிக்கூடமும் நூலகமும்

ஆதீனத்தின் உருவாக்க காலம் தொடக்கம் இன்று வரை இவ்வாதீனத்தினரால் சேகரிக்கப்பட்ட இந்து கலாசாரத்தினை பிரதிபலிக்கின்ற பல பண்பாட்டு பொருட்களும், அரிய பல நூல்களும், ஆதீன துறவிகளால் செய்யப்பட்ட பல பொருட்களும் இங்கு பாதுகாப்பாக பேணப்பட்டு வரப்படுவதோடு, அவற்றைக் காட்சிப்படுத்தியும் உள்ளனர். (பார்க்க படம்: **16**) கடவுள் ஆலயத்திற்கு செல்லும் வழியில் அமையப்பெற்றுள்ள காட்சிக்கூடத்தினையும், நூலகத்தினையும் உள்ளடக்கிய கட்டடமானது ஒவ்வொரு நாளும் காலை **9.00** மணியிலிருந்து அன்றைய பகல்வேளை முழுவதும் திறக்கப்பட்டிருக்கும்.[62]

இங்கு குருதேவரால் எழுதப்பெற்ற நூல்கள், குருதேவரைப்பற்றிய நூல்கள், இந்து சமயம் பற்றிய இவ்வாதீனத்தினரால் வெளியிடப்பட்ட நூல்கள், மரக்கறி சமையல் செய்முறை பற்றியும் அவைகளினால் ஏற்படும் நன்மைகள் பற்றியதுமான நூல்கள், சிறுவர்களுக்குரிய பட விளக்கங்களுடன் கூடிய

60 Ibid

61 Ibid

62 http://www.himalayanacademy.com/monastery/about/minimela

நூல்கள், இந்து ஆயுர்வேத மருத்துவ நூல்கள், அடக்கு முறையில்லாமல் குழந்தைகளை எவ்வாறு வளர்ப்பது என்பது பற்றி கூறும் நூல்கள், இந்து சமயம் பற்றிய அரிய நூல்கள் அதாவது பாதுகாக்கப்பட வேண்டிய நுல்கள் என பல்வேறு நூல்களை இங்கு காட்சிப்படுத்தியுள்ளனர். இவற்றில் சிலவற்றினை யாத்திரீகர்களுக்கும், பக்தர்களுக்கும் விற்பனைக்காக வைத்துள்ள அதேவேளை சில புத்தகங்கள் அங்கு வைத்து வாசிப்பிற்காக மாத்திரம் வழங்கப்பட்டும் வருகின்றது.[63]

அத்தோடு இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட பல இந்து சமய பண்பாட்டினை பிரதிபலிக்கின்ற பல பொருட்கள் காணப்படுகின்றன. அவற்றில் வெண்கலத்தினாலான இறை உருவங்களும், அலங்காரப் பொருட்களும், பாவனைப் பொருட்களும் உள்ளடங்குகின்றன. இதனைவிட பலவகைப்பட்ட கிறனைட்களும், விலைமதிக்க முடியாத பல வகையான கல் வகைகளும், பளிங்குக் கற்களும் இங்கு காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. மேலும் இவ்வாதீனத்தில் காணப்படும் வளங்களைக் கொண்டு பல பொருட்கள் செய்யப்பட்டு இங்கு விற்பனைக்காகவும், அழகிற்காகவும் வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக ஆதீனத்தில் காடுகளாக வளர்ந்து காணப்படும் உருத்திராட்ச மரங்களில் இருந்து பெறப்படுகின்ற சைவர்களால் புனிதமாக சிவனுக்குரியதாக கொள்ளப்படுகின்ற உருத்திராட்ச விதைகளை பயன்படுத்தி மாலைகள் உட்பட பல பொருட்களை தயாரித்து இங்கு காட்சிப்படுத்தியுள்ளனர்.

இதனை விட வாழ்த்து அட்டைகள் (இந்து பண்டிகைகள், விழாக்கள்), நறுமணமிக்க வாசனைப் பொருட்கள் (ஊதுபத்தி), இந்து சமய வாசகங்கள் பொறிக்கப்பட்ட ஸ்டிக்கர்கள், ஆபரணங்கள், இந்து சமயம் சார்ந்த காணொளிகளும் (Videos) மற்றும் ஒலிகளும் (Audios) உள்ளடக்கிய DVDகளும், CDகளும் பல இங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன. அத்தோடு தமது உலகளாவிய செயற்பாடுகளை http://www.minimela.com எனும் இணையதளத்தின் ஊடாகவும் மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறு இவ்வாதீனமானது இந்து சமய சிந்தனைகளை இக்காட்சிக் கூடத்தினூடாகவும், நூலகத்தினூடாகவும் தனது நோக்கத்தினை அடைய பிரயத்தனம் கொண்டு செயற்பட்டு வருகின்றது என்றே கூற வேண்டும்.

63 Op.cit, Satguru Bodhinatha veylanswami, (2008) , PP.38-39.

### *3.2.6 ஆதீனத்தின் பகுதியமைப்புக்கள்*

*இந்து சமயத்தில் ஆச்சிரமமானது வெறுமனே இறை ஞானத்தினை பெறுவதற்காக துறவிகள் வசிக்கும் இடம் என்று கூற இயலாது. இந்து சமய வரலாற்றிலே ஆச்சிரமமானது கல்வி கற்பிக்கப்படும் குரு குலமாகவும், புனித நூல்களின் உற்பத்தியிடமாகவும் (உதாரணமாக வியாசரின் மகாபாரத படைப்பு), ஏழைகளின் பசியினை தீர்த்த இடமாகவும், அநாதரவாக விடப்பட்ட உயிர்களின் வசிப்பிடமாகவும், பாதுகாப்பற்ற ஜீவன்களின் காவலரனாகவும் விளங்கி வந்துள்ளமையினை இந்துக்களாகிய நாங்கள் நிராகரிக்க முடியாது. ஏனெனில் இதற்கு எமது இந்து சமய மூலங்கள் ஆதாரங்களினை வைத்திருக்கின்றது. அவ்வாறிருக்க இந்த உண்மையினை குருதேவரும் உணரத்தவறவில்லை. காலத்தின் தேவையினை கருத்தில் கொண்டு தனது ஆதீனத்துடன் இணைத்து ஆதீன உறுப்பினர்களை ஆதாரமாகக் கொண்டு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த துணை அமைப்புக்களை நிறுவினார்.*

*அந்தவகையில் இவ்வாதீனத்தின் பகுதி அமைப்புக்களாக வெளியீடுகளுக்கான நிறுவகம்* (Himalayan Academy), *பொது சேவை இந்து அற நிதியம்* (Hindu Heritage Endowment), *சைவ சித்தாந்த திருச்சபை* (Saiva Siddhanta Church) *என்று மூன்று அமைப்புக்களும் நிறுவப்பட்டமையினால் ஆதீன செயற்பாடானது உலகளாவிய ரீதியில் விஸ்த்தீரணம் அடைந்தது.*

### *3.2.6.1 வெளியீடுகளுக்கான நிறுவகம்* (Himalayan Academy)

*வெளியீடுகளுக்கான நிறுவகமானது* (Himalayan Academy) ***1965****ஆம் ஆண்டு குருதேவரினால் உருவாக்கப்பட்டது. இது ஆதீன உருவாக்கத்திற்கு முன்பே உருவாக்கப்பட்டு விட்டது என்பது இங்கு குறிப்பிட வேண்டிய விடயமாகும் ஆதீனத்தினை உருவாக்குவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளில் ஒன்றாகவே இது காணப்படுகின்றது. ஆதீனம் உத்தியோகபூர்வமாக* ***1977*** *ஆரம்பிக்கப்பட்டாலும் ஆதீன செயற்பாடுகளானது அதற்கு முன்பிருந்தே ஆரம்பித்து விட்டது என்று கூற வேண்டும். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டே இந் நிறுவகத்தின் தோற்றமும், கடவுள் இந்து ஆலயத்தின் உருவாக்கமும்* ***(1973***) *ஆகும்.*[64]

64 http://www.himalayanacademy.com/view/lexicon/Himalayan%20Academy

வெளியீடுகளுக்கான நிறுவகம் ஆரம்பித்த காலம் முதலே பல்வேறு வெளியீடுகளை மேற்கொண்டு வருகின்றது. அவ்வாறிருக்க இவ் நிறுவகத்தின் ஊடாக வெளிவரும் Hinduism Today எனும் சஞ்சிகையானது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகக் காணப்படும் அதேவேளை குருதேவரினாலும் அவரிற்கு பின்வந்த போதிநாத வேலன் சுவாமிகள் உட்பட பல துறவிகளால் எழுதப்பெற்ற நூல்களும், ஆதீன வெளியீடுகள் அனைத்தும் இந்த வெளியீடுகளுக்கான நிறுவகத்தின் (Himalayan Academy) மூலமே வெளிவந்தது. இன்றும் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கின்றது. மேலும் கருத்தரங்குகளை நடாத்தல், பயிலரங்குகளை ஒழுங்கு செய்தல், ஆதீன காணொளிகளை தயாரித்தல், தொடர்பாடலினை பேணுதல், ஆதீன மற்றும் அதுசார்ந்த உத்தியோக பூர்வ இணையதளங்களை நிர்வகித்தல், இந்து கலை கலாசாரம் சார்ந்த விடயங்களை வெளிப்படுத்தல், (பார்க்க ஆவணக்காணொளி: 09) உலகில் பல்லிடங்களில் காணப்படும் ஆதீனத்துடன் தொடர்புடைய உறுப்பினர்களின் தொடர்புகளை பேணுதல் என பல செயற்பாடுகளை இந் நிறுவகத்தின் மூலமாக ஆதீன துறவிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

கடவுள் ஆலயத்திலிருந்து 50யார் தொலைவில் காணப்படும் இவ்வமைப்பினுடைய கட்டடமானது பெரியளவில் இல்லாமல் சாதாரணமாக இருந்தாலும் கட்டடத்தினுள்ளே காணப்படும் தொழில்நுட்பம் சார்ந்த விடயங்களும், துறவிகளின் தொழில்நுட்பம் சார்ந்த ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்பாடுகளும் (எழுத்து,இயக்கம், வடிவமைப்பு, காட்சிப்படுத்தல்), பிரமிக்கத் தக்கதாக காணப்படுகின்றது. ஆதீனத்தின் நவீனமயப்படுத்தப்பட்ட அனைத்து விடயங்களும் இங்கேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதுவும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### 3.2.6.1.1 சஞ்சிகையின் வெளியீடு

1979ஆம் ஆண்டு சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்டு Hinduism Today எனும் பெயரில் வெளிவந்து கொண்டிருக்கும் இந்நிறுவனத்தினுடைய சஞ்சிகையானது இன்று சற்குரு போதிநாத வேலன் சுவாமிகளால் மேற்பார்வை செய்யப்படுவதோடு வெளியிடப்பட்டும் வருகின்றது. இந்து தர்மம் என்பது எப்படிப்பட்டது? இந்துவானவன் எவ்வாறு வாழ வேண்டும்? இந்துசமயமானது இன்று எவ்வாறு மிளிர்கின்றது? இந்து தத்துவங்கள் எதனை கூற முற்படுகின்றது? என பல்வேறுபட்ட வினாக்களுக்கு இன்றைய நவீன உலகத்திற்கு ஏற்றவாறு இந்து மூலங்களை மேற்கோள்

*காட்டியும், இந்து சமய புராணக்கதைகளில் காணப்படும் விடயங்கள் பற்றிய தெளிவற்ற தன்மையினால் ஏற்படும் தவறான பார்வையினை உடைத்தெறிந்து இந்து பாரம்பரியத்தின் உண்மைகளையும், அதில் காணப்படும் அறிவியல் தன்மைகளையும் இவ்வுலகிற்கு அறியப்படுத்தி வருகின்றது.*[65] (பார்க்க *ஆவணக்காணொளி: 10*)

*மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வெளிவருகின்ற இந்த சஞ்சிகையானது அழகியல் சார்ந்ததாகவும், வர்ணங்களினால் மெருகூட்டப்பட்டதாகவும் அமையப்பெற்று டிஜிடல் வடிவில் வெளியிடப்படுகின்றது. இதில் ஆதீனத்திலும் வெளியிலும் ஆதீன துறவிகளால் நிகழ்த்தப்படுகின்ற சொற்பொழிவுகள், நிகழ்வுகள், சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் மற்றும் போதிநாத வேலன் சுவாமிகளின் அறிவுரைகள், சைவ சித்தாந்த கருத்துக்கள், யோகா பற்றிய விடயங்களோடு உலகம் பூராகவும் இந்து சமயம் பற்றி வெளிவரும் சஞ்சிகைகள், புத்தகங்கள் போன்றவற்றில் காணப்படும் சிறப்பான விடயங்கள் பலவற்றினையும் உள்ளடக்கியதாகவும் இது காணப்படுகின்றது.*[66]

*சமூக வலைத்தளங்கள் மூலமாகவும்* (Social Network), *மின்னஞ்சல் மூலமாகவும்* (E-mail) *உலகில் காணப்படுகின்ற மிகவும் திறமை மிக்க ஊடகவியலாளர்கள், புகைப்படக் கலைஞர்கள், ஏனைய துறைசார் கலைஞர்கள் ஆகியோர்களுடன் சிறந்த முறையில் தொடர்புகளையும் ஊதியங்களையும் சிறந்த முறையில் பேணி அவர்களின் உதவிகளின் ஊடாக இச் சஞ்சிகையானது உலகம் பூராகவும் வெளியிடப்பட்டு 100000த்திற்கு மேற்பட்ட வாசகர்களின் வரவேற்பிற்குரியதாகக் காணப்படுவதுவும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.*[67]

### *3.2.6.1.2 நூல்களின் வெளியீடு*

*வெளியீடுகளுக்கான நிறுவகத்தின்* (Himalayan Academy) *மிகச்சிறந்த செயற்பாடுகளில் மிகவும் முக்கியமான செயற்பாடாக இந்த நூல்களின் வெளியீடு காணப்படுகின்றது. ஆரம்பகாலங்களில் இவ்வமைப்பானது நூல்களை பதிப்பித்து வெளியிடும் ஒரு வெளியீட்டகமாகவே காணப்பட்டது. அதன் பின்னரே அந்நிலை மாற்றமடைந்து பல துறைகளிலும்*

---

65 http://www.youtube.com/user/HinduismTodayVideos

66 Op.cit, Satguru Bodhinatha veylanswami, (2008) , PP.20-21.

67 http://www.himalayanacademy.com/monastery/about/publishing

விஸ்தீரணமடைந்தது. அவ்வாறிருக்க மொழிபெயர்ப்பு நூல்கள் உட்பட பல நூல்களை இவ்வமைப்பானது பதிப்பித்து வெளியீடு செய்துள்ளது. தற்சமயமும் அப்பணியானது திறம்பட நடந்து கொண்டும் இருக்கின்றது. எனவே இவ்வமைப்பினால் பதிப்பித்து வெளியீடு செய்யப்பட்ட சில நூல்களைப்பற்றி இங்கு பார்ப்போம்.

இவ்வமைப்பினால் ஆங்கில மொழியிலேயே பெரும்பாலான நூல்கள் எழுதப் பெற்றுள்ளன. அவ்வாறிருக்க சைவ சித்தாந்தத்தினைப் பற்றியும் கைலாச பரம்பரையினைப் பற்றியும் சிறப்பாகவும் ஆன்மீக ரீதியிலும் அமையப்பெற்ற "The Master Course" என்ற மூன்று தொகுதிகளை உள்ளடக்கிய நூலானது மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கொள்ளப்படுகின்றது.[68] (பார்க்க படம்: 17)

இந்து சமயத்திலே பல்வேறுபட்ட பிரிவுகளும் தத்துவக்கொள்கைகளும் காணப்படுகின்றமையினால் ஒரே விடயத்தில் பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றமை யாவரும் அறிந்ததே. அவ்வாறிருக்க இந்து சமயத்தில் குறிப்பாக சைவசமயத்தில் எழப்பெறுகின்ற வினாக்களுக்கு விடையளிக்கக் கூடியவாறு "Dancing with Siva" எனும் நூலானது அமையப்பெற்றுள்ளது.[69]

"Living with Siva" எனும் நூலானது குருதேவாவினால் எழுதப்பெற்றது. இந் நூலிலே உண்மையான ஆன்மீக வாழ்வினை எப்படி வாழலாம்? அதனைப் போன்று ஆழ்மனதில் உள்ள பதிவுகளை எவ்வாறு பகிர்ந்தளிக்கலாம்? போன்ற வினாக்களுக்கு சிறப்பாக விடையினை அளிப்பதாகக் காணப்படுகின்றது. அத்தோடு குடும்பம், பணம், உறவுகள், தொழில்நுட்பம், உணவு, வழிபாடு, யோகா, கர்மா உள்ளிட்ட பல விடயங்களை உலகியல் வாழ்விலும் இறையியல் வாழ்விலும் தொடர்புபடுத்தி தனது கருத்தினை சிறப்பாக குருதேவர் வெளிப்படுத்தியுள்ளார்.

"Merging with Siva" எனும் நுலானது இறைவனை எவ்வாறெல்லாம் உணரலாம், எவ்வித கலக்கமும் இல்லாத ஒளி, மனதினுடைய நிலை, கனவுகள் மற்றும் எண்ணங்களின் வெளிப்பாடு, எண்ணங்களின் தோற்றம், இறப்பு, குரு மாணாக்கர்களுக்கிடையிலான உறவுமுறை போன்றவற்றினை விபரிக்கும் ஒரு மனோதத்துவம் சம்மந்தமான நூலாக இது காணப்படுகின்றது.[70]

68 Op.cit, Satguru Bodhinatha veylanswami, (2008) , PP.22-23.

69 Ibid

70 Ibid

“Loving Ganesha” எனும் நூலானது தடைகளை நீக்கக் கூடிய விநாயகரின் சிறப்புக்களை எடுத்தியம்புகிறது. இதில் அதிகமாக கணபதி வழிபாட்டினை இந்தியாவில் மகாராஸ்டிரத்தில் காண முடிகின்றது இதனை அடிப்படையாகக் கொண்டும், இந்தியா முழுவதும் காணப்படுகின்ற மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கணேச வழிபாடு பற்றியும் விரிவாக இந்நூல் விளக்குகின்றது. இதனைப் போன்று “Weaver’s Wisdom” எனும் நூலானது திருக்குறளை உள்ளடக்கிய ஒரு பொக்கிசமாகக் காணப்படுகின்றது.[71]

“Lemurian Scrolls” எனும் நூலானது இந்து ஆச்சிரம வாழ்க்கையினைப் பற்றி விபரிக்கின்றது. இந்நூலில் மனித இனத்தின் தோற்றப்பாடு மற்றும் ஆச்சிரம வாழ்க்கையின் உள்ளார்ந்த உண்மை விடயங்கள் என்பவற்றினை கூறும் ஒரு அரிதான நூலாகக் காணப்படுகின்றது. இதனைப்போன்று “Yoga’s Forgotten Foundation” எனும் நூலானது அட்டாங்க யோகத்திலே இயமம், நியமம் என்ற முதலிரு படிநிலைகளின் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. இவ்விரு நூல்களும் ஆச்சிரமத்தின் முன்னெடுப்பிற்கு அன்று முதல் இன்றுவரை துணை புரிந்துகொண்டிருக்கின்றது.

வெளியீடுகளுக்கான நிறுவகத்தினால் (Himalayan Academy) அண்மைக்காலத்தில் வெளியிடப்பட்ட நூலான “What Is Hinduism?” எனும் நூலானது Hinduism Today சஞ்சிகையில் வெளிவந்த அனேக புகைப்படங்களுடன் கவர்ச்சியாக 416 பக்கங்களை கொண்டு காணப்படுகின்றது. இந்நூல் குடும்பத்தில் எவ்வாறான நம்பிக்கைகள் காணப்பட வேண்டும் என்பதை தெளிவுபடுத்துவதோடு பல்வேறுபட்ட இந்து சமய வாழ்வியலோடு தொடர்புடைய பல ஐயங்களுக்கு தெளிவாகவும் இந்நூல் காணப்படுகின்றது என்றால் அது மிகையாகாது.


இவ்வாறு பல நூல்கள் Himalayan Academyயினால் வெளியிடப்பட்டுள்ளன. இவைகள் அவற்றில் ஒருபகுதியாகவே காணப்படுகின்றது இதனைத்தவிர all about Kauai hindu monastery, growing up hindu, gurudevas spiritual visions, gurudevas toolbox, hindu basics, Karma and Reincarnation, monks cookbook, saivite hindu religion, self and samadhi, ten tales about self control, the guru chronicles, the history of hindu india, twelve shum meditations என பல

71 Ibid

நூல்களை இந்நிலையம் வெளியீடு செய்துள்ளமையும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகும்.[72]

### 3.2.6.1.3 கற்பித்தல் செயற்பாடுகள்

தான் பெற்ற மெய்ஞானத்தின் உண்மையை அறிய முயற்சிக்கும் உயிர்களுக்கு வழங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்நிலையத்தினூடாக மேற்கொள்ளப்படும் ஒரு ஆன்மீகம் சார்ந்த சேவையாக காவாய் இந்து ஆதீன துறவிகள் இப்புனித கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொண்டு வருகின்றனர். இந்து கலாசார விடயங்களும், குருதேவரால் முன்மொழியப்பட்ட சைவ சித்தாந்தம் உள்ளிட்ட தத்துவார்த்த விடயங்களும், நுண்பொருளியல் விடயங்களும், யோகா மற்றும் அட்டாங்க யோகங்களும் இங்கு முதன்மையாக கற்பிக்கப்படுகின்றன. இவ்வாறான கற்பித்தல் செயற்பாடுகளானது இரண்டு விதமாக மேற்கொள்ளப்படுவதனை அவாதானிக்க முடிகின்றது.




அவ்வாறிருக்க தனிப்பட்ட கற்றல் செயற்பாடானது குருதேவரான சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளால் தன் குருவான யோக சுவாமிகளினது சிந்தனைகளையும், இந்து மூலங்களின் துணையுடனும் உருவாக்கப்பட்ட மூன்று தொகுதிகளாக அமைந்த புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. இம் மூன்று தொகுதிகளையும் உள்ளடக்கிய புத்தகத்தில் **365** பாடங்கள் காணப்படுவதனால் ஒரு வருடத்தில் உள்ள **365** நாட்களுக்கும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பாடமாக கற்பிக்கப்பட்டு வருகின்றது. இதனை டிஜிடல் வடிவில் மின்னஞ்சல் மூலமாக பெற்று

72 http://www.himalayanacademy.com/readlearn/books

சுயமாகவும் கற்க முடியும்.[73] இருந்த போதிலும் முறையாக கற்பதற்கே பலர் இவ்வாதீனத்தினை நோக்கி வருகை தருவதனை காணலாம்.

இதனைப் போன்று உண்மை அறிவானது எமக்கு வெளியில் இல்லை அது எம்முள்ளேயே இருக்கின்றது. அதனை அறிவதே எமது இறுதி இலட்சியமாகக் காணப்படுகின்றது. என்ற உண்மையை உணர்வு பூர்வமாக உணர விரும்பும் உலகில் பல்வேறு நாடுகளில் காணப்படுகின்ற இந்து சமய ஆர்வலர்களை ஒன்று திரட்டி தெரிவுசெய்யப்பட்ட இடத்தில் குறித்த நாட்களில் ஆதீன துறவிகளினால் நடாத்தப்படும் இந்து சமயம் பற்றிய கற்றல் மற்றும் பயிற்சி செயற்பாடுகளை மேற்கொள்வதே இந்த பயணக் கற்பித்தல் செயற்பாடாகும்.[74] (பார்க்க படம்: 18)

இக்கற்பித்தல் செயற்பாட்டின் ஊடாக தியானப்பயிற்சிகள், அறிவுறுத்தலுடன் கூடிய பிரசங்கங்கள், ஆதீன கோயில் பிரவேசம், புனித தலங்களை நோக்கிய பயணம், யோகா பற்றிய நுணுக்கங்கள் என பல விடயங்கள் இப் பயண கற்பித்தலின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றன. அந்தவகையில் Himalayan Academyயினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப் பெற்ற பயணக்கற்றல் செயற்பாட்டினை இங்கு நோக்க வேண்டியது மிகவும் அவசியமாக அமைகின்றது.

2014ஆம் ஆண்டு ஜுன், ஜுலை மாதங்களில் மொரிசியஸ் தீவில் இரண்டு வாரங்களாக நடைபெற்ற ஆழ்மனதினுடைய தேடல் சம்மந்தமான பயணக் கற்றல் செயற்பாட்டின் போது பத்து நாடுகளைச் சேர்ந்த 52 பேர் பங்குபற்றியதோடு அவர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக காவாய் இந்து ஆதீனத்தினைச் சேர்ந்த சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள் உட்பட ஏழு துறவிகள் பங்கு பற்றினர். (பார்க்க படம்:19) அனேகமான வகுப்புக்கள் போதிநாத வேலன் சுவாமிகளால் மேற்கொள்ளப்பட்டதோடு ஏனைய துறவிகளின் பங்கும் சிறப்பாக இச் செயற்பாட்டில் இருந்திருந்தது என்பதுவும் இங்கு கூறப்பட வேண்டிய ஒன்றேயாகும்.[75]

---


73 http://www.himalayanacademy.com/monastery/about/study

74 http://www.himalayanacademy.com/monastery/about/travel-study

75 http://www.himalayanacademy.com/view/2014-07-14_mauritius-innersearch

### 3.2.6.1.4 தொழிநுட்ப ஆவணங்கள்

ஆதீனத்தில் நிகழுகின்ற ஒவ்வொரு நிகழ்வினையும் இன்றைய நவீன உலகத்திற்கு தெறியப்படுத்துவதற்காகவும், நாளைய தலைமுறையினருக்கு இங்கு நிகழ்ந்த செயற்பாடுகளை தெரியப்படுத்துவதற்காகவும் ஆச்சிமத்தின் துறவிகளால் மேற்கொள்ளப்படுகின்ற பாரிய தொழிநுட்பம் சார்ந்த செயற்பாடாக இந்த ஆவணப்படுத்தல் செயற்பாடானது காணப்படுகின்றது. இவ்வாவணப்படுத்தல் செயற்பாடானது ஆவணக்காணொளிகள், ஆவணவொலிகள், ஆவணப்புகைப்படங்கள் என பிரதானமாக மூன்று வகைகளில் மேற்கொள்ளப்படுவதனை நாம் இங்கு காணலாம்.




அந்தவகையில் இவ்வாதீனத்தில் நிகழுகின்ற நிகழ்வுகள், சொற்பொழிவுகள், ஆலய வழிபாட்டு சம்பிரதாயங்கள், அமைவிடம் பற்றிய விபரங்கள், ஆதீனத்தின் கட்டட மற்றும் நிலப்பரப்பு பற்றிய விடயங்கள் என இவ்வாதீனத்தின் பல செயற்பாடுகளை ஒலியுடன் காட்சிப்படுத்தி ஆவணப்படுத்தும் செயற்பாடே இந்த ஆவணக் காணொளிகளாக காணப்படுகின்றன. இவ்வாவணக்காணொளிகளானது பல வகையான கமராக்களின் மூலமாக காட்சிப்படுத்தப்பட்டாலும் ரிமோட் மூலம் இயங்கக் கூடிய வகையில் அமையப்பெற்ற பறக்கும் கமராவினால் பெரும்பாலும் காட்சிப்படுத்தப்டுவதும் இங்கு குறிப்பிட வேண்டிய ஒரு விடயமாகும். (பார்க்க படம்: 20)

இதனைப்போன்று ஆவணவொலிகள் என்பது இவ்வாதீனத்தில் நிகழுகின்ற சொற்பொழிவுகள், மந்திர உச்சாடனங்கள், துதிப்பாடல்கள் என ஓசை சார்ந்த விடயங்களை ஒலிகளாக மட்டும் ஆவணப்படுத்துவதே ஆகும். இதனை விட உயர் தொழிநுட்பத்தில் புகைப்படங்களை எடுத்து அதன் மூலமாக

ஆவணப்படுத்தப் பட்டவைகள் ஆவணப்புகைப்படங்களாகக் கருதப்படுகின்றன. இவ்வாறு ஆதீனத்தில் நிகழுகின்ற நிகழ்வுகளின் மேற்கூறியவாறான மூன்று பிரதான தொழிநுட்ப ஆவணங்களையும் இவ்வாதீனத்திற்குரிய உத்தியோக பூர்வ இணையதளத்தில் தரவேற்றம் செய்து உலகம் முழுவதும் இவ்வாதீன செயற்பாடுகளை வெளிக்கொணர்ந்து வருகின்றனர்.

### 3.2.6.1.5 இணையதளச் செயற்பாடுகள்

ஆதீனத்திற்குரியதான அனைத்து இணையதளங்களையும் அதாவது துணையமைப் புக்களினுடைய அனைத்து இணையதளங்களையும் உதாரணமாக https://www.himalayanacademy.com, http://www.hinduismtoday.com போன்றவற்றினை முழுமையாக நிர்வகிக்கும் செயற்பாட்டினை இந்த துணையமைப்பே மேற்கொண்டு வருகின்றது. அவ்வாறிருக்க இவ்வாதீனத்தில் நிகழுகின்ற நாளாந்த செயற்பாடுகளையும், இவ்வாதீனத்தினுடைய வெளியீடுகளையும், தொழினுட்ப ஆவணங்களையும், கற்கை செயற்பாடுகள் பற்றிய விடயங்களையும், உலகளாவிய ரீதியில் நிகழுகின்ற இந்து சமயம் சார்ந்த விடயங்களையும் இன்னும் பலதரப்பட்ட விடயங்களையும் தமது ஆதீனத்திற்குரிய இணையதளங்களில் சேர்ப்பித்து அதனை திறன்பட நடாத்தியும் வருகின்றது.

## 3.2.6.2 பொது சேவை அற நிதியம் (Hindu Heritage Endowment)

இந்து சமய பாரம்பரியத்தில் இவ்வுலக வாழ்க்கையினை துறந்து ஆச்சிரம வாழ்க்கையினை மேற்கொண்ட தன்னலமற்ற துறவிகள் தமது ஆச்சிரமங்களில் கல்விச் சேவைகளையும், மருத்துவ சேவைகளையும் சிறப்பாக செய்து வந்தமையினால் இவர்களுக்கு தட்சணைகளாக கிடைத்த செல்வத்தினையும், ஆச்சிரமத்தில் தோட்டங்களை செய்து அதனால் கிடைக்கப்பெற்ற பொருட்களையும் ஏழை வறியவர்களுக்கு வழங்கி உள்ளம் மகிழ்ந்தனர். இதனைப் போன்று இந்த காவாய் இந்து ஆச்சிரமத்தில் பொதுச் சேவையினை மேற் கொள்வதற்காக 1995ஆம் ஆண்டு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளால் உருவாக்கப்பட்டு காவாய் இந்து ஆதீன துறவிகளால் சிறந்த முறையில் நடாத்தப்பட்டு வரும் அமைப்பே இந்த பொதுச் சேவை நம்பிக்கை நிலையமாகும்.

உலகம் பூராகவும் இருந்து நிதி சேகரித்து வரும் இவ்வாதீன பகுதி அமைப்பான பொது சேவை அற நிதியம் (Hindu Heritage Endowment) தனிப்பட்ட ஒருவரோ அல்லது குழுவாகவோ நன்கொடைகளை வழங்க முடியும். வழங்கும் நன்கொடையானது பணமாக அல்லது பொருளாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு குழுவாக நன்கொடை வழங்க விரும்பினால் இரு முறைகளில் இவ்வமைப்பிற்கு வழங்க முடியும். ஒன்று நேரடியாக இவ்வமைப்பினை நாடி அல்லது தொடர்புகொண்டு தமது உதவியினை வழங்க முடியும். அப்படி இல்லையெனில் இந்நிலையத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி அந்நிலையத்தின் கிளையாக தாங்கள் ஒரு அமைப்பினை நிறுவி அதனை நிர்வகித்து அதன் மூலமும் நன்கொடைகளை வழங்க முடியும்.[76]

இவ்வமைப்பினுடைய தற்கால தலைவராக சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள் சிறந்தமுறையில் இந்நிலைய செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்றார். இவ்வமைப்பினூடாக இவ்வாதீன துறவிகள் மேற்கூறியவாறு பெற்ற நன்கொடைகளை வைத்துக் கொண்டு பல சேவைகளை வழங்கி வருகின்றனர். குறிப்பாக அநாதை இல்லங்கள், சிறுவர் இல்லங்கள், யூத் கல்வி செயற்பாடுகள், சமய வெளியீடுகள், ஆதீனங்களில் வசிக்கும் தாய்மார்கள், யாத்திரிகர்கள், பூசகர்களுக்கான பயிற்சிகளை வழங்கும் மையங்கள், ஆலயங்கள், ஆலய கொண்டாட்டங்கள், முதியோரில்லம், தத்துவவியல் ஆராய்ச்சி மையங்கள், இந்துக் கலைகள் மற்றும் ஆயுர்வேதம், யோகா சம்மந்தமாக நிகழும் நிகழ்வுகள், ஆலய அன்னதானம் என பல பரந்துபட்ட நற் காரியங்களுக்கு உதவி வருகின்ற அமைப்புகளுக்கு இவ்வற நிதியம் பண உதவிகளை வழங்கி அதன் மூலமாக சமூக சேவையினை இவ்வாதீனம் மேற்கொண்டு வருகின்றது.[77]

நன்கொடைகளை வழங்குபவர்கள் இவ்வமைப்பினால் என்றும் அழியாவண்ணம் ஆவனப்படுத்தப்படுவதோடு இங்கு நன்கொடையினை வழங்குபவர்களுக்கான நன்றியினை தெரிவிப்பதற்காக வருடம் ஒருமுறை நிகழும் இரவு உணவுடன் கூடிய சந்திப்பிற்காக அழைப்பு விடுக்கப்பட்டு அவ்வழைப்பில் வரவு செலவு பற்றிய விடயங்களை கலந்துரையாடி நன்கொடை வழங்குனர்களின் நன்மதிப்பினையும் அவர்களுக்கான ஊக்கத்தினையும் வழங்கி வருவதோடு இக்கிளை அமைப்பானது http://

76 http://www.himalayanacademy.com/monastery/about/endowments

77 Op.cit, Satguru Bodhinatha veylanswami, (2008) , P.36-37.

www.hheonline.org எனும் இணைய தளத்தின் மூலமும் செயற்பட்டு வருகின்றது.[78] அத்தோடு இவ்வாதீன துறவிகளில் சிலர் பாடசாலைகள், அநாதை ஆச்சிரமங்கள், வைத்திய சாலைகள் போன்ற பல பொதுச்சேவை மையங்களை இயக்கி வருவதும் இங்கு குறிப்பிட வேண்டிய விடயமாகக் காணப்படுகின்றது. இவ்வாறாக இவர்களின் சேவை மனப்பாங்கானது இந்துக்களாகிய எங்களால் வரவேற்கப்பட வேண்டியதாகக் காணப்படுகின்றது.

### *3.2.6.3 சைவ சித்தாந்த திருச்சபை* (Saiva Siddhanta Church)

இவ்வாதீனத்தில் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்ட சைவ சித்தாந்த திருச்சபை (Saiva Siddhanta Church) உலகளாவிய ரீதியில் சந்நியாசிகளுக்கும், மாணவர்களுக்கும் சனாதன மார்க்கத்தினை பின்பற்றவும், யோகம் சார்ந்த பயிற்சிகளை மேற்கொள்ளவும் பெரிதும் தூண்டு கோலாக அமைந்து காணப்பட்டது.

இவரால் உருவாக்கப்பட்ட பல அமைப்புக்கள் இன்று வெற்றிகரமாக உலகில் பல இடங்களில் இயங்கி வருகின்றன. அதில் குறிப்பாக மொறீசியஸ் நாட்டில் ஏழு ஏக்கர் நிலப்பகுதியில் இவரால் உருவாக்கப்பட்ட பொதுமக்களுக்கான ஆன்மீகப் பூங்காவுடன் கூடிய அமைப்பானது இன்று சிறந்த முறையில் இயங்கி வருகின்றது. இதனைப் போன்று ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமம் என்ற பெயரில் யாழ்ப்பாணத்தில் அளவெட்டி எனும் இடத்தில் ஆச்சிரமம் ஒன்றும் இயங்கி வந்தமை பற்றியும் அறிய முடிகின்றது. அத்தோடு சர்வதேச ரீதியில் பிரசித்தி பெற்ற 50க்கு மேற்பட்ட இந்து ஆலயங்களினை பார்வையிட்டுள்ள இவர் தனது மிஷனரிகள் மூலமாக உலகில் பல இடங்களில் சைவ சமயம் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் வகுப்புக்கள் என்பவற்றினை குடும்ப உறுப்பினர்களுக்கும், சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கும் முதியோர்களுக்கும் ஆசிரியர்கள் மூலமாக வழங்கியும் வந்துள்ளார்.

இவ்வாறாக இந்து சமய பாரம்பரியங்களை ஆராய்ந்து அதில் உள்ள கருத்துக்களை சிறப்பாக இவ்வாதீனத்தின் மூலம் இந்த முழு உலகிற்கும் அறியப்படுத்தி வருவதனை காணக்கூடியதாக உள்ளது.

78 http://www.himalayanacademy.com/monastery/about/endowments

# அத்தியாயம் : நான்கு

## காவாய் இந்து ஆதீன வளர்ச்சியில் துறவிகளின் வகிபங்கு

# காவாய் இந்து ஆதீன வளர்ச்சியில் துறவிகளின் வகிபங்கு

## 4.0 அத்தியாய அறிமுகம்

*காவாய் இந்து ஆதீனம் ஆறு நாடுகளைச் சேர்ந்த 23 துறவிகளினுடைய ஆன்மீக ஆச்சிரமமாகவும், இறையியல் கற்கைகள் நிலையமாகவும் திகழ்கின்றது.[79] (பார்க்க படம்: 21) இங்கு நாள்தோறும் தியானம், யோகாசனம், ஆலய கிரியைகள் மற்றும் பூசைகள் போன்றன சிறப்பான முறையில் துறவிகளினால் ஒழுங்குபடுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்தோடு இங்கு இருக்கின்ற அனைத்து துறவிகளும் ஒன்றிணைந்து தமது முறைப்படுத்தப்பட்ட தியானத்தினை நாள்தோறும் ஒரு மணிநேரம் (மு.ப 6.00 மணி தொடக்கம் மு.ப 7.00 மணி வரை) தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர். இவர்களின் இச்செயற்பாடானது எதிர்கால ஆன்மீகப் பிரியர்களுக்கும், உலக இந்து மக்களுக்கும் இந்து சமய அடிப்படைகளை சிறந்த முறையில் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.*

*இவ்வாதீனத்தின் துறவிகள்; 1973ஆம் ஆண்டிலிருந்து ஒரு நாளில் மூன்று மணித்தியாலங்களை (மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 12.00 மணி வரை) இங்கு காணப்படுகின்ற கடவுள் இந்து ஆலயத்தின் புனித வழிபாட்டிற்கென ஒதுக்கி தமது பாரம்பரிய வழிபாடுகளை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றனர். அத்தோடு இவ்வாதீனத் துறவிகளினால் எட்டு தடவைகள் இங்கு காணப்படும் இந்து கடவுளர்களுக்கு வழிபாடு மேற்கொள்ளப்பட்டும் வருகின்றது.*

79 நேர்காணல் - ஆறு.திருமுருகன்

| | | |
|---|---|---|
| 1 | அதிகாலை 03.00am மணிக்கு : | கணேச அபிசேகமும் பூசையும் |
| 2 | காலை 06.00am மணிக்கு : | முருக அபிசேகமும் பூசையும் |
| 3 | காலை 09.00am மணிக்கு : | சிவ அபிசேகமும் பூசையும் |
| 4 | மதியம் 12.00pm மணிக்கு : | சிவ பூஜை |
| 5 | மாலை 03.00pm மணிக்கு : | சிவ பூஜை |
| 6 | மாலை 06.00pm மணிக்கு : | முருக பூஜை |
| 7 | இரவு 09.00pm மணிக்கு : | சிவ பூஜை |
| 8 | நள்ளிரவு 12.00pm மணிக்கு : | சிவ பூஜை |

இவர்களின் இவ்வாறான செயற்பாடே இறை ஞானத்தினை பெறுவதற்கான சிறந்த புனித வழிபாடாகக் கொள்கின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். இதனைத்தவிர இவ்வாதீனத்தின் ஸ்தாபகரான சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் பற்றியும், சமஸ்கிருத மந்திரங்கள் மற்றும் தெய்வீக கீர்த்தனைகள் பற்றியும், இந்து விழாக்கள், சடங்குகள், கிரியைகள் பற்றியும், தமது குரு பரம்பரை பற்றியும் தான் கற்ற விடயங்களை வகுப்புக்கள், கருத்தரங்குகள், பயிற்சிகளின் போது இந்து சமய ஆர்வலர்களுக்கு கூறுவதன் மூலமாக இவ்வுலகிற்கு வெளிப்படுத்துகின்றனர்.

தன் தேவையை தானே பூர்த்தி செய்து கொள்ளுதல் எனும் நிபந்தனைக்கு அமைய இயங்கும் இந்த துறவிகளின் பகுதி நேர வேலைகளாக ஆதீனத்தின் சமையல் வேலைகள், தோட்ட வேலைகள், ஆலய தொண்டுகள் உட்பட அனைத்து ஆதீன வேலைகளையும் கணபதி குலம், லம்போதர குலம், பிள்ளையார் குலம், ஏகதந்த குலம், சித்தி தந்த குலம் என ஐந்து பிரிவுகளாக பிரிந்து மேற்கொள்கின்றார்கள்.[80]

அதிகாலையில் நித்திரை விட்டெழுந்து காலை கடன்களை முடித்து காலை வேளை முழுவதும் தியானம், யோகா, இறை வழிபாடு ஆகியவற்றில்

80 http://www.himalayanacademy.com/monastery/meet-the-monks

ஈடுபட்டு, மரக்கறி உணவை உட்கொள்ளும் இவர்கள் பகல் உணவாக சோறும் கறியும் உண்பர் பின்னர் 1மணிக்கு ஆதீன வேலைகளையும் அவர்களுக்கு வழங்கப்பட்ட கடமைகளையும் மேற்கொண்டு பின்னர் மாலை நேரத்தில் சிறிய நடைபயிற்சியினை மேற்கொள்வர். இரவு உணவாக இலேசான உணவுகளை உட்கொண்டு விடடு பின்பு சிறு நேரம் அனைவரும் கலந்துரையாடி விட்டு 9மணிக்கு நித்திரை கொள்வர்.

இவ்வாதீன துறவிகள் அட்டாங்க யோகத்தினை முதன்மைப்படுத்தி தமது ஆச்சிரம வாழ்வினை மேற்கொண்டு வருவதனால் திருமூலர் கூறிய

**இயம நியமமே எண்ணிலா ஆசனம்**
**நயமுறு பிராணாயாமம் பிரத்தியா காரம்**
**சயமிகு தாரணை தியானம் சமாதி**
**அயமுறும் அட்டாங்க மாவது மாமே.**

**(தி.10 பா.542)**

எனும் பாடலிற்கு அமைய அதன் படி நிலைகளான இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்ற எட்டு அம்சங்களையும் சிறப்பாக இவ்வாதீனத்தில் காணக்கூடியதாகவுள்ளது. சற்குரு என்று இவ்வாதீனத்தில் அறியப்படும் சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமி, சற்குரு போதிநாத வேலன் சுவாமி ஆகிய இருவரும் இவ்வட்டாங்க படிநிலையில் முறையே சமாதி நிலை, தியான நிலை எனும் நிலையில் வைத்து நோக்க முடியும். இதுபோன்றே ஏனைய துறவிகளும் அவரவர் பெற்ற ஞானத்திற்கு அமைய பல நிலைகளில் காணப்படுவதனை அறிய முடிகின்றது.

யோக சுவாமிகளினுடைய சிந்தனைகளை பெரிதும் போற்றி வந்த சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் தனது குருவின் கட்டளையான **“எமது சொந்தக்கதையை விடுத்து இந்து சமய குறிப்பாக சைவ சமய விடயங்களான தத்துவம், பாரம்பரியம், மதநம்பிக்கைகள் உட்பட அனைத்து இந்து சமயம் சார்ந்த விடயங்களையே இவ்வுலகிற்கு வெளிப்படுத்த வேண்டும்”**[81] எனும் கூற்றினை இறைவாக்காக கருதி தன் தனிப்பட்ட விடயங்கள் உட்பட ஆதீன

81 http://www.himalayanacademy.com/monastery/about/publishing

துறவிகளின் தனிப்பட்ட விடயங்களும் பெரும்பாலும் வெளிப்படுத்தப்பட வில்லை இருந்த போதிலும் ஆதீனத்தில் துறவியர்களால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளையும், அவரவருக்குரிய கடமைகளையும் கொண்டு அவர்களின் இவ்வாதீன இயக்கத்திற்கான பணிகளை ஆராய்வோம்.

இவர்களது இந்து ஆச்சிரம வாழ்வினை கண்ட பல இளம் வாலிபர்களும், திருமணமாகாதவர்களும் இவ்வாழ்வினை விரும்பி இவ்வாதீனத்தில் இணைந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறிருக்க இவ்வாதீன துறவிகள் சற்குரு, பரமாச்சாரியர்கள், ஆச்சாரியர்கள், சந்நியாசிகள், சாதகர்கள் என பல படிநிலை காரணப் பெயர்களை கொண்டு காணப்படுகின்றனர். அந்தவகையில் இவ்வாதீன துறவிகள் பற்றி அடுத்து ஆராய்வோம்.

## 4.1 சற்குருக்கள்

இவ்வாதீனத்தில் சற்குரு எனும் அடைமொழியானது இதுவரையில் சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமி, சற்குரு போதிநாத வேலன் சுவாமி ஆகிய இருவருக்குமே வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் இருவருமே ஆன்ம ஞானத்தில் உயர்ந்த நிலையில் வைத்து பார்க்கப்படுகின்றனர். "**சற்குரு**" எனும் பெயரானது **யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த யோக சுவாமிகளின் கௌரவப் பெயர்களில் ஒன்றாகும்.** இவ்வாதீனத்தினைப் பொறுத்தமட்டில் சற்குரு எனும் பெயர் நந்திநாத சம்பிரதாய கைலாச பரம்பரையினருக்கு வழங்கப்படும் பெயராக அமைகின்றது. இதற்கமைய இவர்கள் இருவரும் இப்பரம்பரையில் முறையே **162, 163**வது ஜெகதட்சாரியராக இப்பரம்பரையினை வளர்த்துச் செல்கின்றார்கள்.[82] காவியுடையுடன் தலையில் உருத்திராட்ச மாலையினை அணிந்திருக்கும் இவர்களில் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் **2001**ஆம் ஆண்டு சமாதி நிலையை அடைந்து இன்று இறை நிலையில் வைத்து வழிபடப்பட்டுகின்றமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.[83]

---

82 http://www.himalayanacademy.com/monastery/lineage-philosophy/gurudeva/

83 Satguru Bodhinatha Veylanswami, (2002), "His Living Legacy" **Hindusim Today,** P.39.

### 4.1.1 சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமி

இந்து உலகத்திற்கு அளப்பரிய சிவதொண்டு செய்வதற்கு **1927**ஆம் ஆண்டு ஜனவரி மாதம் **5**ஆம் திகதி வடஅமெரிக்காவில் கலிபோர்னியாவில் பிறந்த ஒரு அவதார புருஷராக குருதேவர் சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் (பார்க்க படம்: **22**) காணப்படுகின்றார். அவர் இளம் பராயத்திலேயே தமது பெற்றாரை இழந்து விட்டார். இவரின் பூர்வ புண்ணியவசமாக இருபது வயதிலேயே இவருக்கு ஆன்மீக உதயம் ஏற்பட்டு துறவு நிலைக்கு ஆளாகி விட்டார்.[84]

உலக பந்தங்களைத் துறந்து பரமசிவ தத்துவங்களின் மகத்துவத்தை உணர்வதற்காகத் தவத்திலும் தியானத்திலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். அவரது தூய்மையான யோகப்பயிற்சியினால் அவருக்கு முழுமையான ஞான அறிவு கிட்டியது. குருவருளைப் பெற்று பின்பு திருவருளை அடையும் பெருநோக்குடன் ஞான புருஷரான குருதேவா தமது இருபத்திரண்டாவது வயதில், கொழும்புத்துறையில் மிக எளிமையான முறையில் அன்பர்களுக்கு அருட்கடாட்சம் அருளிவந்த ஞானகுரு சிவயோக சுவாமிகளின் அருட்கண் பார்வையுடன், இளந்துறவியாகிய திருநாள் **1949**ஆம் ஆண்டு வைகாசிப் பூரணை தினமாகிய ஒரு நிறைந்த நாள் ஆகும். அன்றைய தினம் சிவயோகசுவாமிகள் இளந்துறவியாகிய குருதேவருக்குப் பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசித்து சுப்பிரமுனிய சுவாமிகள் எனும் நாமதீட்சை அளித்தார். தீர்க்கதரிசியான சிவயோகசுவாமிகள் சைவ சித்தாந்த தத்துவங்களையும் சைவக் கோயில்கள் கட்டி எழுப்பும் திருப்பணிகளையும் முறையே உலகெங்கும் பரப்பியும், செயற்படவும் மிகப் பரந்த நோக்குடன் குருதேவரை இனங்கண்டு அந்தப் புனிதமான மிகப்பொறுப்புள்ள சிவ தொண்டினைச் செய்யும்படி கட்டளையிட்டு குருதேவருக்கு அருள் செய்தார்.[85]

குருதேவரும் தமது குருவின் விருப்பப்படி அமெரிக்காவிற்குத் திரும்பி தனது ஞானகுரு உபதேசித்தின்படி சிவப்பணியாக நிறைந்த மனதுடன் நெறி தவறாமல் "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற முழு

84 தில்லையம்பலம் சிவயோகபதி, (**2010**) "சைவ சித்தாந்தத்தின் ஒளியை உலகெங்கும் பரப்பிய சற்குரு சிவாய சுப்பிரமணிய சுவாமிகள் குரு பூசை", **விளம்பரம், ப.16**

85 Satguru Bodhinatha Veylanswami, (2009), **GURUDEVA'S Spiritual Visions**, PP.35-40

நம்பிக்கையுடன் கர்ம வீரராகச் செயற்பட ஆரம்பித்தார்.[86] உலகம் முழுவதும் வியந்து பாராட்டத்தக்க சிவதொண்டுகள் பல ஆக்கபூர்வமாக செய்தார்.

இந்து சமயத்துடன் எவ்விதத்திலும் பிறப்பு ரீதியாக தொடர்பு படாத இவர் உண்மை பற்றிய தேடலில் இந்து சமயத்தினை கண்டறிந்து அதன் வழி இந்தப்பூமியில் ஒரு முழுமையான வாழ்வினையும், பாரம்பரியத்தினையும் ஏற்படுத்திய இவருடைய ஞான அறிவின் காரணமாக உலகளவில் அங்கிகரிக்கப்பட்ட இந்து சமய தலைவர்களில் ஒருவாரகக் காணப்படுவதோடு இவரின் புனித வாழ்க்கையினை ஏனையவர்கள் உதாரணமாகக் கொள்கின்றனர்.

162வது ஜெகதட்சாரியராக நந்திநாத சம்பிரதாய கைலாச பரம்பரையில் உதித்த இவர் அமெரிக்காவில் உள்ள காவாய் கார்டுன் தீவில் (Hawai's Garden Island) 376 ஏக்கர் நிலப்பரப்பில் முதன் முதலில் வெள்ளை நிற கிரைனட் கற்களால் சிவன் கோயில் ஒன்றை அமைத்து இந்த காவாய் இந்து ஆதீனத்தினை உருவாக்கினார். அடங்கிய எரிமலையினையும், பசுமையான தாவரங்களும் நிறைந்த ஒரு ஆற்றங்கரையிலே அமைக்கப்பட்ட இவ்வாதீனத்தில் இவருடன் சேர்ந்து சுவாமி போதி நாத வேலன் சுவாமி உட்பட சில துறவிகள் தமது நோக்கத்தினை நிறைவேற்றும் பொருட்டு சூரியன் உதயமாவதற்கு முன்னரே தியானங்களில் ஈடுபட்டு வந்தனர்.[87]

குருதேவர் என்று இவ்வாதீனத்தில் சிறப்பித்துக் கூறப்பட்ட இவர் தமது ஆதீனத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு காணப்பட்ட உறுப்பினர்களின் ஊடாக ஐந்து கண்டங்களிலே இந்து சமயம் சார்ந்த இவரது பணிகள் இடம் பெற்றுள்ளது. குருதேவர் இந்து சமயத்தினுடைய மூன்று தூண்களாக இவ்வாதீனத்தில் சற்குருவின் வாக்கு, இந்து ஆலயம், வேதங்கள் ஆகியவற்றினை சிறப்பாக பேணிப்பாதுகாத்து வந்தார்.[88] இப்பணியினை தற்சமயம் அவர்களது சீடர்கள் தொடர்ந்து சிறப்பாக முன்னெடுத்துச் செல்கின்றார்கள் இவரால் இவ்வாதீனத்தில் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்ட சைவ சித்தாந்த திருச்சபையானது (Saiva Siddhanta Church) உலகளாவிய ரீதியில் சந்நியாசிகளுக்கும், மாணவர்களுக்கும் சனாதன மார்க்கத்தினை பின்பற்றவும், யோகம் சார்ந்த பயிற்சிகளை மேற்கொள்ளவும் பெரிதும் தூண்டு கோலாக அமைந்து காணப்பட்டது.

---

86 Ibid

87 Op.cit, Satguru Bodhinatha Veylanswami, (2008), PP. 04-05

88 Ibid

வெளியீடுகளுக்கான நிறுவகமானது (Himalayan Academy) 1965ஆம் ஆண்டு குருதேவரினால் உருவாக்கப்பட்டது. இதனூடாக பல்வேறு வெளியீடுகளை இவர் ஆரம்பித்து வெளியிட்டுள்ளார் அவற்றில் Hinduism today எனப்படும் செல்வாக்கும், விருதுகளையும் பெற்ற சர்வதேச காலாண்டு இதழானது 1979ஆம் ஆண்டு குருதேவரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது தனது ஆதீன துறவிகளினுடைய ஞான அறிவை வெளிப்படுத்துவதற்காகவும், இந்து சமய மரபுகளை வலுப்படுத்துவதற்காகவும், சனாதன தர்மத்தின் சிறப்புக்களை வெளிக்கொணரவும் ஒரு பொது சேவையாக இவரால் மேற்கொள்ளப்பட்டது. இவர் இந்து சமயம் பற்றிய பல நூல்களுக்கு ஆசிரியராக இருந்து இவ் நிறுவகத்தின் மூலம் வெளியீடும் செய்துள்ளார். இவற்றில் பெரும்பாலானவை யோகாசனம் பற்றியவையாக அமைந்துள்ளன. பல பாடசாலைகளில் கல்வி கற்ற இவர் தனது முது கலைமாணிப் பட்டத்தினை இந்து சமயம் தொடர்பான கற்கையின் மூலமாக பெற்றுள்ளதோடு ஆயிரக்கணக்கான இளைஞர்களிடத்தில் சைவ சமயம் பற்றியும் அவற்றை பாதுகாத்தல் வேண்டும் என்றும் கூறி பல போதனைகளையும் செய்துள்ளார்.[89]

1986இல் புதுடில்லியில் உள்ள உலகமத பாராளுமன்றத்தில் (New Delhi's World Religious Parliament) "நவீனத்துவத்தின் ஐந்து நாள் (five modern-day)" என்ற தலைப்பில் இந்து சமய பெருமைகளை வெளிப்படுத்தவும், மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்குமாக நிகழ்ந்த சர்வதேச முயற்சியில் ஜெகடாச்சாரியார்களும் (Jagadacharyas), ஆசிரியர்களும் கலந்து கொண்ட சபையில் குருதேவரும் கலந்து உரைகளை நிகழ்த்தினார். 1993ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் உலக மதங்களின் மாநாடானது சிக்காக்கோவில் இடம்பெற்றது. இதன்போது குருதேவர் சுவாமி சித்தானந்தா சரஸ்வதி, கேரள அம்மாச்சி, மாதா அமிர்தானந்தம்மாயி ஆகியோருடன் இணைந்து இந்து சமய உரைகளை நிகழ்த்தியமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.[90]

மேலும் இவரால் வெளியிடப்பட்ட வெளியீடுகளுக்கு **தர்மச்சக்கர** (Dharmachakra) என்று சிறப்புப் பெயர் (1995இல்) வழங்கப்பட்டதோடு இவர் சர்வதேச கருத்து களத்தினரான ஆன்மீக மற்றும் பாராளுமன்ற தலைவர்களால் (Global Forum of Spiritual and Parliamentary Leaders) தனிப்பட்ட மனித வாழ்விற்குரிய இந்து சமயம் சார்ந்த பிரதிநிதியாக சுப்பிரமுனிய சுவாமிகள்

89 http://www.himalayanacademy.com/monastery/lineage-philosophy/gurudeva/

90 Ibid

தெரிவு செய்யப்பட்டு செயற்பட்டு வந்தமையினால் 1988இல் பிரித்தானியாவின் ஒக்ஸ்போர்ட்டிலும் (Oxford), 1990இல் மொஸ்கோவிலும் மற்றும் 1992இல் ரியோ டி ஜெனிரோவிலும் (Rio de Janiero) நூற்றுக்கணக்கான மத, அரசியல் மற்றும் அறிவியல் தலைவர்கள் பல நாடுகளிலிருந்தும் முதற் தடவையாக எதிர்கால மனித வாழ்வினை விவாதிப்பதற்காக இவ்விடங்களில் குருதேவருடன் இணைந்தார்கள்.[91]

குருதேவரினால் இந்து பாரம்பரியத்திற்கான ஒரு பொது சேவை அற நிதியம் ஒன்றை நிறுவுவதற்கு உலகம் பூராகவும் நிதி சேகரிக்கப்பட்டு 1995ஆம் ஆண்டு Hindu Heritage Endowment என்ற பெயரில் நிறுவப்பட்டது. 1996ஆம் ஆண்டு Hinduism today எனும் தமது சஞ்சிகையினூடாகவும், மேலும் India today, times பத்திரிகைகளின் மூலமாகவும் உலகம் முழுவதும் இந்து சமய கருத்துக்களை சிறப்பாக வெளிப்படுத்தியதனால் 1997ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதியினால் வினவப்பட்ட இந்து சமயம் சார்ந்த கருத்துக்களுக்கும், இந்து சமயத்தில் முதன் முதலில் தோன்றிய குளோனிங் முறைகளைப்பற்றிய விடயங்களுக்கும் சிறந்த முறையில் பதிலளித்ததோடு பல்வேறு இடங்களில் சொற்பெழிவுகளையும் மேற்கொண்டு இந்து சமய உண்மைகளை உலகறியச் செய்தார்.[92] (பார்க்க ஆவணக்காணொளி: 11)

1997ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சற்குரு சுப்பிரமுனிய சுவாமிகளின் இலங்கை, இந்தியா உட்பட பல நாடுகளுக்கு யாத்திரைகளை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். 1998ஆம் ஆண்டு கேரளாவின் விஸ்வா இந்து பரிசத் (Vishva Hindu Parishad of Kerala) என்பவர்களினால் இந்து சமயத்திற்கு குரல்கொடுத்த இந்த நூற்றாண்டுக்குரியவர் எனும் பட்டம் கொடுக்கப்பட்டது.[93] இவ்வாறு குருதேவர் பல்வேறு வகையில் இந்து சமயத்தினரால் போற்றப்பட்டு சைவ உலகின் ஒளிச்சுடராக விளங்கிய குருதேவர் 13ஆம் திகதி நவம்பர் மாதம் 2001ஆம் ஆண்டில் கனடா நேரப்படி காலை 5:54 மணியளவில் மகா சமாதியாகி சிவனின் பொற்பாதங்களை அடைந்து சிவசோதியுடன் கலந்து கொண்டார்.[94]

---

91 Ibid

92 Ibid

93 Ibid

94 Op.cit, Satguru Bodhinatha Veylanswami, (2002), P.39

### *4.1.2 சற்குரு போதிநாத வேலன் சுவாமி*

*சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் அவர்களால் **37** வருடங்களாக பயிற்சியளிக்கப்பட்டு வெற்றிகரமாக உருவாக்கப்பட்டவரே சற்குரு போதிநாத வேலன் சுவாமிகளாவார். (பார்க்க படம்: **23**) இவர் தனது குருதேவரின் **2001**ஆம் ஆண்டு நிகழ்ந்த மகா சமாதிக்குப் பின் இவ்வாதீனத்தினை தனது குருதேவரின் இடத்தில் இருந்து திறம்பட நடத்தி வருபவராகக் காணப்படும் அதேவேளை **163**வது நந்திநாத சம்பிரதாய கைலாச பரம்பரையின் ஜெகதட்சாரியராகவும் திகழ்கின்றமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.*

*இவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளால் உருவாக்கப்பட்டு நடாத்தி வந்த* Saiva Siddhanta Church, Himalayan Academy, Hindu Heritage Endowment *ஆகிய மூன்று அமைப்பிற்கும் தற்சமயம் தலைவராக இருந்து அவைகளின் செயற்பாடுகளை முன்பை விட மிகவும் சிறப்பாக வளர்ச்சிப்பாதையில் வளர்த்துக் கொண்டு வருகின்றார். அதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால்* Himalayan Academy*யினால் வெளியிடப்படும்* Hinduism today *எனும் சஞ்சிகையானது இவரால் சிறப்பாக மெருகூட்டப்பட்டு வெளியிடப்பட்டு வருகின்றது.*

*இச்சஞ்சிகையின் ஊடாக இவர் தனது குரு தேவரின் சிந்தனைகளையும், இந்து சமய உண்மைகளையும், மனித நேயத்தினையும், தமது ஆதீன செயற்பாடுகளையும், உலகளாவிய ரீதியில் இவ்வாதீனத்தினால் மேற்கொள்ளப்படும் இந்து சமய செயற்றிட்டங்கள் பற்றியும், உலகில் பல இடங்களில் நிகழுகின்ற இந்து சமயம் சார்ந்த விடயங்களையும் தமது ஆதீன துறவிகளின் உதவியுடன் தொகுத்து மூன்று மாதங்களுக்கொருமுறை இன்றைய நவீன உலகிற்கு ஏற்றாற் போல் வெளியிட்டு வருகின்றார்.*

*அடுத்ததாக தனது குருதேவரின் ஆணைகளை நிறைவேற்றுவதில் இவர் மிகவும் முனைப்பாக செயற்பட்டு வருகின்றார். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக குருதேவரால் ஆரம்பிக்கப்பட்டு இவ்வாதீனத்தில் கட்டப்பட்டு வரும் இறைவன் ஆலயமானது தற்சமயம் நிறைவு பெறும் தறுவாயில் உள்ளது. இதற்கென சிற்பிகளும், புனித கற்களும் இந்தியாவில் இருந்து கப்பல் மூலமாக இங்கு கொண்டுவரப்பட்டது என்பது ஆச்சரியமான தகவலே ஆகும். இது போதிநாத*

வேலன் சுவாமிகளின் அதி தீவிரமான முயற்சியினாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.[95]

இதனைத்தவிர இவர் ஆதீனத்தினை சிறந்த முறையில் வழிநடத்தி வருவதோடு உலகம் முழுவதும் சென்று சொற்பொழிவுகளையும், செயற்றிட்டங்களையும், மாநாடுகளையும் நடத்தி வருவதோடு (பார்க்க ஆவணக்காணொளி: *12*) அமெரிக்க அரசாங்கத்தின் உதவியுடன் இத்தீவில் ஆதீன செயற்பாடுகளை மேற்கொள்ளும் இவ்வாதீனத்தின் அரச தொடர்பினை சிறந்த முறையில் பேணியும் வருவதை அவதானிக்க முடிகின்றது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமெரிக்க அமைச்சரவை பேரவையில் இந்து சமய பண்பாட்டு கலாசாரத்தினை நடை உடை பாவனை மூலமாகவும், சொற்பொழிவினுடாகவும் வெளிப்படுத்திய செயற்பாடானது உற்று நோக்கத்தக்கதே ஆகும். (பார்க்க ஆவணக்காணொளி: *03*) இதனை விட சற்குரு நிலையில் காணப்படும் இவரை இறை நிலையில் வைத்து வணங்கும் செயற்பாடும் இவ்வாதீனத்தில் நிகழ்ந்து வருவதும் சுட்டிக்காட்ட வேண்டிய ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. (பார்க்க ஆவணக்காணொளி: *13*)

## 4.2 பரமாச்சாரியர்கள்

பரமாச்சாரியர்கள் என்று இவ்வாதீனத்தில் காணப்படுபவர்கள் சற்குரு நிலைக்கு முந்திய நிலையில் காணப்படுபவர்கள் ஆவர். பரமாச்சாரிய நிலையில் இருந்த போதிநாத வேலன் சுவாமிகள் குருதேவரால் சற்குருவாக ஆசி வழங்கப்பட்டார். எனவே பரமாச்சாரியர் என்று கூறப்படுபவர்களும் சற்குரு நிலையில் உள்ளவர்களும் இவ்வாதீனத்தினை பொறுத்தமட்டில் ஞானத்தால் வேறுபாடு அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். அந்தவகையில் இந்த பரமாச்சாரிய நிலையில் உள்ள பரமாச்சாரியர் சதாசிவாநந்த பழனி சுவாமி மற்றும் பரமாச்சாரியர் சிவாநந்த சேயோன் சுவாமி ஆகிய இருவரும் இவ்வாதீனத்தில் சிறந்த முறையில் மதிக்கப்பட்டு வருகின்றனர்.

### 4.2.1 பரமாச்சாரியர் சதாசிவநாத பழனி சுவாமி

Saiva Siddhanta Church, Himalayan Academy, Hindu Heritage Endowment ஆகிய மூன்று அமைப்பிலும், அதன் செயற்பாட்டிலும் முக்கிய உறுப்பினராக

95 http://www.himalayanacademy.com/monastery/lineage-philosophy/bodhinatha/

இவர் விளங்குகின்றார். (பார்க்க படம்: 24) கணபதி குலத்திற்கு தலைவராக கடமை புரியும் இவர் புத்தகங்கள், சஞ்சிகைகள், மொழிபெயர்ப்புகள், சித்திர வேலைப்பாடுகள், இணையத்தள செயற்றிட்டங்கள், தேடல் கல்வி, பிரயாணக்கல்வி போன்ற விடயங்களுக்கு பொறுப்பாளராகவும் காணப்படுகின்றார். இங்கு தற்சமயம் நிர்மாணிக்கப்பட்டு வரும் இறைவன் கோயில் கட்டுமானப்பணியில் இவரது பங்கு அளப்பரியதாக காணப்படுகின்றது.

இவர் இந்த ஆதீனத்தின் சிரேஸ்ட ஆலோசகராக கடமையாற்றுவதோடு ஏனைய இந்து சமய அமைப்புக்களுடனும், சர்வதேச அமைப்புக்களுடனும் இவ்வாதீனத்தின் தொடர்புகளை சிறந்த முறையில் வழிநடாத்திச் செல்பவராகவும் காணப்படுகின்றார். 1979ஆம் ஆண்டு hinduism today சஞ்சிகையின் பிரதம பதிப்பாசிரியராகவும் இவர் கடமையாற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். இவர் தனது ஓய்வு நேரங்களில் ஆதீனத்தில் வெப்பத்தினை தணிக்கக் கூடிய தாவரங்களையும், அரியவகை தாவரங்களையும், மருத்துவ குணமுடைய மூலிகைகளையும், புனிதத் தன்மை வாய்ந்த தாவரங்களையும் தோட்டத்தில் நடும் செயற்பாட்டினை செய்து வருகின்றார்.[96]

### 4.2.2 பரமாச்சாரியர் சிவநாத சேயோன் சுவாமி

இவரும் Saiva Siddhanta Church, Himalayan Academy, Hindu Heritage Endowment ஆகிய மூன்று அமைப்புக்களிலும் முக்கிய உறுப்பினராக விளங்குகின்றார். (பார்க்க படம்: 25) லம்போதர குலத்திற்கு தலைவராக கடமை புரியும் இவர் இக்குலத்திற்கு வழங்கப்பட்ட கடவுள் இந்து ஆலயம், சுகாதாரம், ஆதீன சமையலறை, விலங்குகள் பராமரிப்பு பொறுப்புக்களை இவர் குழு உறுப்பினர்களின் உதவியுடன் சிறப்பான முறையில் மேற்கொண்டு வருகின்றார்.

வேதம் தொடர்பான விடயங்களில் கூடியளவான அறிவு இவருக்கு காணப்படுவதனால் அது தொடர்பான் போதிநாத வேலன் சுவாமி அவர்களால் வெளியிடப்படும் Hinduism Today சஞ்சிகையில் வெளியிடப்படும் விடயங்களுக்கு இவர் பெரிதும் உதவி செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இவர் இறைவன் கோயிலின் நிர்மாணத்திற்காக அதிகளவான நிதிகளை பெற்றுக் கொடுத்துள்ள அதேவேளை இவ்வாதீனத்தில் பிரதம

96 http://www.himalayanacademy.com/monastery/meet-the-monks

பூசகராக இருந்து அனைத்து விதமான கிரியைகளையும் மேற்கொண்டு வரும் இவர் நாள்தோறும் கடவுள் இந்து ஆலயத்தில் காலையில் **9.00** மணிக்கு சிவனுக்குரிய பூசைகளையும் மேற்கொண்டு வருகின்றார்.

## 4.3 ஆச்சாரியர்கள்

ஆச்சாரியர்கள் எனும் பதமானது இவ்வாதீனத்தில் ஐந்து நிலைகளில் காhணப்படும் துறவிகளில் மூன்றாவது நிலையில் காணப்படும் துறவிகளைக் குறித்து நிற்கின்றது. அதாவது அட்டாங்க யோகத்தில் அரைவாசிப்படிநிலைகளை சிறந்த முறையில் கடந்த நிலையில் காணப்படும் இவர்கள் தமக்கு கீழ்காணப்படும் துறவிகளுக்கு வழிகாட்டியாக திகழ்ந்து வருவதோடு தனது மெஞ்ஞானத்தினை அதிகரிக்கக் கூடிய முறையில் பல செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதோடு இவ்வாதீனத்தின் இயக்கத்திற்காகவும் பல பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர். அவ்வாறிருக்க இவ்வாச்சாரிய நிலையில் தற்சமயம் ஆச்சாரிய குமார்நாத சுவாமி, ஆச்சாரிய ஆறுமுகநாத சுவாமி ஆகிய இருவர் காணப்படுகின்றனர்.

### 4.3.1 ஆச்சாரிய குமார்நாத சுவாமி

கணபதி குலத்தில் உறுப்பினராகக் காணப்படுகின்றார். (பார்க்க படம்: **26**) இவர் Himalayan Academy யில் தத்துவவியல், மனோதத்துவம், கலாசாரம் ஆகிய துறைசார்ந்த புத்தகங்களின் வெளியீட்டு பொறுப்புக்கள் அனைத்தும் இவருடையதேயாகும். இவ்வாதீனத்தின் வெளியீடாக வரும் Hinduism Today சஞ்சிகையினுடைய உப பதிப்பாசிரியராக இருந்து பக்க வடிவமைப்பு, அச்சுப்பதிப்பு, வடிவமைப்பு போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டுவரும் இவரது வடிவமைப்புத் திறனை வெளிவரும் சஞ்சிகைகளில் இருந்து சிறப்பாக அறிந்து கொள்ளலாம்.

இவர் தச்சு வேலையினை சிறப்பாக மேற்கொள்ளக்கூடியவராகக் காணப்படுவதனால் தனது ஓய்வு நேரங்களிலே ஆதீன தீவிலே காணப்படுகின்ற காடுகளில் அடர்ந்து கிளைகளை கொண்டு காணப்படும் மரங்களின் கிளைகளை வெட்டி ஆதீனத்தில் உள்ள கூடாரங்களையும், தளபாடங்களையும் மீள்நிர்மாணம் செய்து ஆதீனத்தின் அழகையும், ஸ்த்திரத் தன்மையினையும் அதிகரித்து செல்பவராகவும் இவர் காணப்படுகின்றார்.

### *4.3.2 ஆச்சாரியர் ஆறுமுகநாத சுவாமி*

*இவரும் கணபதி குலத்தில் உறுப்பினராகக் காணப்படும் அதேவேளை* Hinduism Today *சஞ்சிகையின் முகாமைத்துவ பதிப்பாளராகக் காணப்படுகின்றமையினால் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வெளிவரும் இச் சஞ்சிகைக்கு தேவையான எழுத்தாக்கங்களையும், அறிக்கைகளையும், புகைப்படங்களையும் சேகரித்து அதனை ஒழுங்குபடுத்தி சமர்ப்பிப்பவராகக் காணப்படுகின்றார். (பார்க்க படம்: 27) இதனால் ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், படப்பிடிப்பாளர்கள் போன்றோரின் இவ்வாதீனத்துடனான தொடர்புகளை இவர் பேணிப்பாதுகாக்க வேண்டியவராகவும் காணப்படுகின்றார்.*

*இவரது ஊடகத்துறை சார்ந்த செயற்பாடானது ஊடகத்துறையில் இந்து சமயத்தின் பாதுகாப்பினையும், புனிதத் தன்மையினைப் பேணுவதாகவும் அமைந்துள்ளது. பல யாத்திரிகர்களும், குடும்ப அங்கத்தவர்களும் பங்குகொள்ளும் ஹோமம் வளர்க்கும் செயற்பாடானது வாரந்தோறும் இவ்வாதீனத்தில் நிகழும். இவ் நிகழ்வின் போது இவராலும் மந்திர உச்சாடனங்கள் மேற்கொள்ளப்படும் என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவர் தனது ஓய்வு நேரங்களில் தமது ஆதீன எல்லைக்குள் உண்ணக்கூடிய பழங்களைத் தரக்கூடிய மரங்கள், கடினமான மரங்கள், பனை மரங்கள் போன்றவற்றினை நடுவதனை வழக்கமாகக் கொண்டவராக காணப்படுகின்றார்.*

## *4.4 சந்நியாசிகள்*

*சந்நியாசிகள் எனும் பெயரில் இவ்வாதீனத்தில் அறியப்படுபவர்கள் சாதகர் நிலையில் இருந்து பல வருடங்கள் தமது கடைமைகளை சரிவர செய்தும், நியதிகளை பின்பற்றியவர்களும் சந்நியாசிகள் எனும் நிலைக்கு தரம் உயர்த்தப்படுகின்றனர். இவர்கள் இறை ஞானத்தினை பெறக்கூடிய வகையில் உடலையும் உள்ளத்தினையும் பக்குவ படுத்தியவர்களாகக் காணப்படுகின்றனர். தற்பொழுது எட்டு உறுப்பினர்கள் சந்நியாசிகள் நிலையில் இங்கு காணப்படுகின்றனர்.*

### *4.4.1 சந்நியாசின் முருகநாத சுவாமி*

*பிள்ளையார் குலத்தில் உறுப்பினரான இவர் இலாப நோக்கமல்லாது இந்து சமயம் சம்பந்தமாக பல்வேறு அமைப்புக்களாலும் தனி நபர்களினாலும்*

வெளியிடப்படும் வெளியீடுகளை ஆதீனத்திற்காக கொள்வனவு செய்பவராவார். (பார்க்க படம்: 28) இவர் இவ்வாதீனத்தினால் வெளியிடப்படும் வெளியீடுகளை மேற்பார்வை செய்பவராகவும் காணப்படுகின்ற இதேவேளை சமஸ்கிருத மொழியில் இவர் நன்கு தேர்ச்சி பெற்றமையினால் இவ்வாதீனத்தில் நிகழும் வாராந்த ஹோமம் வளர்க்கும் செயற்பாட்டில் ஆச்சாரிய ஆறுமுகநாத சுவாமி அவர்களுடன் இணைந்து சமஸ்கிருத மந்திர உச்சாடனங்களை மேற்கொள்வதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதனை விட இவர் தனது ஒய்வு நேரங்களில் இயற்கையினால் சூழப்பட்ட ஆதீனத்தினை பாதுகாத்து தூய்மைப்படுத்தும் செயற்றிட்டங்களை மேற்கொள்வார்.

### 4.4.2 சந்நியாசின் பிரமநாத சுவாமி

கணபதி குலத்தினுடைய உறுப்பினரான இவர் Hinduism Today சஞ்சிகை உட்பட இவ்வாதீனத்தினால் வெளியிடப்படும் வெளியீடுகள் அனைத்திற்கும் முகாமைத்துவ தயாரிப்பாளராக கடமையாற்றுவதுடன் அவைகளின் அச்சீட்டுப் பணிகளுக்கும் பேருதவியாளராக திகழ்ந்து வருகின்றார். (பார்க்க படம்: 29) மேலும் இந்தியா, உக்ரைன் உட்பட சில நாடுகளில் குரு தேவரின் நூல்களை மொழி பெயர்ப்பு செய்து மீளச்சு செய்து வெளியிட்ட சிறப்பினை உடையவராகக் காணப்படுகின்றார்.[97]

தினந்தோறும் இவ்வாதீனத்தில் நிகழுகின்ற நிகழ்வையும், விசேட நாட்களில் நிகழ்கின்ற நிகழ்வுகளையும், பஜனைகள் மற்றும் குருக்களின் சொற்பொழிவுகளையும் புகைப்படங்கள் (photos), காணொளிகள் (videos) மற்றும் ஒலிப்பதிவுகளாகவும் (audios) ஆவணப்படுத்தி தமது ஆதீனத்திற்குரிய இணையத்தளத்தில் தரவேற்றம் செய்யும் பொறுப்பினை பெற்று அதனை திறம்பட மேற்கொண்டு வருகின்றார். அத்தோடு இவ்வாதீனத்திற்கு சுற்றுலா பிரயாணங்களை மேற்கொண்டு வருகைதருபவர்களையும், யாத்திரீகர்களையும், வழிநடத்தி அவர்களின் ஐயங்களை தீர்க்கும் பணியினையும் மேற்கொண்டு வருகின்ற அதேவேளை தனது ஒய்வு நேரங்களிலே நூற்றுக்கணக்கான பயன்தரும் மரங்களை பேணிபாதுகாப்பதுடன் அறுவடையும் மேற்கொண்டு வருகின்றார்.

97 Ibid

### *4.4.3 சந்நியாசின் சண்முகநாத சுவாமி*

*இவர் பிள்ளையார் குலத்திற்கு தலைவராக விளங்குகின்றார். (பார்க்க படம்: 30*) *பிள்ளையார் குலத்தினர்* Saiva Siddhanta Church, Himalayan Academy *ஆகிய இரு அமைப்புக்களின் நிர்வாக மற்றும் வர்த்தக செயற்பாடுகளுக்கு பொறுப்பாக இருந்து தமது செயற்றிட்டங்களை முன்னெடுத்துச் செல்லுகின்றனர். இவ்வாறிருக்க சந்நியாசின் சண்முகநாத சுவாமி* Hinduism Today *சஞ்சிகை,* Mini Mela gift shop,visitor center *ஆகியவற்றின் கணக்கெடுப்பு சம்மந்தமான விடயங்களை கவனித்து வருவதோடு* Hindu Heritage Endowment *அமைப்பின் இணையத்தளத்தோடு இணைத்து* $*12.8* million *பெறுமதியான சொத்துக்களை நிர்வகித்தும் வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.*[98]

*இவர் பல இந்து பாரம்பரிய பஞ்சாங்கங்களின் உதவியோடு தான் சிறப்பாக கற்றறிந்த பஞ்சாங்க கணிப்பு திறமையினையும் வைத்துக்கொண்டு புதிய பஞ்சாங்கம் ஒன்றினை உருவாக்கி ஆதீன நாளாந்த செயற்பாடுகளுக்கும், இங்குள்ள துறவிகளின் நாளாந்த கடமைகளுக்கும் இவர் பெரிதும் உதிவி செய்கின்றார். அதாவது இவரால் உருவாக்கப்படும் பஞ்சாங்கத்தின் படியே ஆதீன செயற்பாடுகள் இடம்பெறுகின்றது என்று ஐயமின்றி குறிப்பிட முடியும்.*

*மேலும் வெளிநாடுகளில் உள்ள ஆதீனத்தின் கிளைப்பதிப்பகங்களில் கணக்கெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும், சொற்பொழிவுகளை நடத்துவதற்காகவும் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகளுடன் அடிக்கடி வெளிநாடு சென்று திரும்பும் இவர் ஆதீன வெளியீடுகளை கொள்வனவு செய்பவர்கள், புத்தகங்களை வாங்குபவர்கள், மாணவர்கள், ஆதீன அங்கத்தவர்கள் ஆகியவர்களின் தகவல்களை தரவுமயப்படுத்தி ஆவணப்படுத்துவதோடு அவர்களை மேற்பார்வை செய்பவராகவும் இவர் விளங்குகின்றார். இவர் தனது ஓய்வு நேரங்களில் பண்ணையில் உள்ள பசுக்களுக்கு தேவையான உணவுகளை வழங்குவதோடு பண்ணையின் சுகாதார செயற்பாடுகளிலும் ஈடுபடுவார்.*[99]

### *4.4.4 சந்நியாசின் சரவணநாத சுவாமி*

*இவர் ஏகதந்த குலத்திற்கு தலைவராக விளங்குகின்றார். (பார்க்க படம்: 31*) *ஏகதந்த குலத்தினர் ஆதீனத்தின் உறுப்பினர்களுக்கும்,* Himalayan Academy

98 Ibid

99 Ibid

களின் மாணவர்களுக்கும் உடல் நலத்தினைப் பேணக்கூடிய வகையில் அமைந்த சைவ உணவு வகைகளை தெரிவு செய்யும் பொறுப்பினை பெற்று தன் கடமைகளை சிறப்பாக செய்து வருகின்றனர். இந்நிலையில் சந்நியாசின் சரவணநாத சுவாமி அவர்கள் போதிநாத வேலன் சுவாமிகளின் சுற்றுப்பிரயாணங்களுக்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வதோடு தபால் மூலமாக மேல் நிலைக்கற்கைகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு வழிகாட்டியாகவும் திகழ்கின்றார்.

மேலும் இவ்வாதீனத்தில் நிகழும் வாராந்த ஹோமம் வளர்க்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதோடு தனது ஓய்வு நேரங்களில் பல நாடுகளிலும் உள்ள மாணவர்கள் மற்றும் அங்கத்தவர்களுடன் தொடர்புகளை மேற்கொள்ளவும் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்காகவும் தனிப்பட்ட முறையில் இணையத்தளங்களை உருவாக்கி கருத்துக்களை பகிர்து கொள்வதில் ஆர்வம் கொண்டு தனது ஓய்வு நேரத்தினை கழிப்பார்.[100]

## 4.4.5 சந்நியாசின் யோகிநாத சுவாமி

இவர் சித்திதந்த குலத்திற்கு தலைவராக விளங்குகின்றார். (பார்க்க படம்: 32) சித்திதந்த குலத்தினர் கட்டிடம், தோட்டம், உபகரணங்கள் போன்றவற்றை பாதுகாத்தல் மற்றும் தோட்டத்தில் கீரைகள், பழங்கள், கிழங்குகள், உட்பட உணவு வகைகளை உற்பத்தி செய்தல் மற்றும் இந்துப் பண்டிகைகள், விழாக்கள் போன்ற நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளல் அத்தோடு கடவுள் இந்து ஆலய ஒன்றுகூடலை ஏற்பாடு செய்தல் போன்ற விடயங்களை பொறுப்பேற்று மேற்கொண்டு வருகின்றனர்.[101]

சந்நியாசின் யோகிநாத சுவாமி அவர்கள் தமிழில் நன்கு தேர்ச்சி பெற்று விளங்கியமையால் இந்தியாவில் உள்ள சிற்பிகளையும், பெங்களூரில் இருந்து புனித கற்களையும் கப்பல் மூலமாக ஆதீன இறைவன் கோயில் கட்டுமானப்பணிக்கு கொண்டுவர முடிந்ததோடு இவ் இறைவன் கோயில் நிர்மாணப்பணியை மேற்கொள்ளும் வாடகைக்கு அமர்த்தப்பட்டவர்களின் நிர்மாண செயற்பாட்டினை மேற்பார்வை செய்பவராகவும் விளங்குகின்றார்.

100 Ibid

101 Ibid

## 4.4.6 சந்நியாசின் செந்தில்நாத சுவாமி

கணபதி குலத்தினுடைய உறுப்பினரான இவர் ஆதீன வெளியீடுகளில் பதிப்பு, வடிவமைப்பு, தயாரிப்பு ஆகிய செயற்பாடுகளில் சற்குரு போதிநாத வேலன் சுவாமி, பரமாச்சாரிய சதாசிவாநந்த பழனி சுவாமி, ஆச்சாரிய குமார்நாத சுவாமி ஆகியோருக்கு உதவியாக செயற்பட்டு வருகின்றார். (பார்க்க படம்: 33) ஆதீனத்தில் தொழிநுட்பம் சார்ந்த பணிகளை அதாவது ஆதீன இணையத்தளம், சமூகவலைத்தளங்கள், கணணி மென்பொருள் மற்றும் வன்பொருள் சார்ந்த தொழிநுட்ப செயற்பாடுகள் அனைத்தும் இவரின் ஆலோசனைகள் மூலமாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.[102]

மேலும் ஆதீனத்தில் நிகழுகின்ற நிகழ்வுகளை காணொளிகளாக ஆவணப்படுத்தும் பொறுப்பினையும் இவர் பெற்றுள்ளதோடு Hinduis Today சஞ்சிகையில் கட்டுரைகளை எழுதியும், பதிப்பித்தும் வருகின்றார். அத்தோடு அமெரிக்காவில் பல்வேறு இடங்களில் போதிநாத சுவாமிகளுடன் இணைந்து இந்து சமயம் சார்ந்த விடயங்களை போதனை செய்து வருவதோடு இவர் தனது ஓய்வு நாட்களில் யோகா பயிற்சிகளிலும், சமையல் நடவடிக்கைகளிலும், தீவில் நீண்ட நடைபயணங்களிலும் ஈடுபடுபவராக திகழ்ந்து வருகின்றார்.

## 4.4.7 சந்நியாசின் சித்தநாத சுவாமி

இளம் சுவாமியான இவர் பிள்ளையார் குலத்தின் உறுப்பினராகக் காணப்படுவதோடு 2010ஆம் ஆண்டு மே மாதம் பௌர்ணமியன்று சந்நியாசின் தீட்சையினைப் பெற்றவராவார். (பார்க்க படம்: 34) இவ்வாதீனத்தின் பிரதான கணக்காளராகக் காணப்படுவதனால் இவ்வாதீனத்தின் எல்லா வகையான வரவு செலவு திட்டங்களை மேற்கொள்பவராகவும், வருடாந்த கணக்கறிக்கையினை பரிசோதனை செய்பவராகவும், ஆதீனத்தின் நிதிப்பரிமாற்றத்தினை மேற்கொள்பவராகவும், வரிசார்ந்த படிவங்களை பூரணப்படுத்துபவராகவும் இவர் காணப்படுகின்றமை இவரின் கணித மற்றும் கணணி தொடர்பான விடயங்களில் உள்ள அறிவை புலப்படுத்துவதாக அமைகின்றது.

Saiva Siddhanta Church, Himalayan Academy, Hindu Heritage Endowment ஆகிய மூன்று அமைப்புக்களினதும் பேணிப்பாதுகாக்கும் பணியையும் இவர்

102 Ibid

மேற்கொண்டு வருவதோடு இந்தியாவில் இருந்து Mini Mela gift shop புனித கலை சார்ந்த பொருட்களை கொள்வனவு செய்யும் பணியினையும் இவர் மேற்கொண்டு வருகின்றார்.[103] மேலும் இவ்வாதீனத்தில் நிகழும் வாராந்த ஹோமம் வளர்க்கும் செயற்பாட்டில் பங்குகொள்வதோடு தனது ஓய்வு நாட்களில் பசுக்களின் பண்ணையினை கவனித்து வருவதோடு விசேடமான உணவுகளையும், சூடான குழம்பு வகைகளையும் தயாரித்து ஆதீன அங்கத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் பண்பினையும் உடையவராகக் காணப்படுகின்றார்.

### 4.4.8 சந்நியாசின் கைவல்யநாத சுவாமி

பிள்ளையார் குலத்து உறுப்பினர்களில் இவரும் ஒருவராகக் காணப்படும் அதேவேளை இவர் நீண்ட காலமாக அதாவது 1967ஆம் ஆண்டிலிருந்து இவ்வாதீனத்தில் தொண்டாற்றி வருகின்றார். (பார்க்க படம்: 35) 2014ஆம் ஆண்டு ஆறாம் மாதம் பத்தாம் திகதி வைகாசி விசாகத்தில் சந்நியாச தீட்சையினைப் பெற்;றவராவார். மேலும் Hinduis Today சஞ்சிகையில் விளம்பரம் சம்பந்தமான அனைத்து விடயங்களையும் பொறுப்பேற்று மேற்கொண்டு வருவதுடன் ஆதீனத்தில் நிகழுகின்ற நிகழ்வுகள் பற்றியும், செயற்றிட்டங்கள் பற்றியும் விடயத்துடன் தொடர்புடைய அனைவருக்கும் மின்னஞ்சல் மூலமாகவும், கடிதங்கள் மூலமாகவும் அறிவித்தல் விடுக்கும் பணியினையும் மேற்கொண்டு வருகின்றார்.

மலேசியா மற்றும் மொறீசியஸ் நாடுகளில் இரண்டு வருடங்கள் சைவ சித்தாந்தத்தினை கற்பித்ததோடு Himalayan Academy யினால் வெளியிடப்படும் ஆன்மீகம் சம்மந்தமான விடயங்களை வெளிநாடுகளில் குழுச் செயற்பாடுகளின் மூலமாகவும், தனிச்செயற்பாடுகளின் மூலமாகவும் மக்களுக்கு சிறந்த முறையில் சென்றடைவதற்கு பெரும் உதவியாக உள்ளார்.

## 4.5 சாதகர்கள்

சாதகர்கள் என்ற ஆரம்ப நிலையினை இவ்வாதீனத்தில் அடைய வேண்டுமானால் இரண்டு வருடங்கள் அல்லது அதற்கு மேல் இவ்வாதீனத்தில் தொண்டுகளை

103 Ibid

மேற்கொண்டு அதில் துறவிகளுக்கு ஏற்றவாரான பயிற்சிகள் நிகழும். இப்பயிற்சியில் குறித்த காலம் சிறப்பாக தமது ஆச்சிரம வாழ்வை விரும்பி மேற்கொண்டால் இவர்கள் சாதகர்கள் எனும் துறவு நிலைக்குரிய ஆரம்ப நிலையில் இணைக்கப்படுவார்கள். இவ்வாறு இணைக்கப்பட்ட இவர்களுக்கு இறை ஞானத்தினை பெறுவதற்குரிய ஆரம்ப பயிற்சிகளை சிரேஸ்ட துறவிகள் வழங்குவார்கள். அத்தோடு சாதகர்கள் தமக்கு வழங்கப்பட்ட வேலைகளையும், கடமைகளையும் செய்து முடிக்க வேண்டியவர்களாக காணப்படுகின்றனர்.[104]

மேலும் இவர்கள் பல நிபந்தனைகளுக்கும் உள்வாங்கப்படுபவர்களாக காணப்படுகின்றனர். அதில் தலைமயிர், தாடி, மீசை ஆகியவற்றை முழுமையாக மழித்தல், உடலை எந்நேரமும் சுத்தமாக வைத்திருத்தல், வெள்ளைநிற ஆடையினை சுத்தமாக அணிதல், உண்மை வார்த்தைகளை பேசுதல், நற்செயல்களை செய்தல் என பல கட்டுபாடுகளின் கீழ் வாழ்பவர்களாகக் காணப்படுகின்றனர். இது இந்து சமயத்தில் கூறப்படும் அட்டாங்க யோக நெறியின் இயமம், நியமம் என்ற முதல் இரு படி நிலைகளை குறிப்பதாகவே அமைகின்றது. இதனை மேல்வரும் திருமந்திரப்பாடல்கள் சிறப்பாக புலப்படுத்தி நிற்கின்றன.

***கொல்லான், பொய் கூறான், களவிலான், எண்குணன்***
***நல்லான், அடக்க முடையான், நடுச்செய்ய***
***வல்லான், பகுந்துண்பான், மாசிலான், கள், காமம்***
***இல்லான், இயமத் திடையில்நின் றானே"***

~ (திருமந்திரம் 555)

***ஆதியை வேதத்தின் அப்பொருளாளனைச்***
***சோதியை அங்கே சுடுகின்ற அங்கியைப்***
***பாதியுள் மன்னும் பராசக்தி யோடு உடன்***
***நீதி உணர்ந்து நியமத்தன் ஆமே"***

~ (திருமந்திரம் 555)

இந்த சாதக நிலையிலே ஒன்பது உறுப்பினர்கள் இவ்வாதீனத்தில் இயங்கி

104 Ibid

வருகின்றனர். அவர்களின் செயற்பாடுகளைப்பற்றியும், பணிகள் பற்றியும் அடுத்து நோக்குவோம்.

### 4.5.1 சாதக ஹரநந்திநாதா

லம்போதர குலத்தின் உறுப்பினரான இவர் இறைவன் கோயில் கட்டுமானப்பணியில் நிதி சம்மந்தமான விடயங்களை மேற்கொண்டு வருவதோடு சில வருடங்களாக குருநாதரின் வேண்டுகோளுக்கிணங்க இங்கு காணப்படும் சுயம்பு லிங்கத்தின் புனிதத்தன்மையை தொடர்ந்தும் பேணுவதற்காக ஒவ்வொரு நாளும் காலை 9.00 மணிக்கு பூசையினை மேற்கொண்டு வருகின்றார். (பார்க்க படம்: 36) மேலும் அர்ச்சனைக்காக அடியவர்களால் கொடுக்கப்படும் பெயர் விபரங்களை நிர்வகிப்பதோடு பூசை முடிவில் விபூதி பிரசாதத்தினை அடியவர்களுக்கு கொடுக்கும்; பணியினையும் செய்து வருகின்றார்.

ஆதீனத்திற்கு நன்கொடைகளையும், பரிசுப்பொருட்களையும், ஏனைய உதவிகளையும் செய்து வருகின்றவர்களின் தொடர்புகளை சிறப்பாக பேணி வருவதோடு அவர்களுக்கு வருடத்தில் ஒரு நாள் இரவு உணவினை வழங்கும் ஆதீன செயற்பாட்டிற்கு இவரே பேருதவியாக இருந்து வருகின்றார். தனது ஓய்வு நாட்களிலே இவ்வாதீனத்தில் காணப்படும் மயிர்களையுடைய ஒருவகையான பூனை இனத்திற்கு உணவளித்து பேணிவருவதுடன் காட்டுப்பகுதியில் ஆதீனம் காணப்படுவதனால் சமையல் உபகரணங்களையும், பொருட்களையும் சமையலுக்கு பொறுப்பானவர் மற்றும் சில சந்நியாசிகளுடனும் சென்று நகர்ப்பகுதியில் வாங்கி வருபவராகவும் திகழ்கின்றார்.[105]

### 4.5.2 சாதக ஆதிநாதா

சித்தி தந்த குலத்தின் சிரேஸ்ட உறுப்பினரான இவர். (பார்க்க படம்: 37) இவ்வாதீனத்தில் கட்டடம் மற்றும் உபகரணங்கள் தொடர்பான விடயங்களில் சந்நியாசின் யோகிநாத சுவாமிகளுடன் இணைந்து தனது செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்ற அதேவேளை இவ்வாதீனத்தில் சம்பளத்துக்கு அமர்த்தப்பட்டுள்ள தொழிலாளிகளை மேற்பார்வை செய்தும்

105 Ibid

*வருகின்றார். இவர் சேதன மரக்கறி தோட்டங்களையும் உண்ணக்கூடிய பழங்களைத் தரக்கூடிய அதாவது வாழைப்பழம், பப்பாளிப்பழம் உட்பட பல பழ வகைகளையும் ஆதீன உறுப்பினர்களின் உதவியோடு உற்பத்தி செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றார்.*

*அத்தோடு ஆதீனத்திற்கு தேவையான நீர் வழங்கல் செயற்பாட்டினை இவரே மேற்கொண்டு வருகின்றார். அத்தோடு தனது ஓய்வு நாட்களில் தளபாடம் தயாரிக்கக் கூடியவாறு தூரநோக்கில் அறுவடைக்காக நடப்பட்ட 10000 மரக்கன்றுகளை பராமரிப்பதற்கான செயற்பாடுகளை இவர் முன்னெடுப்பதோடு தானிய வகைகளான கொக்கோ, மைலோ உட்பட சில தானியங்களின் விதைகளை நடும் வேலையினையும் இவர் செய்து வருகின்றார்.*

## *4.5.3 சாதக நீலகண்டநாதா*

*இவர் சித்திதந்த குலத்தின் உறுப்பினராவார். (பார்க்க படம்: 38) இவர் ஆயர்வேதம் தொடர்பான சிறந்த அறிவினை கொண்டு காணப்படுவதனால் நோயைக் குணப்படுத்தக்கூடிய மூலிகைகளையும், தாவரங்களையும் தோட்டத்தில் நட்டு வருவதோடு இவ்வாதீன துறவிகளுக்கு ஏற்படும் சிறு சிறு வியாதிகளுக்கு மருத்துவ சேவையினை வழங்குபவராகவும் காணப்படுகின்றார். அத்தோடு சத்குரு சுப்பிரமுனிய சுவாமிகளின் மகா சமாதியில் மாதம் ஒருமுறை நிகழ்த்தப்படும் விசேட பூசையிலும் கலந்து கொண்டு வருகின்றார்.*

*புனித தியான மையத்தினை திறம்பட பேணிவரும் இவர் ஓய்வு நேரங்களில் சமையலறைக்கு அருகில் இருக்கும் தனது மூலிகைத் தோட்டத்தில் காணப்படும் மருத்துவ குணமுடைய தாவரங்களை பயன்படுத்தி மருத்துவ குணமுடைய உணவுகளை தயாரித்து ஆதீன துறவிகளுக்கு உணவாக வழங்கும் பழக்கத்தினையுடையவராகக் காணப்படுகின்றார்.*

## *4.5.4 சாதக தெஜதேவநாதா*

*சித்திதந்த குலத்தின் உறுப்பினரான இவர் கட்டட மற்றும் புனித தோட்டம் ஆகியவற்றிற்கு உதவி பொறுப்பாளராக திகழ்கின்றார். (பார்க்க படம்: 39) இவர் பழத்தோட்டம், மரக்கறி தோட்டம் ஆகியவற்றில் நடைபெறும் அறுவடை செயற்பாட்டினை கண்காணித்து வருவதோடு தொழில் உபகரணங்கள், வாகனங்கள், போன்றவற்றையும் கண்காணித்து வருகின்றார்.*

சத்குரு சுப்பிரமுனிய சுவாமிகளின் மகா சமாதியில் மாதம் ஒருமுறை நிகழ்த்தப்படும் விசேட பூஜையிலும் கலந்துகொள்ளும் இவர் தனது ஓய்வு நேரங்களில் சமையலுக்கு உதவி செய்தல், யோகாசனப் பயிற்சியினை மேற்கொள்ளல் போன்றவற்றினையும் மேற்கொண்டு வருகின்றார்.

### 4.5.5 சாதக நந்திநாதா

லம்போதர குலாமின் உறுப்பினரான இவர் இவ்வாதீனத்தில் உள்ள அனைவருக்கும் உணவினை வழங்கும் பிரதான சமையலாளராகக் காணப்படுகின்றார். (பார்க்க படம்:40) இதனால் வாரம் ஒருமுறை ஆதீனத்திலிருந்து நகர்ப்புறத்திற்கு சென்று சமையலுக்குத் தேவையான பொருட்களை ஆதீன துறவிகள் சிலருடன் சென்று வாங்கிவரும் செயற்பாட்டினை தொடர்ச்சியாக மேற்கொள்பவராகக் காணப்படும் அதேவேளை கடவுள் ஆலயத்துடன் தொடர்பு பட்ட உதவிகளை வழங்க வருபவர்களுக்கு விசேட உணவுகளை தயாரித்து அவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டினையும் இவர் மேற்கொண்டு வருகின்றார்.

ஆலயத்திற்கு தேவையான பொருட்களை அதாவது இறைவனுக்குச் சாத்தும் பட்டாடைகள், பூஜைக்குத் தேவையான பொருட்கள் என அனைத்துப் பொருட்களையும் கொள்வனவு செய்பவர் இவரே என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு சத்குரு சுப்பிரமுனிய சுவாமிகளின் மகா சமாதியில் மாதம் ஒருமுறை நிகழ்த்தப்படும் விசேட பூஜையிலும் கலந்துகொள்ளும் இவர் சாதக நிலையில் உள்ள சந்நியாசிகளினால் (புதிதாக இணைந்தவர்கள்) உச்சரிக்கப்படும் மந்திரங்களின் உண்மைத்தன்மையை சந்நியாசின் செந்தில்நாத சுவாமிகளுடன் இணைந்து ஆராய்ந்து தவறுகளை நிவர்த்திசெய்ய பேருதவியாகவும் திகழ்கின்றார்.

இவர் விலங்குகள் மீது அதிகம் விருப்பம் கொண்டு காணப்படுவதனால் ஓய்வு நாட்களிலே ஆதீனத்தில் உள்ள பூனைகள், பசுக்கள், பறவைகள், மீன்கள் என அனைத்து ஜீவராசிகளுக்கும் உணவளித்து வருபவராகவும், இறைவனுக்கு அணிவிக்கும் பூமாலையினைக் கட்டும் செயற்பாட்டினையும், மந்திரங்களை பயிற்சி செய்து பார்க்கும் செயற்பாட்டினையும் இவர் மேற்கொண்டு வருகின்றார்.

### 4.5.6 சாதக ராஜநாதா

கணபதி குலத்தினுடைய உறுப்பினரான இவர் இவ்வாதீனத்தின் துறவிகளினால்

*பெரிதும் விரும்பப்படும் ஒருவராகக் காணப்படுகின்றார். (பார்க்க படம்: 41) அதற்கான காரணம் என்னவென்று பார்த்தோமானால் இவர் இனிமையாக அனைவருடனும் பேசிப் பழகும் சுபாவம் உடையவராகக் காணப்படுவதோடு இணையம் தொடர்பாக இவருக்கு இருக்கும் அறிவானது இங்குள்ள துறவிகளின் சில தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இருப்பதனாலும் இவர் அனைத்து துறவிகளுடனும் நெருங்கிப் பழக வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தியமையினாலேயே இவர் அனைவரின் மனங்கவர்ந்தவராக திகழ்கின்றார்.*[106]

*அத்துடன் ஆதீனத்தில் வருகைதரு மாணவர்களுக்கு கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு துணை செயற்பாடுகளை மேற்கொண்டும் வருகின்றார் இவர் சத்குரு சுப்பிரமுணிய சுவாமிகளின் மகா சமாதியில் மாதம் ஒருமுறை நிகழ்த்தப்படும் விசேட பூஜையிலும், வாரந்தோறும் இங்கு நிகழ்த்தப்படும் ஹோமம் வளர்க்கும் செயற்பாடுகளிலும் பங்கு கொள்வார். அத்தோடு தனது ஓய்வு நேரங்களில் ஆதீனத்தில் உள்ள துறவிகளுக்கு சிறப்பான பானங்களை தயார் செய்து வழங்கும் பழக்கத்தினை உடையவராகவும் திகழ்கின்றார்.*

### *4.5.7 சாதக மயுரநாதா*

*பிள்ளையார் குலத்தில் இருந்து தனது கடமைகளை மேற்கொள்ளும் இவர் கணித அறிவிலும் மற்றும் கணணி அறிவிலும் சிறப்பாக தேர்ச்சி பெற்று காணப்படுவதனால் நிர்வாகம், நிதிக்கணக்கு, தரவுப்படுத்தல் போன்ற ஆதீன செயற்பாடுகளுக்கு பெரிதும் உதவி வருகின்றார். (பார்க்க படம்: 42) இவர் தனது ஓய்வு நேரங்களில் ஆதீனத்தில் காணப்படும் இயந்திரங்களில் காணப்படும் சிறு சிறு பிழைகளை திருத்தம் செய்வதோடு பசுவில் பால் கறத்தல், சமையல் செயற்பாடுகளுக்கு உதவுதல் என பல செயற்பாடுகளை இங்கு மேற்கொண்டு வருகின்றார்.*

### *4.5.8 சாதக ஜெயநாதா*

*கணபதி குலத்தினுடைய உறுப்பினரான இவர் ஊடகத்துறை, பக்க வடிவமைப்பு, புகைப்பட வடிவமைப்பு, செயற்றிட்ட முகாமைத்துவ நிர்மாணிப்பு, விவசாயம்*

106 Ibid

என பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற்றவராகக் காணப்படுவதனால் இவ்வாதீனத்தில் இவை தொடர்பான விடயங்கள் அனேகமானவற்றில் இவரது உதவி எனைய துறவிகளுக்கு தேவைப்பட்டு வந்துள்ளது. (பார்க்க படம்: 43) மேலும் சித்திரம் வரைதல், சிறப்பாக எழுதும் திறமை என்பன இவருக்கு இயல்பாகவே காணப்படுவதனால் Hinduism today சஞ்சிகையில் கட்டுரைகளை எழுதுவதற்கும், வடிவமைப்பதற்குமான சந்தர்ப்பம் தானாகவே கிடைக்கப்பெற்றதோடு அதனை சிறப்பாகவும் மேற்கொண்டு வருகின்றார்.

### 4.5.9 சாதக தயநாதா

சித்திதந்த குலத்தின் உறுப்பினரான இவர் அண்மைக்காலத்தல் அதாவது **2012**ஆம் ஆண்டுதான் இவ்வாதீனத்தில் இணைந்துள்ளார். (பார்க்க படம்: 44) இரண்டு வருடங்கள் இவ்வாதீனத்தில் சிறப்பாக தொண்டுகளை புரிந்து வந்த இவர். **2014**ஆம் ஆண்டிலேயே சாதக எனும் இவ்வாதீன ஆரம்ப துறவு நிலைக்குரிய அடைமொழிப் பெயரினை பெற்றார். இவர் தற்சமயம் ஆதீன கட்டடத் தொகுதி, உணவு ஆகிய பிரிவுகளில் கொடுக்கப்பட்ட வேலைகளை சிறப்பாகச் செய்து வருகின்றார்.

மேலும் அங்கு புதிதாக அமைக்கப்பட்ட சிவா மாட்டுத் தொழுவத்தினை சுத்தம் செய்தல், பசுவுக்கு உணவு வழங்குதல், கழிவுகளை அகற்றுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதோடு நிர்மாணத்துறை, நில அளவைத்துறை போன்ற துறைகளில் சிறந்த முறையில் ஆதீனத்தினரினால் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றார். இவர் தனது ஓய்வு நேரங்களில் சமையல் செயற்பாடுகளுக்கு உதவுவதோடு, சர்க்கரை நீக்கப்பட்ட ஐஸ்கிரீம், பேகன் போன்ற உணவுகளை ஆதீனத்தினருக்காக தயாரித்து வழங்கி வருகின்ற செயற்பாட்டினை வழமையாகக் கொண்டுள்ளார்.[107]

இவ்வாறு இவ்வாதீனத்தில் துறவிகளின் துறவு வாழ்க்கையானது சுயநலமான ஒரு இறை இன்பத்தினை பெறும் நோக்கமாக அமையப் பெறாமல் "**யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்**" எனும் திருமூலரின் கூற்றிற்கமைய ஒவ்வொரு துறவியும் இவ்வாதீனத்தில் பொதுச் சேவையினை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களது இப்பணியே இவ்வாதீனத்தின் நிலையிருப்புக்கு அடிப்படையாக விளங்கி வருகின்றது என்பதனை மேற்கூறிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஆணித்தரமாக குறிப்பிட முடியும்.

107 Ibid

# அத்தியாயம் : ஐந்து

## நிறைவுரை

# நிறைவுரை

உலகம் முழுவதும் காணப்படும் பல இந்து நிறுவனங்களைப் பற்றி அறிந்திருக்கின்றோம். ஆனால் அவைகள் இந்து சமயத்தின் தாயகமான இந்தியா மற்றும் பழங்காலம் முதலாக இந்துக்கள் வாழ்ந்து வரும் நாடுகளான ஈழம், நேபாளம் உட்பட்ட நாடுகளில் இருந்து சென்ற இந்துக்களால் உருவாக்கப்பட்டு நடாத்தப்பட்டு வருவதாகவே பெரும்பாலும் இருக்கும். அவ்வாறிருக்க முழுமையாக மேலைத்தேசத்தவரினால் உருவாக்கப்பட்டதோடு இயக்கப்பட்டும் வரும் காவாய் இந்து ஆதீனம் பற்றியும், அதன் உலகளாவிய ரீதியிலான இந்து சமயப் பணிகளை பற்றியும் வெளிப்படுத்துவதாகவே **"அமெரிக்க காவாய் இந்து ஆதீனம்"** எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது அமைந்துள்ளது.

மேலைத் தேசத்தவர்களின் கீழைத்தேச வருகையால் இந்து சமயத்திற்கு பாரிய சரிவு ஏற்பட்டது என்று பொதுவாக இந்துக்கள் மத்தியில் கருத்து நிலவி வருகின்றது. அதன் உண்மைத்தன்மையானது ஆதார பூர்வமாக காணப்பட்டாலும் அவ்வாறு ஏற்பட்ட சரிவு நிலையினை சரி செய்ததில் மேலைத்தேசத்தவர்களுக்கு பாரிய பங்குள்ளது. அவைகளை ஆசியியற் கழகத்தின் (The Asiatic Society) உருவாக்கம் மற்றும் கிழக்கத்திய புனித நூல்களின் (The Sacred Books of the East) தொகுப்பு ஆகியவைகளை முதன்மைப்படுத்தி ஆதார பூர்வமாக நிறுவியதோடு கூட்டு முயற்சிக்கு வெற்றி கட்டாயம் கிடைக்கும் என்பதையும் ஆய்வு தலைப்பில் நின்று விலகாது இவ்வாய்வின் இரண்டாவது அத்தியாயத்தில் ஆராயப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் இருந்து 1949ஆம் ஆண்டு ஈழம் வந்த சற்குரு சிவாய சுப்பிரமுணிய சுவாமிகள் அக்காலத்தில் ஈழத்திருநாட்டில் சித்தர் மரபையும், சைவ சித்தாந்த தத்துவ நெறியினையும் ஒருங்கே வளர்த்து வந்த யோக சுவாமிகளின் பல சீடர்களில் ஒருவரானார். இன்று இந்த சித்தர் மரபையும், சைவ சித்தாந்த நெறியையும் மிகச்சிறப்பாக நாம் பார்க்க வேண்டுமானால் கட்டாயம் காவாய் தீவில் உள்ள இந்து ஆதீனத்திற்கு செல்ல வேண்டும்.

அந்த அளவிற்கு அங்கு இவையிரண்டும் சிறப்பாக பேணப்படுவதோடு வளர்க்கப்பட்டும் வருகின்றன. ஈழத்தில் இருந்து திரும்பிய சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளால் 1979ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வாதீனத்தின் ஒன்றன் பின் ஒன்றாக மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு செயற்படுகளும் அதன் வளர்ச்சிப் பாதையின் ஒவ்வொரு படிநிலைகளாக அமைந்திருக்கின்றன. அவ்வாறிருக்க இவ்வாதீனத்தின் செயற்பாடுகளையும், அச்செயற்பாடுகள் இந்து சமய பாரம்பரியத்திற்கு அமைய மேற்கொள்ளப்படுகிறதா? என்பது பற்றியும் ஆராயப்பட்ட மூன்றாம் அத்தியாயத்திலே இவ்வாதீன செயற்பாடுகள் அனைத்தும் இந்து பாரம்பரியத்தில் நின்றே மேற்கொள்ளப்படுகின்றது என்ற முடிவினை கூறக்கூடிய வகையில் காணப்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

இவ்வாய்வின் நான்காவது அத்தியாயத்திலே ஹவாய் இந்து ஆதீன வளர்ச்சியில் அவ்வாதீனத்தின் துறவியர்களினுடைய பங்கானது எவ்வாறு காணப்படுகின்றது என்பதனை இவ்வாதீனத்திற்குரிய 06 நாடுகளைச் சேர்ந்த 23 துறவிகளின் செயற்பாடுகள் அத்தோடு அவர்களின் கடமைகள் ஆகியன பற்றியும் ஆரயப்பட்டது. அதன் படி இவ்வாதீனத்து துறவிகள் துறவு வாழ்க்கையில் இருந்த போதிலும் இன்றைய நவீன உலக போக்கிற்கேற்ப இந்து சமய உண்மைகளை உலகிற்கு வழங்குவதன் மூலமாகவும், தமக்கு வழங்கப்பட்ட கடமைகளை எவ்வித சலன மனப்பாங்கும் இல்லாமல் மேற்கொள்வதனாலும், தியானம் மற்றும் யோகா பயிற்சிகளின் மூலமாக ஒருநிலைப்படுத்தப்பட்ட மனதுடன் இயங்குவதனாலுமே இந்த ஹவாய் இந்து ஆதீனமானது ஒரு ஸ்த்தரமான தன்மையில் இயங்கிக் கொண்டு வருகின்றது என்ற முடிவினை எடுக்க முடிகின்றது.

எனவே ஹவாய் இந்து ஆதீனமானது தற்கால இந்து சமய வளர்ச்சிக்கு உலகலாவிய ரீதியில் மிகப் பெரும் பங்களிப்பினை வழங்கி இன்றைய நவீன உலகில் இந்து சமயப் பாரம்பரியத்தினை பாதுகாத்தும், இந்து சமயம் சார்ந்த சிறந்த சீடர்களையும், அறிஞர்களையும், பக்தர்களையும் உருவாக்கியும் வருகின்ற ஓர் தலைசிறந்த ஆதீனமாக இக் காவாய் இந்து ஆதீனம் காணப்படுகின்றது.

# உசாத்துணைகள்


| | நூல்கள் | | |
|---|---|---|---|
| 01 | இராஜசேகரன்,இரா., | 2003, | ***சைவப் பெருவெளியில் காலம்***, *நர்மதா பதிப்பகம், சென்னை 600017.* |
| 02 | சுபராஜ்,ந., | 2012, | **இந்து மதமும் மேற்கத்தையவர்களின் ஆய்வுகளும்**, அறிவகம், கிளிவெட்டி திருமலை. |
| 03 | Satguru Bodhinatha Veylanswami, | 2003, | Gurudeva's Toolbox for a Spiritual Life, Himalayan Academy, USA. |
| 04 | Satguru Bodhinatha Veylanswami, | 2008, | All about Kauai Hindu Monastery, Himalayan Academy, USA |
| 05 | Satguru Bodhinatha Veylanswami, | 2009, | GURUDEVA'S Spiritual Visions, Himalayan Academy, USA. |
| 06 | Satguru Sivaya Subramuniyaswami, | 2006, | Monks' Cookbook (Second Edition), Himalayan Academy, USA. |

| | சஞ்சிகைகள் | | |
|---|---|---|---|
| 07 | கங்கா, | 2011, | "சுற்றுலாவுக்கு பேர் போன ஹவாய் தீவு", **கலைக்கேசரி**, எக்ஸ்பிரஸ் செய்தித்தாளகம், கிரேன்ட் பாஸ் வீதி, கொழும்பு 12, பக்.54-59. |
| 08 | கேசவன்.எஸ்., அருள்நேசன்.பு., | 2013, | "மேனாட்டுப் பல்கலைக்கழகங்களில் இந்து நாகரிகம்", **ஆயதனம்**, இந்து சமயப் பிரிவு, சமயத்துறை, தேசிய கல்வி நிறுவகம், ப.59. |
| 09 | சுபராஜ்,ந., | 2013, | "இந்துமத இலக்கியங்கள் தொடர்பான ஆய்விலே ஆசியவியற் கழகத்தின் (The Asiatic Society) வகிபங்கு", **பண்பாடு**, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, பக்.7-10. |

| | | | |
|---|---|---|---|
| 10 | திருமுருகன், ஆறு, | 2003, | திருமுருகன்.ஆறு, "மேலைத்தேய நாடுகளில் இந்து சமயம்", **இரண்டாவது உலக இந்து மகாநாட்டு சிறப்பு மலர்**, இலங்கை, பக்.459-464. |
| 11 | தில்லையம்பலம் சிவயோகபதி, | 2010, | "சைவ சித்தாந்தத்தின் ஒளியை உலகெங்கும் பரப்பிய சற்குரு சிவாய சுப்பிரமுணிய சுவாமிகள் குரு பூசை", **விளம்பரம்**, கனடா, ப.16 |
| 12 | மேகலா கிருபைராஜா, | 2010, | "மேலை நாடுகளில் இந்துக்களின் பரம்பலும் அதன் பின்னணியும்", **சனாதனம்**, இந்துப் பண்பாட்டுக் கழகம், இந்து நாகரிக கற்கைகள் புலம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை, பக்.103-110. |
| 13 | Satguru Bodhinatha Veylanswami, | 2002, | "His Living Legacy", **Hindusim Today**, Himalayan Academy,USA , P.39. |
| 14 | Satguru Bodhinatha Veylanswami, | 2010, | "We are whom we meet", **Hindusim Today**, Himalayan Academy,USA, P.10. |
| 15 | Satguru Bodhinatha Veylanswami, | 2014, | "A10-Minute Spiritual workout", **Hindusim Today**, Himalayan Academy, USA, P.10. |

# இணையத்தளங்கள்


1. http://asiaticsocietycal.com/history/1.htm
2. http://asiaticsocietycal.com/history/index.htm
3. http://asiaticsocietycal.com/history/index.htm
4. http://asiaticsocietycal.com/history/index.htm,
5. http://bhaktivedantaashram.org/vdm_article/bhaktivedanta-ashram/
6. http://bhaktivedantaashram.org/vdm_article/his-holiness-bhaktivedanta-ramakrishnananda-maharaja-prabhuji/
7. http://bhaktivedantaashram.org/vdm_article/the-bhaktivedanta-mission/
8. http://dev.himalayanacademy.com/media/books/saivite-hindu-religion-book-one/web/ops/xhtml/ch05.html
9. http://divyaloka.ru/en-us/about-divya-loka/how-it-began
10. http://divyaloka.ru/en-us/about-divya-loka/photo-gallery/landscape-design
11. http://en.wikipedia.org/wiki/Julius_Jolly
12. http://solvanam.com/?p=25510#sthash.e2YLKtSI.dpuf
13. http://tamil.chennaionline.com/tamilcolumn/

newsitem.aspx?NEWSID=fc46cd08-bc8e-40c1-b094-7de9e857e0a2&CATEGORYNAME=vijay

14. http://tamil.chennaionline.com/tamilcolumn/newsitem.aspx?NEWSID=fc46cd08-bc8e-40c1-b094-7de9e857e0a2&CATEGORYNAME=vijay
15. http://tamilfuser.blogspot.com/2012/12/6.html
16. http://tamilspeak.com/?p=26029
17. http://www.bbc.co.uk/news/10401741
18. http://www.bbc.co.uk/tamil/news/story/2010/07/100701_ghanahindutemple.shtml
19. http://www.bbc.co.uk/tamil/news/story/2010/07/printable/100701_ghanahindutemple.shtml
20. http://www.dinamalar.com/nri/details.asp?id=859&lang=ta
21. http://www.dinamalar.com/nri/details.asp?id=859&lang=ta
22. http://www.hheonline.org/
23. http://www.himalayanacademy.com/monastery/about/endowments
24. http://www.himalayanacademy.com/monastery/about/founder
25. http://www.himalayanacademy.com/monastery/about/gardens
26. http://www.himalayanacademy.com/monastery/about/intro
27. http://www.himalayanacademy.com/monastery/about/iraivan
28. http://www.himalayanacademy.com/monastery/about/kadavul

29. http://www.himalayanacademy.com/monastery/about/lineage

30. http://www.himalayanacademy.com/monastery/about/minimela

31. http://www.himalayanacademy.com/monastery/about/monastery

32. http://www.himalayanacademy.com/monastery/about/philosophy

33. http://www.himalayanacademy.com/monastery/about/pilgrimage

34. http://www.himalayanacademy.com/monastery/about/publishing

35. http://www.himalayanacademy.com/monastery/about/study

36. http://www.himalayanacademy.com/monastery/about/travel-study

37. http://www.himalayanacademy.com/monastery/about/wisdom

38. http://www.himalayanacademy.com/monastery/lineagephilosophy/bodhinatha/

39. http://www.himalayanacademy.com/monastery/lineage-philosophy/gurudeva/

40. http://www.himalayanacademy.com/monastery/meet-the-monks

41. http://www.himalayanacademy.com/readlearn/books

42. http://www.himalayanacademy.com/site/search/media_type/video

43. http://www.himalayanacademy.com/view/2014-07-14_mauritius-innersearch

44. http://www.himalayanacademy.com/view/lexicon/Himalayan%20Academy

45. http://www.hindu-blog.com/2010/07/hindu-temple-at-ghana-in-africa.html

46. http://www.hinduhumanrights.info/promoting-vedic-ways-in-russia/

47. http://www.hinduismtoday.com/

48. http://www.madathuvaasal.com/2007/09/blog-post_06.html

49. http://www.tamilhindu.com/2011/05/hindu-temple-in-ghana

50. http://www.tamilhindu.com/2011/05/hindu-temple-in-ghana/

51. http://www.theatlanticpost.com/culture/hinduism-ghana-shows-exponential-growth-providing-respite-african-devotees-6538.html

52. http://www.youtube.com/user/HinduismTodayVideos

53. http://www.youtube.com/user/HinduismTodayVideos/videos

54. http://www.youtube.com/user/kauaiaadheenam/videos

55. http://www.youtube.com/watch?v=2Zq3A4xnxs&feature=youtube_gdata_player

56. http://www.youtube.com/watch?v=OnXCq2eN4E0&list=UUr6mOJAX2uZUUQhSUq2TR_Q

57. http://www.youtube.com/watch?v=xGyWBxR3xhs&list=UUf3YsVIzlJ_1RPknIwu4Xsw

58. http://www.theshiva.net


❖ *அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவரான **ஆறு.திருமுருகன்** என்பவருடன் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல் மூலம் பெறப்பட்ட தகவல்கள் உசாத்துணையாக பயன்படுத்தப்பட்டுள்ளன.*

# பின்னிணைப்புக்கள்

## அட்டவணைகள்

| அட்டவணை : 01 | | |
|---|---|---|
| ஆண்டு (YEAR) | தலைவர்கள் (PRESIDENTS) | செயலாளரகள் (SECRETARIES) |
| 1784-89 | Sir William Jones | George Hillarow Barlow, John Herbert Harington |
| 1790 | Sir William Jones | John Herbert Harrington |
| 1790 (end)-1793 | Sir William Jones | Edmund Morris |
| 1794-95 | Sir John Shore | Edmund Morris |
| 1796 | Sir John Shore | Captain Symes |
| 1797 | Sir John Shore | C E Carrington |
| 1799 | Sir J Ansturther Bart | W Hunter |
| 1802 | Sir J Ansturther Bart | R Home |
| 1805 | Sir J Ansturther Bart | W Hunter |
| 1807 | H T Colebrooke | W Hunter |
| 1810 | H T Colebrooke , Eari of Moira | Dr. W Hunter, Dr. H H Wilson |
| 1820 | Marquis of Hastings | H H Wilson (absent), Capt. A Lockett (Offg.) |
| 1822 | Maquis of Hastings | H H Wilson |
| 1825 | Hon'ble J H Harrington | W W Wilson |

| | | |
|---|---|---|
| 1828 | Sir C E Grey | H H Wilson |
| 1832 | Hon. Sir E Ryan | W H Wilson |
| 1833 | Hon. Sir E Ryan | James Prinsep, Babu Ramcomal Sen (First Indian Secretary) |
| 1834 | Hon. Sir E Ryan | J Prinsep, Ramcomal Sen |
| 1835-37 | Hon. Sir E Ryan | Babu Ramcomal Sen |
| 1838 | Hon. Sir E Ryan | James Prinsep |
| 1839 | Hon. Sir E Ryan | Dr W B O'Shaughnessy, J C C Sutherland |
| 1840-41 | Hon. Sir E Ryan | H W Torrens |
| 1842 | Hon. H T Prinsep | H W Torrens |
| 1843 | Hon. H T Prinsep | Rt. Hon. W W Bird (from 30th March), H W Torrens, W Piddington |
| 1844 | W W Bird, Hon. Sir Hernry Hardinge (from October) | Hon. Sir Henry Hardinge (from October), H W Torrens, W Piddington |
| 1845 | Hon. Sir Henry Hardinge | H W Torrens, W Piddington |
| 1846 | As in 1844 | H W Torrens, Dr W B O'Shanghnessy (appointed in August), Mr J W Laidlay (appointed Co-Secretary in November), Dr Roer as Co-Secy, Oriental Dept. |
| 1847 | As in 1844 | J W Laidlay |
| 1848-50 | Hon. Sir J W Colvile, Kt. | Dr. W B O'Shanghnessy |
| 1851 | Hon. Sir J W Colvile, Kt. | Capt. F C C C Hayes, Dr A Sprenger (Elected in place of Capt. Hayes in May, in consequence of change made in the organisation of the Council, another election was held in June with the following results : |

| | | |
|---|---|---|
| 1852 | Hon. Sir J W Colvile, Kt. | Dr A Sprenger A Grote (Elected Jt. Sec. in April HV Bayley |
| 1853-55 | Hon. Sir J W Colvile, Kt. | A Grote |
| 1856 | Hon. Sir J W Colvile, Kt. | W S Atkinson |
| 1857 | Hon. Sir J W Colvile, Kt. | S S Atkinson, R Mitra |
| 1858 | Hon. Sir J W Colvile, Kt. | W S Atkinson, W B Cowell |
| 1859-62 | A Grote | W S Atkinson, W B Cowell |
| 1863 | Lt. Col. W L Thuillier (resigned in April) W S Atkinson (resigned in August) E C Bayley (elected in September) | E B Cowell (resigned in July), H F Blanford (elected in August) |
| 1864 | E C Bayley | H F Blanford, W L Heeley, H F Blanford W L Helley ( in July on resignation of the two secretaries, R Mitra and Dr J Anderson came in.) |
| 1866 | E C Bayley | H F Blanford |
| 1867 | Dr J Fayrer | H F Blanford |
| 1868 | Dr T Oldham | H F Blanford |
| 1869 | Dr T Oldham | H Blochmann |
| 1870-72 | Hon. J B Phear | H Blochmann |
| 1873 | Dr T Oldham | In April, Col. H Hyde resigned as Secy. Capt. J Waterhouse |
| 1874 | In April, Col. H. Hyde was elected President in place of Dr. T Oldham | Capt. J Waterhouse |
| 1875 | Hon. E C Bayley In April,Dr. Oldham was elected President | In April, Dr. Oldham resigned as he was elected President, Capt. J waterhouse |
| 1876 | Dr T Oldham | Capt. J waterhouse |
| 1877 | Hon. Sir E C Bayley | Capt. J waterhouse |

| | | |
|---|---|---|
| 1878 | W T Blanford | Capt. J waterhouse |
| 1879 | W T Blanford H B Medlicott since December | H B Medlicott succeeded W T Blanford in December Capt. J Waterhouse |
| 1880 | H B Medlicott | J Crawford |
| 1881 | Hon. Sir Ashley Eden | A Pedder |
| 1882 | Hon. Sir Ashley Eden In May, Hon. H J Reynolds succeeded Sir Eden | In May, Hon. H J Reynolds succeeded Sir Eden Dr H W M'Cann |
| 1883 | Hon. J J Reynolds | Dr H W M'Cann |
| 1884 | H F Blanford | L. De Nice'Ville |
| 1885 | Dr. Rajendra Lala Mitra (First Indian President) | J Wood-Mason |
| 1886-87 | E F T Atkinson | J Wood-Mason |
| 1888 | J Waterhouse | J Wood-Mason |
| 1889 | J Waterhouse | Dr A R Hoernle |
| 1890 | F W Beveridge | Dr A R Hoernle |
| 1891-92 | Sir A W Croft | Dr A R Hoernle |
| 1893 | Sir C A Elliott | G A Grierson |
| 1894 | C J Lyall | G A Grierson |
| 1895-96 | A Pedder | G A Grierson |
| 1897 | Dr A F R Hoernle | Dr G Ranking |
| 1898 | Hon'ble H H Risley | Dr G Ranking |
| 1899 | Hon'ble H H Risley | T Bloch |
| 1900-01 | Sir John Woodburn | T Bloch |
| 1902-03 | C W Bolton | J Macfarlane |
| 1904 | C W Bolton | J Macfarlane |
| 1905 | Sir A H L Fraser | J Macfarlane |
| 1906 | Sir A H L Fraser | Lt. Col. D. C. Phillott. |

| | | |
|---|---|---|
| 1907-08 | Justice Asutosh Mukhopadhyay | Lt. Col. D. C. Phillott. |
| 1909 | Sir Thomas Holland | G H Tipper |
| 1910 | T H Diggs La Touche | G H Tipper |
| 1911-12 | G F A Harris | G H Tipper |
| 1913 | Thomas Daird Baron Carmichael | G H Tipper |
| 1914 | Thomas Daird Baron | Major C L Peart |
| 1915-16 | Sir Leonard Rogers | F H Gravely |
| 1917-18 | H H Hayden | F H Gravely |
| 1919-20 | Mm Hara Prasad Sastri | W A K Christie |
| 1921 | Justice Asutosh Mikhopadhyay | A H Harley |
| 1922 | Justice Asutosh Mikhopadhyay | W A K Christie |
| 1923 | N Annandale | J.van Manen |
| 1924-25 | Sir Rajendranath Mookherjee | J.van Manen |
| 1926 | G H Tipper | J.van Manen |
| 1927 | W A K Christie | J.van Manen |
| 1928-29 | Dr. Upendranath Brahmachari | J.van Manen |
| 1930-31 | R BN Seymour Sewell | J.van Manen |
| 1932 | Justice C C Ghose | J.van Manen |
| 1934-35 | L L Fermor | J.van Manen |
| 1936 | Sir John Anderson | J.van Manen |
| 1937 | Sir John Anderson | Dr B S Guha |
| 1938-39 | Sir David Ezra | Dr B S Guha |
| 1940 | Justice John Lort Williams | Dr B S Guha |
| 1941 | Dr C S Fox | Dr S L Hora |
| 1942-44 | Dr Shyamaprasad Mookherjee | Dr Kalidas Nag |
| 1945 | Dr Meghnad Saha | Dr Kalidas Nag |

| | | |
|---|---|---|
| 1946 | Justice N G A Edgley | Dr Kalidas Nag |
| 1947 | Dr B C Law | Dr K N Bagchi |
| 1948 | Dr D West, Justice Ramaprasad Mookherjee | Dr K N Bagchi |
| 1949-50 | Justice Ramaprasad Mookherjee | Dr Niharranjan Ray |
| 1951-53 | Prof S K Mitra, F R S | Prof J M Sen |
| 1953-55 | Prof S K Chatterji | Prof J M Sen |
| 1955-57 | Dr D M Bose | Dr M L Roychaudhury |
| 1957-59 | Dr S N Sen | Dr J N Banerjea |
| 1959-61 | Dr N Dutta | Dr J N Banerjea |
| 1961-62 | Dr A C Ukil | Prof S K Saraswati |
| 1963 | Dr U N Ghoshal | Dr P C Gupta |
| 1964-65 | Dr K N Bagchi | Dr P C Gupta |
| 1966 | Prof R C Majumdar | Prof C Chakraborti |
| 1967 | Prof R C Majumdar | Dr S K Mitra |
| 1968-69 | Prof S N Bose | Dr S K Mitra |
| 1970-71 | Prof S K Chatterji | Prof B N Mukherjee |
| 1972 | Prof N K Bose (upto October), M M Basu (upto December), Dr B Mukhberjee (Dec. "72-Jan '73) | Dr S K Mitra |
| 1973-74 | Dr B Mukherji | Dr S K Mitra |
| 1975 | Prof . K Saraswati | Sri D K Mitra |
| 1976 | Prof . K Saraswati | Dr B Banerjee |
| 1977-78 | Dr Gouri Nath Sastri | Prof Dilip Coomer Ghose |
| 1979 | Dr D Bose | Prof J N Rudra, Dr Amalendu De from 14/11/79 |
| 1980 | Dr D Bose | Dr Amalendu De |

| | | |
|---|---|---|
| 1981-82 | P C Gupta | Dr Amalendu De |
| 1983 | S N Sen, Dr R K Pal | Dr Chandan Roychaudhuri |
| 1984 | Dr R K Pal | Dr Chandan Roychaudhuri |
| 1985 | Dr Sukumar Sen | Dr Chandan Roychaudhuri |
| 1986 | Dr Sukumar Sen | Dr Jagannath Chakraborty |
| 1987 | Dr M M Chakraborty | Dr Kalyan Kumar Ganguly |
| 1988-92 | (Administrators appointed by Calcutta High Court) | |
| 1992-96 (No election held) | Dr M M Chakraborty | Dr Chandan Raychaudhuri |
| 1997 | Prof Dilip Kumar Biswas | Prof Amalendun De |
| 1998 | Prof Dilip Kumar Biswas | Prof Anil Kumar Sarkar |
| 1999 | Prof Bhaskar Roychowdhury | Prof Anil Kumar Sarkar |
| 2000 | Prof Bhaskar Roychowdhury | Prof Manabendu Banerji |
| 2001 | Prof Biswanath Banerji | Prof Manabendu Banerji |
| 2002 | Prof Amalendu De | Prof Dilip Coomer Ghose |
| 2003 | Prof Amalendu De | Prof Dilip Coomer Ghose |
| 2004 | Prof Biswanath Banerji | Prof Dilip Coomer Ghose |
| 2005 | Prof Biswanath Banerji | Prof Ramakanta Chakrabarty |
| 2006-10 | Prof Biswanath Banerji | Prof Ramakanta Chakrabarty |
| 2010-12 | Prof Biswanath Banerji (upto Jan, 2012)<br>Prof Pallab Sengupta (Feb, 2012 nwards) | Prof Mihir Kumar Chakrabarti |
| 2013-14 | Prof Pallab Sengupta | Prof Mihir Kumar Chakrabarti(upto 19th Oct, 2013)<br>Prof. Manabendu Banerjee(21st Oct, 2013 onwards) |
| 2014-16 | Prof Ramakanta Chakraborty | Prof. Manabendu Banerjee |


## அட்டவணை : 02


| VOL. | GROUP | PUBLISHED | TRANSLATOR | TITLE AND CONTENTS |
|---|---|---|---|---|
| 1 | Hindu | 1879 | Max Müller | The Upanishads, Part 1 of 2. Chandogya Upanishad. Talavakara (Kena) Upanishad. Aitareya Upanishad. Kausitaki Upanishad. Vajasaneyi (Isa) Upanishad. |
| 2 | Hindu | 1879 | Georg Bühler | The Sacred Laws of the Aryas, vol. 1 of 2. The sacred laws of the Aryas as taught in the school of Apastamba, Gautama, Vâsishtha, and Baudhâyana. pt. I. Apastamba and Gautama. (The Dharma Sutras). |
| 3 | Hindu | 1880 | Julius Jolly | The Institutes of Visnu. |
| 4 | Hindu | 1882 | Kâshinâth Trimbak Telang | The Bhagavadgita With the Sanatsugâtiya and the Anugitâ. |
| 5 | Hindu | 1882 | Julius Eggeling | The Satapatha Brahmana according to the text of the Mâdhyandina school, vol. 1 of 5. |
| 6 | Hindu | 1882 | Georg Bühler | The Sacred Laws of the Aryas, vol. 2 of 2. The sacred laws of the Aryas as taught in the school of Apastamba, Gautama, Vâsishtha, and Baudhâyana. pt. II. Vâsishtha and Baudhâyana. |
| 7 | Hindu | 1884 | Max Müller | The Upanishads, part 2 of 2. Katha Upanishad. Mundaka Upanishad. Taittiriya Upanishad. Brhadaranyaka Upanishad. Svetasvatara Upanishad. Prasña Upanishad. Maitrayani Upanishad. |


| | | | | |
|---|---|---|---|---|
| 8 | Hindu | 1886 | Georg Bühler | The Laws of Manu. Translated, with extracts from seven commentaries. |
| 9 | Hindu | 1885 | Julius Eggeling | The Satapatha Brahmana according to the text of the Mâdhyandina school, vol. 2 of 5, Books III- IV |
| 10 | Hindu | 1886 | Hermann Oldenberg | The Grihya-sutras; rules of Vedic domestic ceremonies. vol. 1 of 2. Sankhyayana-Grihya-sutra. Asvalayana-Grihya-sutra. Paraskara- Grihya-sutra. Khadia-Grihya-sutra. |
| 11 | Hindu | 1892 | Hermann Oldenberg, Max Müller | The Grihya-sutras; rules of Vedic domestic ceremonies. vol. 2 of 2. Gobhila, Hiranyakesin, Apastamba (Olderberg); Yajña Paribhashasutras (Müller). |
| 12 | Hindu | 1891 | Max Müller | Vedic Hymns, vol. 1 of 2. Hymns to the Maruts, Rudra, Vâyu, and Vâta., with a bibliographical list of the more important publications on the Rig-veda. |
| 13 | Hindu | 1889 | Julius Jolly | The Minor Law-Books: Brihaspati. (Part 1 of 1). |
| 14 | Hindu | 1890 | George Thibaut | The Vedanta-Sutras, vol. 1 of 3. Commentary by Sankaracharya, part 1 of 2. Adhyâya I-II (Pâda I- II). |
| 15 | Hindu | 1896 | George Thibaut | The Vedanta-Sutras, vol. 2 of 3, commentary by Sankaracharya, part 1 of 2. Adhyâya II (Pâda III-IV) -IV. |

| | | | | |
|---|---|---|---|---|
| 41 | Hindu | 1894 | Julius Eggeling | The Satapatha Brahmana according to the text of the Mâdhyandina school, vol. 3 of 5. Books V, VI, VII. |
| 42 | Hindu | 1897 | Maurice Bloomfield | Hymns of the Atharvaveda, Together With Extracts From the Ritual Books and the Commentaries. |
| 43 | Hindu | 1897 | Julius Eggeling | The Satapatha Brahmana according to the text of the Mâdhyandina school, vol. 4 of 5, Books VII, IX, X. |
| 44 | Hindu | 1900 | Julius Eggeling | The Satapatha Brahmana according to the text of the Mâdhyandina school, vol. 5 of 5, Books XI, XII, XIII, XIV. |
| 46 | Hindu | 1897 | Hermann Oldenberg | Vedic Hymns, vol. 2 of 2. Hymns to Agni (Mandalas I-V). |
| 48 | Hindu | 1904 | George Thibaut | The Vedanta-Sutras, vol. 3 of 3, with the commentary of Râmânuja. |
| 50 | Index | 1910 | Moriz Winternitz, with a preface by Arthur Anthony Macdonell | General index to the names and subject-matter of the sacred books of the East. |


## நிழற்படங்கள்



படம்: 01



படம்: 02



படம்: 03


படம்: 04


படம்: 05


படம்: 06


படம்: 07


படம்: 08




படம்: 09



படம்: 10



படம்: 11



படம்: 12



படம்: 13




படம்: 14



படம்: 15





படம்: 16




படம்: 17



படம்: 18




படம்: 19



படம்: 20



படம்: 21



படம்: 22



படம்: 23



படம்: 24



படம்: 25



படம்: 26


படம்: 27



படம்: 28



படம்: 29


படம்: 30



படம்: 31


படம்: 32


படம்: 33



படம்: 34



படம்: 35




படம்: 36




படம்: 37



படம்: 38




படம்: 39




படம்: 40



படம்: 41



படம்: 42




படம்: 43




படம்: 44

## வரைபடங்கள



வரைபடம்: 01




வரைபடம்: 02